அரங்கசாமி முதலியார்

மாணவர் இல்லம்

மன்னார்குடி

வெள்ளி விழா மலர் :: 1943

TUn 404

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

கோட்டூர்க்கொடைவள்ளல்

அரங்கசாமி முதலியார்

தோற்றம் : 1850 மறைவு : 1907

கோட்டூர் அரங்கசாமி முதலியார்
மாணவர் இல்லம்
மன்னார்குடி.

வெள்ளி விழா மலர்
(1918—43.)

அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய்
சிறியரை மேம்படச்செய்தால்—பின்பு
தெய்வ மெல்லோரையும் வாழ்த்தும்.

—*பாரதியார்.*

பொருளடக்கம்.

பக்கம்

1. அரங்கசாமி முதலியார் படம்
(இல்லம் நிறுவிய வள்ளல்)
2. அறங்காப்பாளர் படம்.
3. மாணவர் உறையுள் படம்.
4. வெள்ளி விழா வாழ்த்துப்பாக்கள். ... (i)
5. வெள்ளி விழா வாழ்த்துச் செய்திகள். ... (ix)
6. அரங்கசாமி முதலியார் வாழ்க்கை வரலாறு
வெ. கோபாலசாமி. ... 1
7. வெள்ளி விழா அறிக்கை
இல்லத் தலைவர். ... 7
8. மாணவரும் கடவுள் வழிபாடும்
அருட்டிரு, சுவாமி விபுலாநந்தர், B. Sc. (London) 21
9. கோடை மலர்
ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L. ... 25
10. சங்க இலக்கியமும், ஆழ்வார்களும்
ரா. ஸ்ரீ. தேசிகன், M.A. ... 27
11. வையகமும் வள்ளலும்
வித்துவான், சடகோப ராமானுஜப் பிள்ளை. ... 34
12. சேக்கிழாரும் கல்வெட்டுகளும்
வித்துவான், மா. இராசமாணிக்கம் பிள்ளை B.O.L. 37
13. மக்கள் ஒழுக்கம்
பு. சி. புன்னைவனநாத முதலியார். ... 42
14. நகைச்சுவை
ஜி. சுப்பிரமணியப் பிள்ளை, M.A., B.L. ... 47
15. கயவர் யார்?
மு. வரதராசனார், B.O.L. ... 51
16. மார்க்கு கொடுக்கும் விதம்
டி. கே. சிதம்பரநாத முதலியார், B.A., B.L. ... 56
17. உயர்வு உள்ளல்
ச. கந்தசாமி முதலியார். ... 60
18. கல்வி அறம்
சிவசங்கர முதலியார். ... 63

19. மாணவர் இல்லத்தின் மாண்பு
பண்டிதை, S. கிருஷ்ணவேணி அம்மாள். ... 65
20. ஓர் அந்திப்பொழுது
ரா. ஸ்ரீ. M. A. ... 69
21. அண்ணல் அரங்கர் அருள் நிழலில் எங்கள் வாழ்க்கை
மாணவன், ப. சுப்பராயன். ... 71
22. **Memories of my Hostel.**
T. Thoppaiya Mudaliar, B.A., L.T. ... 75
23. **Recollections.**
P. Chokkalingam, B. A. ... 78
24. **The Greatness of Tamil.**
P. Srinivasalu Naidu, M. A. ... 81
25. வெள்ளிவிழாக் கொண்டாட்ட வரலாறு. 86
26. பரிசுப்பட்டி. 88
27. நன்கொடை விபரம். 90
28. பழைய மாணவர்கள் பட்டி. 91

அறநிலையக் காப்பாளர்



கோ. பாலகிருஷ்ண முதலியார்

உ

கோட்டூர்

அரங்கசாமி முதலியார் மாணவரில்லத்து

வெள்ளி விழா வாழ்த்துப்பாக்கள்.

வாழ்த்து.

1 காவிரிநன் னீரின்வளங் கஞலியதண் சோணாட்டுப்
பூவிரியு மதுப்பொழில்கள் பொதுளியபொற் கோட்டூரிற்
பாவிரிதொல் புகழாளர் பகர்வேளாண் முதலிகளுள்
நாவிரியுங் கவிவாணர் நலம்பரவ விவணுதித்தோன்.

2 துகளறுத்த வொழுக்கநெறி துளங்காது போற்றியவன்
நிகழ்வுறுத்த செல்வமெலா நிலையாமை யெண்ணியவன்
இகழ்வுறுத்த காமமுத லிருங்குற்றந் தணந்துயர்ந்தோன்
புகழ்வுறுத்த பரம்பொருளின் பொன்னடிப்போ துளநினைவோன்.

3 பாகவத ரடிக்கன்பு பண்ணியவன் புண்ணியவான்
மோகவதர் நடவாது முனிவனென வொழுகியவன்
ஆகவதர்க் கம்பலவு மகற்றியவன் திடசித்தன்
சோகவதம் கடிந்துணவின் றூய்மையினன் வாய்மையினன்.

4 தென்னரங்க மேயபிரான் றிருவடிக்கே யாளாகு
மன்னரங்க சாமியென வழுத்துபெய ரோன்றீயர்
துன்னரங்க மருவாத தூநெறியே கடைப்பிடித்தோன்
முன்னரங்க மங்கியிவை முழுதுணரும் பேரறிஞன்.

5 அன்னவன்ற னுடைமையெலா மறத்திற்கே யாக்கியவன்
என்னவரும் வியப்பெய்த விசைபடைத்தா னவன்பின்னோன்
தன்னிணையொன் றில்லாத சடகோபன் மதிவாணன்
இன்னவறங் காத்திதனை யினிதிருத்தி நனிவளர்த்தான்.

6 மூதாதை வளர்த்தவற முழுதுநனி காப்பலெனக்
கோதாது மில்லாது குறிக்கொண்டு மேற்கொண்டு
மீதாக வளம்பெருக்கி வியன்பால கிருஷ்ணமுகில்
ஆதார மிறைவனென வகத்தெண்ணி யினிதளிப்பான்.

7 அவனளிக்கு மறவகையு ளணிபாட சாலையொடு
சுவமளிக்கு மறச்சாலை துலங்குநல நூனிலயம்
தவமளிக்குங் கலைமன்றந் தங்குதெய்வப் படிப்புறங்கள்
நவமளிக்கு மினத்திளையர் நனியுயரு மில்லமிகும்.

8 மன்னைச்செண் டலங்காரர் வளரருளா லுயரரங்கள்
பின்னைப்பே ரூழியினும் பிறங்குமியல் புடையவிவை
நன்னர்ச்சீ ரிசைபெருக நலவையைத் தாண்டுகண்டு
பன்னர்க்காம் வெள்ளிவிழாப் படைத்தபெருஞ் சிறப்பினவால்.

9 வெள்ளிவிழாப் படைத்துள்ள மேன்மையினு மிகப்பெருகி
எள்ளிவிழாப் பொன்னின்விழா வெழில் வயிர விழாவென்னப்
புள்ளிவிழாப் பலகண்டு புகழ்பரப்பி வாழ்கவென
உள்ளிவிழாப் பகவனடி யுளநினைந்து வாழ்த்துதுமே.

10 ஒப்பில்லாத் தனிவள்ள லுயர ரங்கசாமிபுகழ்
எய்ப்பில்லா தெஞ்ஞான்று மிருநிலத்து வாழியரோ
தப்பில்லாக் கொடையாண்மை சார்பால கிருஷ்ணமுகில்
பொய்ப்பில்லாப் புகழறங்கள் புரந்தினிது வாழியவே.

சேது சமஸ்தான மகாவித்துவான், பாஷாகவிசேகர,
—ரா. இராகவையங்கார் அவர்கள்.

1 பள்ளிவிழை தங்குலத்து மாணவர்கள் படிப்பதற்கு வசதி யின்றிப்
பரிதவிக்கும் நிலைகண்டு மனமுருகிப் பலவிதத்து மேலிஃ தென்றே
யுள்ளிவிழை வோடுரிய பொருளனைத்து முலகேத்த வன்னார்க் காக
வுதவியகோட் டேரங்க சாமிப்பே ரொருவள்ளல் கீர்த்தி யோங்க
வள்ளிவிழை வோடுற்ற பரிசிலருக் களவின்றி யீந்த நேய
னன்றுவிதை யறப்பயிர்தான் செழித்தோங்கி யரியபல னென்று மீயும்
வெள்ளிவிழாக் கொண்டாட வந்திடுமின் விருப்பமுட னின்பம் பூண்டு
விழைமனம்போல் மாங்கலிய மேவுமெனும் விலையில்சான் றிட்டார்க்
கின்றே.

2 எண்ணரிய வறத்தாலுந் தேடரிய விரும்பலனை யெழுத்தே ழைகட்
கேற்றுவிக்கு மவ்வறத்தா லீட்டலென விதயத்தே வைத்த வள்ளல்
மண்ணனைத்தும் புகழ்பரப்பும் வாழ்வதனின் மகிழ்வுறுமோ லாசை மேலே
வழிந்தோட மற்றிடத்தும் பரப்பவென மனங்கொண்டோ வேறென்
னேயோ
விண்ணகத்துஞ் சென்றடைந்தா னிரவலர்க்கு மேகமெனப் பெய்யுங்
கோட்டூர்
மேவரங்க சாமியெனும் வேளவனே விழைந்தளித்த விடுதி யின்று
நண்ணியதாற் பெரும்பேறு நானிலத்து நல்லோரும் பொல்லோர்தாமும்
நாவாற வேத்துமுறை வெள்ளிவிழா நயந்தாற்ற நாடு வீரே.

—அ. கு. சீனிவாச ஐயங்கார்,
தமிழாசிரியர், பிவின்லே உயர்நிலைப்பள்ளி.

1 பாட்டார்ந்த பலவளஞ்சால் பண்பொன்ற நலம்பயக்கும் பகரு மின்பக்
கோட்டூர்வேள் அரங்கசா மிப்பெயரோன் கொடைவள்ளல் குமண
னன்னன்
வேட்டீண்டுப் பலபுகழை வீறுறவே நாட்டினன்காண் வென்றியொன்ற
நாட்டிற்கா வவனுட்டும் நன்னிலைய வெள்ளிவிழா நன்று வாழி!

2 வண்மையர்கோன் தொண்டைமான் வண்புகழார் பெருநாட்டில்
வாழ்ந்தோராய
திண்டிறலார் முதன்மையார் திகழ்குடியின் புகழ்பரவித் திசையி யம்ப
மண்டுபுகழ் உயர்நலத்தன் வளரரங்க சாமியவன் வண்மை யாலே
தண்டமிழார் நிலமக்கள் பெற்றநலன் இவையென்னச் சாற்ற லர்மோ?

3 முன்னுளிந் நிலப்பரப்பில் முன்னூறு வேலிநிலன் முனைப்பொன்
றின்றித்
தன்னூர்ந்த பொருளென்னு தெவரறந்தான் தழைக்கவெனத் தகுதி
யோங்க
மன்னூர்ந்த வாறிலக்கம் வெண்பொனுடன் வழங்கியவர்? வள்ள லாய
மன்னெனங்க ளரங்கசா மிப்பெயரோன் வழங்கினன்காண்! வண்மை வாழி!

4 இத்தகைய பெருவள்ள லெம்மரங்க சாமியவ னிதய மென்ன
இத்தலத்தி லெழுந்தவொரு மாணவரார் விடுதியினுல் எளிமை யார்ந்தோர்
கைத்தலத்துப் பொருளில்லாக் கவலையொழித் துயர்கல்விக் கற்று
நன்றே
எத்திக்கும் அலுவல்பொருள் பெற்றுவப்ப ரெனினிதன்சீ ரியம்பற்
பாற்றே.

5 சாத்திரத்திற் கொருபள்ளிச் சார்வேத பள்ளிநலன் சாற்ற மேலோர்
எத்துமொரு பேரவையும் இப்புவியோர் போற்றவிவ ணினிதிற் கண்டு
பாத்துணவே தமிழ்நாட்டீர் படித்திடுமி னெனுமெங்கள் பண்பன் சீர்
போல்
எத்தவளர் நிலையந்தான் இன்வெள்ளி விழாவணிந்து இனிது வாழி!

6 கல்வியினை வளர்த்திடுவான் கருதியொரு நூல்நிலையங் கவின நாட்டிப்
பல்லவரும் நூல்கற்றுப் பயன்பெறவே வகைசெய்த பண்பும் ஈண்டு
நல்குரவாற் றளர்வுறுவார் நலிவகற்றப் பொருளளிக்கும் நயனும், நங்கள்
செல்வனவன் சீர்த்தியினுற் சிறந்தவிவண் வெள்ளிவிழா சிறக்க நன்றே!

—கோ. சி. பெரியசாமிப் புலவர்,
ஆசிரியர், புலவர் கல்லூரி, கரந்தை.

நேரிசை யாசிரியப்பா.

உலகுக் கொளியை யுதவ வந்து
பலரும் புகழப் பகலை வகுத்து
வெண்கதிர் பரப்பி வெப்பந் தந்து
மண்ணுறு வெப்பம் மடிக்க வேண்டிக்
கார்கடல் நீரைக் ககன மாக்கிப்
பார்படச் செய்து பன்னலம் புரிந்து

குடக்குக் குன்றிற் குதிக்கும் ஞாயிறு
மடிந்தனன் கொல்லோ மறைந்தனன் கொல்லோ
இரவின் இருளை யிரியச் செய்தே
அரவுங் காவும அறியச் செய்து
சிறுவர் கண்டு சிரிக்கச் செய்து
தலைவியர் தமக்குத் தண்முக மாகிக்
கலைஞர் தமக்குக் கலையு மாகி
வெப்பத் தரையைத் தட்ப மாக்கிச்
செப்ப நிலையிற் சிறக்குந் திங்கள்
மடிந்தது கொல்லோ மறைந்தது கொல்லோ
பொருள்பல வீட்டிப் பொன்போற் புதைத்தே
யிருள்கடி கல்வி யினத்தார் பெறவும்
கல்வி கற்றோர் கவலை யின்றிச்
செல்வ வுணவுஞ் சேக்கையும் பெறவும்
மறையவர் மக்கள் மறைமதி பெறவும்
நறைமிகு மலர்கள் நாரணன் பெறவும்
மன்னை நகர்வாழ் மக்க ளெல்லாம்
தொன்னூல் நன்னூல் துணிபு பெறவும்
பொருளை விதைத்துப் புகழை விளைத்த
அருள்மிகு வள்ளல் அரங்கர்
மடிந்தனர் கொல்லோ! மறைந்தனர் கொல்லோ!

—வே. சா. மாசிலாமணி, பி.ஏ.,
ஆசிரியர், பிவின்லே உயர்நிலைப்பள்ளி.

நேரிசை வெண்பா.

1 மண்டிணிந்த ஞாலத்து மாட்சியுடன் வாழ்வோரில்
உண்டிகொடுத் தோரே உயிர்கொடுத்தோர் — பண்டையராம்
தொண்டை முதலிகளே தோன்றுவித்தார் வள்ளன்மை
கண்டுவிட்டார் கோட்டுரெங் கோ.

2 மன்னர் குடியதனில் மாணவர்க்குத் தான்விடுதி
கன்னுபின் னுவெனவே செய்துவைத்தார் — சொன்னேன்கேள்
மூன்றுதமிழ் வேந்தர்க்கும் மூத்த குடிப்பிறந்தார்
ஈன்றசம் பத்தெனவே தான்.

வேறு விருத்தம்.

3 வையகமும் வண்தமிழும் வாழமறை வாழ்க
பொய்யகலப் புன்மையிருள் போகவறி வோங்க
மெய்யெனவே மன்னர்குடி மாணவரும் வாழ்க
செய்யும்வகை செய்துவரும் சான்றவரும் வாழ்க!

சேலம் — முத்துநமசிவாயம்.

க. இருள்கவிந்த பொழுதினிலே முகில்கிழித்துக் கிளம்பும்
எழில்மதிபோல் மடமையிருள் இரிந்தோட ஆங்கே
கருணைகனிந் திளைஞரெலாம் கல்விநலம் பெறவே
கண்டனன்ஓர் இல்லமதாற் கனமகிழ்வே கொண்டான்
திருமிகுநன் முதன்மையர்தம் குலமணியே யாவான்
செம்மைமனப் பெரியோர்தம் சிந்தையினில் வாழ்வான்
அருளுணர்வோ டறப்பணிகள் பலவகுத்தான் அமைவாய்
ஆரிவன்போல் அவனியிலே சீர்படைத்தார் மன்னே.

உ. பொருள்நிறைந்தும் அறஞ்சிறிதும் புரியாதே வாழும்
புலமுடையார் பலர்மலிந்த பொழுதினிலே தோன்றி,
அருள்வடிவத் திறைவனருள் நிதியனைத்தும் அவன்றன்
அளித்தருளும் உயிர்களுக்கே ஆகுமெனுங் கருத்தைப்
பெருமகிழ்விற் றனக்குரிய பெரும்பொருள்க ளனைத்தும்
பிறர்க்காக்கி யறம்புரிந்து விளக்கமுறத் தெரித்தான்
மருவுமுயர் குணத்தரங்க சாமியெனும் பெயரோன்,
மற்றவன்றன் புகழ்உலகம் உளவரையும் வாழி.

ங. எழுதரிய மறைபயில்வோர்க் கிடம்வகுத்தான், இனிதாம்
இலக்கியமும் தழைத்தோங்கத் தனிக்கழகம் வகுத்தான்
தொழுதகைமைப் பலமொழிதேர் துறைப்புலவர் ஈந்த
தொன்னூல்கள் பலதொகுத்தே அவற்றினுறு பொருளைப்
பழுதகல மனிதரெலாம் முறைபயின்று சுவைத்தே
பாரினிலே சிறந்தோங்கிப் பலநலமும் பெறவே
விழுமியதோர் நூல்நிலயம் மிகப்பரிவோ டளித்தான்
வேறிவன்போல் யாவருளார் மேன்மைகொளற் குரியார்.

ச. இனையபுகழ்த் திருவுடையான் இளைஞர்கள்தம் கல்விக்
கெனவமைத்த இல்லமுயர் பணிகளெல்லாம் ஆற்றி
மனமுவக்க வெள்ளிவிழா மணமிசைந்தே நாளும்
மாநிலத்தே அருள்வளர்க்கும் மனையெனவே, இன்மைப்
பிணியகற்றி யறிவெனும்நற் பேரொளியே வீசிப்
பெரியோர்தம் புகழுரையும் வாழ்த்துரையும் பெற்றே
தனிசிறந்து நலமுயர்ந்து விழாப்பலகொண் டாடி
ஞாலமெலாம் நயந்துரைக்க வாழ்ந்திடுக மாதோ!

—கோவை குஞ்சிதபாதம்,
நூல்நிலயக் காப்பாளன்,
கோ. அ. மு. நூல் நிலயம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

1 செல்வமிகு கோட்டூரம் திருவரங்க சாமிசெய்த சீர்த்தி வாய்ந்த
பல்வளஞ்சேர் கலையுணரப் பாலகர்க்குப் பல்வகையில் பசிநோய் நீங்க
நல்வளஞ்சே ருணவளிக்கு மறநிலயம் நாட்டியிக்கு நன்மை யோங்க
நெல்வளஞ்சேர் மன்னார்குடி யெனுநகரில் நிலைபெறவே நிறுத்தினுரே

2 சான்றோர்கள் மிகுத்துள்ள தொண்டை நாட்டிடை வந்த சற்குலத்தோர்
ஆன்றோராம் நமதுகுலம் தொண்டைமண் டலமென்று அகிலம் போற்றும்
வான்தோயும் புகழ்கொண்ட அரங்கசாமிக் கொருசேய் இல்லென்றாலும்
கான்தோயும் இந்நிலயம் கற்றோரெல்லாம் சேயாக் கருதலாமே

3 இந்நிலயந் தன்னினுக்கே உதவிசெயும் யாவர்களும் ஒங்கி வாழ்க
இந்நிலயம் பொன்னிவிழா வைரவிழா வினைப்பெற்று ஓங்கி வாழ்க
இந்நிலயம் மற்றவர்க்கு வழிகாட்டிப் பல்லூழி இசைந்து வாழ்க
இந்நிலயம் சார்ந்துகற்ற எண்ணிலா மாணவரும் என்றும் வாழ்க.

—ஜீவரத்தினம்.

வள்ளலை மாணவர் வேண்டல்.

அறிவென்னும் ஒளிதன்னை உலகிற்கு நல்கவே
அயரா துழைக்கும் உன்றன்

அருள்மலியும் இல்லத்து நுழைவுபெறல் வேண்டுமங்
கமைகின்ற விதிகளுக்கே

சிறுபிழையு மில்லாது வாழ்வதற் குன்னருள்
சித்திக்கவேண்டும், அன்பே

திகழ்மனத் தாசிரியர் பெற்றோ ருவக்கவே
சீர்தருங் கல்வி யதனைத்

திறமொன்ற வேபயின் றென்னாளும் நன்னடை
திறம்பாது நிற்க வேண்டும்

தித்திக்கும் உன்நன்றி மறவாமை வேண்டும், உன்
சீர்தினம் பாவ வேண்டும்

அறநெறியி னுலகினுக் களவில்பணி புரியவே
ஆயுளும் நலமும் வேண்டும்

ஐய, நின் ஆசியொடும் உயர்வுதரு வாயெங்கள்
அன்புயர் அரங்க மணியே.

—அரிச.

வெள்ளி விழாக் கும்மி.

1 வாருங்கள் தோழர்க ளேயின்று நாமெலாம்
மகிழ்ச்சியுடனே கூடிடுவோம்
சீர்மிகும் வெள்ளிவிழாவினைக் கொண்டாடிச்
செம்மல் அரங்கரைப் போற்றிடுவோம்.

2 அன்புநிறைந்த தமிழ்நாடு தனில்
ஆயிரம் நல்லவர் உண்டெனினும்
அன்பொடும் நல்லறம் அரங்கர் போலவே
ஆர் புரிந்தாரெனப் போற்றிடுவோம்.

3 சத்திரம் கோவில்கள் சாவடி என்றிவை
சாலவும் செய்தவர் எண்ணில்பலர்
இத்திறம் கல்வி தழைத்திடச்செய்தவர்
இவர்போல் யாருளர் என்று சொல்வோம்.

4 வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் அவள்
வேண்டிய வித்தைகள் தந்திடுவாள்
விள்ளும் அவளருள் தன்குல மைந்தர்கள்
மேவிட நல்லறம் செய்து (உ)வந்தார்.

5 செல்வர் வியப்புடன் நோக்கிடவே இன்பம்
செய்திடும் நல்வழி தர்மமென்றே
இல்லம் முதற்பல நல்லறம் நாடியே
இன்பம் விளைவித்தார் இப்புவியில்.

6 கற்றவர் உள்ளங்கள் தந்தபல் நூற்பொருள்
மற்றவர் யாவரும் கண்டுலகில்
கற்றவர் ஆகவோர் நூல்நிலையம் அன்பால்
கண்டவர் நாளைக்கொண் டாடிடுவோம்.

7 பச்சையினாற்செய்த மேடையின்மேல் ஒளிப்
பசும்பொன்னாலமை கோவிலைப்போல்
இச்சையினால் நமக் கில்லம் நிறுவிய
இன்றவச் செல்வரை எத்திடுவோம்.

8 உள்ளம் விரிந்திடக் கல்வியுடன் புகழ்
உத்தம நன்னடை பெற்றிடுவோம்
வள்ளல் அரங்கரைப் போற்றி செய்வோம் அவர்
வாழ்த்துரையோடருள் வாய்த்திடுவோம்.

9 பாவலர் நாவலர் போற்றிடுவார் இந்தப்
பாரினில் மாந்தர்கள் போற்றிடுவார்
யாவரும் இன்புற அரங்கர் தன் பொருள்
யாவையும் தந்தாரென் றார்த்திடுவோம்.

—ஓர் அன்பன்.

வள்ளலுக்கு மாணவர் சூட்டும்

வணக்க மலர்.

ஐயனே,

இவ்வில்லமெங்கும் உமது அருள் ஒளி வீசுகின்றது. அன்பு ஒழுகும் உமது கருணைக்கண்கள் என்றும் எம்மையே ஆசை கூர நோக்குகின்றன. எமது முதல் தந்தையும், தாயும் நீரே ஆவீர்! இளைஞர்களாகிய நாங்கள் உமது அருள் ஒளியில் ஒன்றுபட்டு, அன்புடன் வாழ அருள்புரிவீராக! உமது அற வழியிலே நாங்கள் அச்சமும், அயர்வும் கொள்ளாது வழிநடந்து, படிப்படியாக உயர்வு தரும் பரீட்சைப் போர்களிலே வெற்றிகொண்டு, அதன்பயனை நாமகளின் அருளோடு, நலம் பலவும் வாய்ந்து இன்புற அருள்புரிவீராக!

அறநெறிச் செல்வரே!

எங்களது கல்வி, அறிவு, ஆற்றல், எண்ணம், சொல், செயல் ஆகிய எல்லாவற்றிலும் உமது அறவொளி வீசுவதாக! இவ்வுடலை உமக்குகந்த கோயிலெனக்கொண்டு, எப்போதும் நாங்கள் அகத்தூய்மையுடன் அருட்பணி புரிந்து வாழத் துணைசெய்வீராக! மனிதன் தன் நலத்திற்குமட்டுமென்றே படைக்கப்பெறவில்லை, பிறர் நலம் பேணுவதே அவனது முதற் கடமையாகும். அதற்கு நீரே தக்க சான்றுவீர். எனவே; உலகினர்க்கு உதவும் உயர்ந்த நினைவுகளிலே உள்ளம் படிந்து தொண்டாற்ற எங்களை ஊக்குவீராக! அரசரெலாம் அடிபணிய, அவனியெலாம் ஆணை செல அரசாண்ட மன்னரும், அவர்தம் அளப்பரும் செல்வங்களும் ஒருநாள் அழிந்தே போகின்றன; ஆனால் அறம் ஒன்று மட்டுமே என்றும் நிலைத்து நிற்பது, "அறத்தால் வருவதே இன்பம்" என்ற உயர்ந்த தத்துவங்களை உலகுக்குக் காட்டிய உத்தம! உமது புகழ் உலகமெலாம் ஒளிசெய்வதாகுக! உமது உள்ளத்திலே ஒருநாள் துள்ளியெழுந்த அறவுணர்ச்சியே இன்று, இந்த, இவ்வளவுபெரிய இல்லமாக வடிவம் பெற்றுள்ளது. இதனை இவ்வுலகம் நன்கறியட்டும்! அறிந்து அதுவும் அவ்வழியிலேயே செல்ல முயலுவதாக!

அருங்கலைபயின்ற அந்தண!

இவ்வில்லத்திலே நாங்கள் இணையிலா மகிழ்ச்சியுடன் இன்புற வாழுகின்றோம். உமது அருள் எங்களுடையது, எமது அன்பெல்லாம் உம்முடையதாகும். அன்பு மலர் தூவிப் பரவும் எமது எளிய வணக்கத்தை, எந்தையே நீர் ஏற்பீராக!

வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

அறம் பெருக, அன்பு பரவ, அவனி மகிழுக!!

FELICITATIONS.

S. VASUDEVACHARIYAR, B.A., *Manager*, *Sri Ramakrishna Mission Schools*,

Tyagarayanagar, MADRAS.

It is with a feeling of pardonable pride that I welcome this opportunity afforded to me by Sri G. Balakrishna Mudaliar to express my felicitations on this occasion as it enables me to pay my tribute to the memory of the late Sriman Kottur Rangaswami Mudaliar, between whose family and mine there have been close association and comradeship for several generations– Sriman Rangaswami Mudaliar came of a well known aristocratic family in Tanjore District. During my early days, I had the privilege of his acquaintance and can well recall his orthodox appearance, his religious disposition and the earnestness with which he underwent regular course of kalakshepam under the distinguished Vidwans of the day. This intense religious outlook of life perhaps furnished the background for the tremendous sacrifice which he made later in life in dedicating his enormous wealth for charitable purposes. At a period when endowments for promotion of education had not received legitimate recognition, Sriman Mudaliar with commendable farsightedness sought to prevent the dissipation of his estate by creating a perpetual trust for the dissemination of learning and culture and has thus earned imperishable gratitude of succeeding generations. Patron of oriental scholarship that he was, he eschewed all sectarian discriminations in the distribution of of his gifts. The establishment of this hostel, the annual Vidvat Sadas during the Brahmotsavam of Sri Rajagopalaswami, the running of a Sanskrit Pathasala and Veda Pathasala bear ample testimony to his catholicity of outlook.

Speaking from my long experience of a number of institutions with which I am associated, I can assert without fear of contradiction that provision for the education of destitute and orphan boys is sadly inadequate. The pathetic rejection yearly for want of accommodation of a number of deserving cases in the Ramakrishna Mission Students' Home, in the Sri C. K. Devasthanam hostel (in whose managing Committee I serve) and in other institutions of this kind clearly points to the need for several such institutions in our presidency. In this connection it may be said that the advantages which an endowed institution possesses over one run on periodical public donations are patent. The one is threatened in most cases with a precarious

existence depending solely on discriminating charity, whereas the other starts from its inception with a feeling of stability and self confidence.

From this point of view this hostel whose Silver Jubilee we are celebrating now, possesses that initial advantage and caters to a definite want in our society. I heartily congratulate the management on having successfully piloted it during these 25 years. Sriman G. Balakrishna Mudaliar is an illustrious scion of that noble family and has already demonstrated during his short period of management, his tact, ability and deep insight into details. It is our sincere prayer that under his able guidance this hostel as well as the other institutions under the trust may grow from strength to strength and celebrate several similar auspicious occasions.

Rev. J. SANKEY, B.A.,B.SC.
Principal.

Findlay High School,
MANNARGUDI.

On the Silver Jubilee of the Hostel I send my heartiest congratulations and good wishes to the Management of the Hostel, to yourself and to the boys.

It was a happy inspiration which led your Founder to lay the foundations of the Hostel such as yours. The boys, who are admitted, have offered to them a unique experience– an experience which may well be as valuable to them in after life as anything which they learn in the Class-room. It is the constant contact and fellowship with other boys which moulds a boy's thought and character in such a way that he can readily take his place in the world of men. Much in the way of true education may be gained in the casual conversation and the sharing of interests of one boy with another. For in that way a boy's intellectual powers are developed far more than cramming from text-books. Again, in giving the charge of Juniors to Senior boys, the latter learn the true way of self-discipline, for they discover that it is only as they discipline themselves that they can discipline others, while the former learn that in any ordered society obedience is one of the first requirements.

The point of Home-training over against Hostel-training may be argued. Under more ideal circumstances the Home is the natural and therefore the best place for the training of growing boys; but under economic conditions which prevail today there are many homes where a boy cannot enjoy facilities for study equal to those of the Hostel. In fact, but for the Hostel many of its boys would be denied the opportunity of Secondary

Education. The routine and the discipline of the Hostel leads to a much more disciplined and well-regulated life. Although I have only been able to observe Hostel boys for two years. I have noticed that these factors tell very greatly on a boy's progress in School work. The Hostel during my time has given to Findlay some of our most outstanding boys. This and the ready way in which Hostel boys enter into the discipline of the School makes us ever ready and glad to receive them. No better tribute could I pay to the Hostel than that.

May your celebration be a very happy time.

Dr. A. CHIDAMBARANATHA CHETTIAR, M.A.,Ph.D.,
Senior Lecturer in Tamil and Member of the Syndicate,
ANNAMALAI UNIVERSITY, ANNAMALAINAGAR.

Let me offer my best wishes to the inmates of the Kottur Rangaswami Mudaliar Estate Hostel as well as to the Board of Trustees on the occasion of the Silver Jubilee Celebrations of the Hostel. The Hostel has satisfied a great need in that part of the country and has served well the Mudaliar community from which the Founder himself hailed. Love of one's own community is not to be disparaged, for it is surely better than neglect of one's own community. When it is remembered that Mr. Rangaswami Mudaliar's Charities are distributed over a wide range without hate to any community and that the Hostel alone is designed to give encouragement to the youths of his community, one will whole heartedly appreciate the spirit of the Founder and wish all prosperity and success to the institution.

The Hostel has been run on quite efficient lines. There are for the inmates spacious rooms which are always kept tidy. The environment is handsome and the food supplied is wholesome. By taking part in games, by organising lectures and debates, by cultivating the kitchen-garden and by considering the cases of breach of discipline, the inmates widen their outlook, cultivate the art of speaking, learn the lesson of self-reliance and try to train their faculty of reason.

The Warden, Mr. Gopalaswami Mudaliar, an alumnus of the Annamalai University, deserves congratulations on the very efficient and successful way in which he has been managing the Hostel. The successors-in-interest to the Estate of Kottur Rangaswami Mudaliar and especially Mr. G. Balakrishna Mudaliar, the Managing Trustee deserve to be thanked by the public for their abiding interest in the Hostel and for their additional benefactions from time to time for improving it.

It is but fitting that Mr. M. Rutnaswami who has intimate knowledge of the life that is lived in the Hostels of our country and in the Halls of Residence in the west and who at present is the presiding officer of one of the greatest residential Universities in India should preside at the celebrations connected with the Silver Jubilee of your Hostel.

Let the Hostel ever fulfil the wish of the Founder and be a source of great encouragement to the Mudaliar youths!

J. AMALADASON B.A., L.T.,
Principal,
Methodist Mission High School,
NEGAPATAM.

I hasten to offer my hearty congratulations to the K. R. M. Hostel on its Silver Jubilee Celebrations and I give my best of wishes for a great and prosperous future.

An institution is a living organism and it grows without our knowing it. The K. R. M. Hostel, I remember, made its humble beginnings in a private house with a few inmates in the Fourth Street. From there it moved on to the Third Street till it found itself in its present congenial situation. The spacious new building in an extensive compound on the outskirts of the the Town, with all the facilities for gardening, games and outdoor activities made a big difference to the life of the Hostel. The appointment of a keen, young, well-educated, and full-time Warden happily synchronised with the new start given and it has ever since made a splendid progress in all directions. The facilities afforded for the attainment of "Mens Sana in Corpore Sano" are ample and many a poor Mudaliar boy who would have otherwise had no schooling is enjoying the blessings of education under proper care and supervision. On the twenty-fifth anniversary of this Hostel we should be specially thankful to Him who is the Giver of all good gifts and think with deep gratitude its Founder for his large-hearted and noble act of charity. We should also be thankful to those who helped in the past as Managing Trustees and Wardens and also to its present incumbents, the sympathetic and liberal-minded Managing Trustee Mr. Balakrishna Mudaliar and the Warden Mr. Gopalasami Mudaliar to whose drive and enthusiasm the Hostel owes so much.

As an important mile-stone is passed, one looks both backwards and forwards. A review of its history during the past quarter of a century will be an interesting account, but I leave

it to be done by others who have a fuller knowledge of facts. Something of the future can be discerned from the past and I can confidently say that the K. R. M. Hostel will grow from strength to strength and I can well imagine what it will be when it celebrates its Diamond Jubilee.

In this connection I beg leave to place before the Management one or two suggestions. First more of character-building activities could be introduced and it would be worthwhile exploring the possibilities of giving the inmates instruction in Music and Handicraft. Secondly, it would promote better the "Esprit de Corps" and the sense of corporate responsibility if the inmates all attend one school. This will also make the administration easier and less complicated.

In conclusion, while I once again offer my warm felicitations and good wishes to the Hostel, I appeal to the inmates to make capital out of the opportunities which they get there and build rich traditions which can be left as a proud legacy to the succeeding generation of students. Remember also the words of Newbolt.

"...The school and you are one,
And what you are, the race shall be".

P. SRINIVASALU NAIDU M.A. Phd. *Allahabad University,* ALLAHABAD.

I am very happy to learn that you are celebrating the Silver Jubilee of the foundation of the K. R. M. E. Hostel. Twenty five years have passed since the foundation of your hostel — Twenty five memorable years in the life history of the world and those charged with the sacred duty of maintaining and running the K. R. M. E. have the right to be proud of their achievements during this quarter of a century. The year 1918 when your institution was founded saw the end of the first world war, and 1943, the year of your Jubilee celebrations will, I trust, be the end of the second war. And in between the two wars, in spite of many world catastrophes your hostel has grown from strength to strength. May it go on and maintain its rate of progress for many more years to come!

On an occasion like this, one thought that should be and is I am sure, uppermost in your minds is that of gratitude to the noble founder of the K. R. M. E.... It has been almost instinctive with us to acknowledge with thankfulness the benefits received from liberal minded donors. And you, my young

friends, are doing the right thing not only in arranging for this Silver Jubilee celebrations, but in gathering together annually on the Founder's Day to express your gratitude for the numerous benefits you are receiving at the hands of the K. R. M. E. trustees. In our land, noted for its hospitality charity has assumed many shapes. It is only in recent times that wealthy benefactors have come forward to found educational institutions. Your founder of revered memory, the late Rengasami Mudaliar, is one of the few noble patrons of learning in our land who have devoted their fortune to the education of the youth of our country. Let us think of him with affection and gratitude, and offer a silent prayer to God for the peace of his soul.

Rao Bahadur
K. G. SRINIVASA MUDALIAR,

'Champaka Villa'
MANNARGUDI.

On the occasion of the *Silver Jubilee* of the Kottur Rangaswami Mudaliar's Estate Hostel, I have the greatest pleasure in sending you my congratulations and best wishes.

Knowing as I do the founder from early life and this Hostel from its very start, I am really glad of its present position. This institution is a living monument and true picture of the character, spirit and dominating intentions of that noble founder, who, in the last sentence of his codicil yearned that all his property should be utilised for charity and charity alone.

A Silver Jubilee is not merely an occasion for rejoicing, not merely a landmark in the progress of an institution. It is somthing more. In the cheering atmosphere of well-earned felicitations, it is natural and inevitable that plans should be laid for a future, bigger and more fruitful than even the past.

Every member of the Kottur family cannot but rejoice that this Hostel should have completed 25 years of successful and very useful working. This is in no small measure due to the active, intelligent and unostentatious interest of Mr. Balakrishna Mudaliar, the present Managing Trustee. He deserves special congratulations on his judicious selection of the Warden, Mr. V. Gopalasami, whose devotion to the affairs of the Hostel is too well-known to need stressing.

I wish the Hostel a long, nay, infinite, career of usefulness and prosperity.

Rao Bahadur
V. S. TYAGARAJA MUDALIAR, M.A.

'*Ranga Vilas*'
TIRUVARUR.

It gives me great pleasure to note that the Kottur Rangaswami Mudaliar's Estate Hostel is celebrating its Silver Jubilee on the completion of 25 years of its useful existence. I have been closely watching the growth of this institution in the recent years and I may say, without any fear of contradiction, that there is no other institution in this district which is run as efficiently as the K. R. M. E. Hostel. From a very modest beginning, the institution has very rapidly progressed and has been catering to the needs of the poor students. The hostel has got a fine building situated in one of the finest localities of Mannargudi and up-to-date amenities are provided for the students, both for education and for recreation. It is also very gratifying to note that many students who passed out of this hostel have come to occupy good positions in life after completing their educational career successfully. I know that the utmost watch is kept over the character of the students and the best training is given to the inmates of the hostel, so that they may become a real asset to the nation after they complete their studies. The satisfactory condition of the hostel and the high position which it occupies today reflects great credit on the Managing Trustee, Mr. G. Balakrishna Mudaliar and the Warden of the Hostel, Mr. V. Gopalaswami Mudaliar. Mr. G. Balakrishna Mudaliar, a great philanthropist that he is, has been very generous in providing all possible amenities for the students including the fine building, library and other things, for which act of kindness, every inmate of the hostel past and present should be grateful to him. The hostel has been fortunate in securing the services of Mr. V. Gopalaswami Mudaliar as its warden. An enlightened and good desciplinarian that he is, he has been able to maintain a high level of efficiency and he deserves all congratulation on the proper training that he is giving to the inmates of the hostel. Thus by the untiring efforts of Mr. G. Balakrishna Mudaliar and Mr. V. Gopalaswami Mudaliar, the objects of the founder of this charity are being efficiently fulfilled to the great benefit of all concerned. May the Almighty grant them long life and prosperity to continue their useful service to the poor, and I am sure that this hostel will grow from strength to strength and will be of invaluable help to the poor students for ever.

"The accommodation provided is excellent."

E. B. THORP, *Principal, Findlay High School.*

Rao Bahadur
N. R. SAMIAPPA MUDALIAR, M.L.C. NEDUMBALAM.

திரு. ரெங்கசாமி முதலியார் அவர்களின் தர்ம ஸ்தாபனங்கள் இருபத்தைந்து ஆண்டுகளாக மிகவும் நன்றாகவும், யாவரும் போற்றத்தக்க முறையிலும் நடைபெற்றுவருகின்றன. இங்ஙனம் சிறப்புற்றோங்கி வருவதற்கு அடிப்படையான காரணம் திரு. ரெங்கசாமி முதலியார் அவர்களின் நல்லெண்ணமும், உற்றார், உறவினருடைய நல்வாழ்வில் அவருக்குள்ள அபிமானமுமேயாகும். நம்மவர்களில், மரபு மாணவர் கல்வி நலத்திற்கும், இதர தர்மங்களுக்கும் பெரும் பொருளீட்டியவர் இவர் ஒருவரேயாவர். அவர் நிறுவிய மாணவர் இல்லத்தின் வெள்ளி விழா நாளாகிய இந்த நன்னாளிலே அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆடவரே ஆட்சிக்கு உடையவர் என்கிற எண்ணத்தை ஒழிக்க எண்ணியே தம்முடைய உயிலில் ஆடவருக்கும், பெண்டிற்கும் வித்தியாசமில்லாமல் சம உரிமை அளித்துள்ளார்.

ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கும், தளர்ச்சிக்கும் காரணம் அதனை நடத்துவார்களைப் பொறுத்ததேயாகும். இத்தாபனம் இன்று அடைந்துள்ள உன்னத நிலைக்குக் காரணமாயிருந்தவர்கள் காலஞ்சென்ற சடகோப முதலியாரவர்களும், கோபாலசாமி முதலியார் அவர்களும் தற்சமயம் நிர்வாக டிரஸ்டியாக இருந்துவரும் திரு. பாலகிருஷ்ண முதலியார் அவர்களும் ஆவார்கள். இவர்கள் இந்த தர்ம ஸ்தாபனத்தைத் தங்கள் சொந்த சொத்துக்களைப்போலப் பாவித்துப் போற்றிவருவது பாராட்டத்தக்கதே. இத்தாபனம் இன்னும் நலம் பல புரிந்து பொன்விழா வைர விழா நடத்தி இன்புறுமாறு இறைவனை வேண்டி இறைஞ்சுகின்றேன்.

வெள்ளி விழாவின்போது வந்த செய்திகள்.

RAJAH
SIR ANNAMALAI CHETTIAR,
OF CHETTINAD.

CHETTINAD HOUSE,
ADAYAR, MADRAS.
2—4—43.

பிரியமுள்ள ஐயா,

மாணவர் இல்லம் வெள்ளிவிழா அழைப்புக்கடிதம் அனுப்பியிருப்பதற்கு நன்றி பாராட்டுகிறேன். சென்ற பல வருஷங்களாக இல்லம் மாணவர்களுக்குப் பெரிதும் நன்மை யளித்து வந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்தது. இந்த வெள்ளி விழா வைபவத்திற்கு வரவேண்டுமென்ற எண்ணம் அதிகம் உண்டு. ஆனால் அதுசமயம் நான் இவ்விடம் இருக்கவேண்டியிருப்பதால் வரக்கூடாமைக்கு விசனிக்கிறேன். உருவப்படங்களின் திறப்பு விழாவும் வெள்ளி விழாவும் சிறப்பாக நடைபெறுமென்று நிச்சயமாய் நம்புகிறேன். இல்லம் மேன்மேலும் விருத்தியடைந்து மாணவர்களுக்கு மிகவும் உபயோககரமாய் இருக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள்,
மு. அண்ணாமலை செட்டியார்.

நா. ப. தணிகை அரசு,
வள்ளலார் மாணவர் இல்லம்,

இந்துமத பாடசாலை,
வாலாஜாபாத்.
2—4—43

அன்பு செறிந்த, அருள் நிறைந்த பெரியீர்!

வணக்கம். தாங்கள் அன்புகூர்ந்து எங்களுக் கனுப்பிவைத்த தங்கள் இல்லத்தின் வெள்ளி விழா அழைப்பு வரப்பெற்று உள்ளங்களித்தோம். விழா சிறப்பாக நடைபெறுவதற்கு நம்பனை வேண்டுகிறோம். விழாத் தலைவர் அவர்களையும், சொற்பொழி வாற்றும் செந்நாப் புலவரையும், உருவப்படங்களை உளமுவந்து திறந்துவைக்கும் திருவாளர்களையும் வணங்குகிறோம்,

நாளை நன்னாளில் நல்லார் தலைமையில் வெள்ளி விழாக் கொள்ளும் மாட்சிமையுடன் என்றும் சிறப்பதாக என வாழ்த்துகிறோம்.

தங்கள் பணிவுள்ள,
நா. ப. தணிகை அரசு.

"சிவக்கவிமணி"
C. K. சுப்பிரமணிய முதலியார் B.A.,
வக்கீல்.

சேக்கிழார் நிலயம்
கோயமுத்தூர்
28—3—43

அன்புடைய ஐயா,

வணக்கம் பல. நலம். விரும்புவதும் அது.

வள்ளல் கோட்டூர் அரங்கசாமி முதலியார் மாணவர் இல்லத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவின்போது வெள்ளி விழாக் கொண்டாடவுள்ள பெருஞ் சிறப்புக்கேட்டு மிக மகிழ்ந்தேன். அறநிலைப் பெருவள்ளல் ஸ்ரீ பச்சையப்ப முதலியாருக்குப் பின் அதுபோலப் பெருந் தரும நிலையமாகிய இவ்வில்லத்தைத் தாபித்த பெருமை நமது வள்ளல் அரங்கசாமி முதலியாருக்கே உரியது. இதில் பயின்று தேறி வாழும் அன்பர் ஒவ்வொருவருடைய நல்ல வாழ்க்கையும் இதன் பெருமைக்குச் சான்று பகர்ந்து நிற்கின்றன. நமது தொண்டைமண்டலம் கொண்டைகட்டி வேளாள மரபுக்குத் திலகமாய் விளங்கும் அருங்கொடை வள்ளலாகிய கோட்டூர் அரங்கசாமி முதலியார் புகழ் என்று நின்று நிலவுக. தமது உடைமைகளுள் "ஒன்றொழியாதுள்ள வெல்லாம்" தருமத்துக்களித்த அவரது கொடையின் பயனாக விளங்கும் மாணவர் இல்லமும் நீடூழி வாழ்ந்து அதனைச் சார்ந்த எல்லாருக்கும் நற்பயன் தந்து நிலவுக.

தருமம் தழைக்க. தமிழ் வாழ்க.

அன்புள்ள,
C. K. சுப்பிரமணிய முதலியார்.

K. SIVASANKARA MUDALIAR,
ZAMINDAR.

SALEM. (S. INDIA.)
2—4—43

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் அன்புடன் அனுப்பிய வெள்ளி விழா அழைப்பிற்கு மிக்க வந்தனம். இறைவன் அருளால் ஷை விழா சிறப்புடன் நடைபெறவேணுமாய்க் கோருகிறேன்.

இப்படிக்கு அன்புள்ள,
K. சிவசங்கர முதலியார்.

கோமாளபேட்டை
கோ. சு. கல்யாணசுந்தர முதலியார் அவர்களால் வாசித்துக்கொடுத்த வாழ்த்துப்பாடல்கள்.

அறுசீராசிரிய விருத்தம்.

1 பூமகட்குத் திலகமெனப் பொலிந்திடுநற் புனிதவளச் சோழ நாடே
பாமகட்குத் திருநடனப் பயில்சாலை எனப்புலவோர் பகரா நிற்பர்
நாமுறைக்கு மிந்தவுரை நலங்காண்ட லிந்நாட்டில் நயப்பு மிக்க
எமமிகு கலாசாலை பலவிலங்க லாலினிதே எற்குந் தானே.

2 செப்புபுகழ் மிக்கொளிரும் இந்நாடாந் தென்னாட்டிற் சிறப்புவாய்ந்து
கொப்புமிளிர் தேன்மொழியா ளோடுகொழுந் தீசருறை கோவில் மேவும்
ஒப்பில்புகழ்க் கோட்டூரோஞ் சீரூரிற் பெற்றியுடன் ஓங்கி நின்ற
தப்பறுமை யாத்துரை செய் தவமதனால் வந்துதித்த தனிச்சீ ராளன்

3 தொன்மை மிகுசீருடைய தொண்டைமண்ட லக்குலத்தில் தோன்றி நின்று
நன்மைபுரி வள்ளலிந்த நானிலத்தில் நந்நாட்டு மக்களுக்குத்
தன்மைமிகப் பலநலங்கள் தயவினோடும் புரிந்திட்டான் சாற்றக் கேண்மின்
இன்மையென்பார்க் கீவதிலே யிணையிவனுக் கியாவரையே இயம்ப லாமே

4 வடமொழிக்கல் லூரிவைத்து வயிற்றுணவி னோடதனை வளர்க்க லானான்
திடமுடனே பலதளிக்குங் கட்டளைகள் பலம்பொருந்தச் செய்து வைத்தான்
இடமுடனே யுணவளித்து வறுமையுடை யார்க்கறிவை யீயலானான்
மடமகளுங் கலைத்தானம் போலுலகில் வேறொன்றை வகுக்கப் போமோ.

5 எராள மானபொருள் தனையீந்து பன்னூலை யினிது சேர்த்துத்
தாராள மாயெவரும் படிக்கவா சகசாலை சதுராய் வைத்தான்
பேராள னிவன்செய்த பேரறங்கள் எந்நாளும் பிறங்கி நின்று
பாராளப் புரிகின்ற பான்மையுடை யாருநல்ல பண்பினரே.

நேரிசை வெண்பா.

6 ஏறு புகழரங்கன் எல்லா அறங்களையும்
பேறு பெறப்புரிந்து பேருலகிற்—கூறுபுகழ்
ஓங்கி மிகச்சிறக்க ஓர்ந்து புரிந்தனனால்
பாங்கு பெருசடகோ பன்.

7 இளவல் சடகோபன் ஏறவளர்த் துள்ள
பிளவல் இயலாமற் பேணித்—தளமாகப்
பூபாலர் போற்றநனி பொற்புடனே காத்திட்டான்
கோபால சாமியவன் கூறு.

8 நானிலத்தில் கோபாலன் நன்கு புரந்துவந்த
மேனிலைசேர் போறத்தை மேன்மையுடன்—வானிலையில்
இன்று வளர்க்கின்றான் ஏத்து புகழவன் சேய்
நின்று பெருமையுடனேர்ந்து.

9 கல்விச் சிறார்கடம்மைக் கண்ணியமாய்ப் போற்றிநனி
செல்வச் சிறப்பமையச் சீராண்டு—நல்விழா
சாலமகிழ் வோடென்றுந் தக்காங்கே செய்கின்றான்
பால கிருஷ்ணனவன் பார்.

10 பாலகிருஷ்ணன் பலநலமும் மிக்கோங்கி
மாலவன்போல் எந்நாளும் மாண்புடனே—மேலவனாய்
ஆழிசூழ் பேருலகில் அற்புதஞ்சேர் பொற்புடனே
வாழி மிகவு மகிழ்ந்து.

11 மாணவர்தம் இல்லத்தை மாண்புபெற வோநடத்தும்
வேணவாத் தானுடைய வித்தகனும் — பாணவா
கோபாலப் பேரோனுங் கொற்றமுட னேவாழ்க
பூபாலர் போலப் பொலிந்து.

கோட்டூர், அரங்கசாமி முதலியார்

வாழ்க்கை வரலாறு.

(வே. கோபாலசாமி.)

முன்னுரை

[இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு ஆக்கம் தருவதும், இன்பம் பயப்பதும் அறமேயாகும். அதுவே "பொன்றுங்காற் பொன்றாத்துணை" என்றார் பொய்யில் புலவர். இத்தகைய அறம் புரிந்து அழியாப் புகழ் பெற்ற பெரியார் ஒரு சிலரே யாவர். அன்னவருள் ஒருவர் அரங்கசாமி முதலியார்.

அவர் நிறுவிய அறநிலையங்களைக் கண்டும் கேட்டும் களிகூர்ந்த அன்பர்கள் அவரது வாழ்க்கை வரலாற்றை அறிய ஆசைப்பட்டார்கள். அதனை எழுதும் பணியில் ஈடுபடுமாறு எளியனாகிய என்னைத் தூண்டினர் சிலர். அரங்கரோடு நாள்தொறும் பழகி, அவர் பண்புகளை நன்கறிந்த பெரியோரே அப்பொறுப்பினை மேற்கொள்ளுதற்குரியர் என்று நான் கருதி அமைந்தேன். அத்தகுதியுடையோர் ஆங்காங்கு சிலர் இருந்தும் இன்று காறும் அந்நற்பணி நடைபெறவில்லை. அரங்கரின் பேர்தாங்கி நிற்கும் மாணவர் இல்லத்தின் வெள்ளிவிழா நிகழும் நன்னாளிலேனும் அவர் வரலாற்றை வெளியிடவேண்டும் என்னும் ஆசை என்னுள்ளத்தைக் கவர்ந்தது.

இம் மாணவர் இல்லத்தாற் பயனடைந்த இளைஞர் பலருள் யானும் ஒருவன். அன்றியும் சென்ற ஆறு ஆண்டுகளாக இந் நிலையத்தைக் கண்காணித்து நடத்தும் பேறும் பெற்றுள்ளேன். இந்த உரிமை பற்றி அரங்கனார் வரலாற்றை நானே எழுதவேண்டும் என்று எனது ஆன்ற மதிப்பிற்குரிய அறங்காப்பாளர் திரு. கோ. பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் பணித்தார்கள். அவர்கள் ஆணையைத் தலைமேற்கொண்டு, இப்பணியை ஒல்லும் வகையாற் செய்யத் துணிந்தேன்.

அரங்கரது சிறிய தந்தையாரின் புதல்வரும் எனது பாட்டனாரும் ஆகிய, ராவ்பகதூர் கே. ஜி. சீனிவாச முதலியார் அவர்கள் என் ஆர்வத்தை ஆதரித்து, வரலாற்றுக்குரிய பல அரிய குறிப்புக்களைத் தந்து உதவினர்கள். இவ்வுதவியின்றேல், இன்று அரங்கரின் சரிதத்தை அறிந்துகொள்ளுதல் அரிதாகும். இவர்கள் காலத்திற்செய்த உதவிக்கு நானும், என் மரபினரும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். இப்பெரியார் தந்த பொறுக்கு மணிகளாகிய வாழ்க்கைச் செய்திகளை வரலாற்று மாலையாகத் தொடுக்கும் வகையினை எனக்கு அறிவித்து ஊக்கமளித்த என் ஆசிரியர், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.]

முதலியார் மரபும் அதன் மாண்பும்

புலவர் பாடும் புகழுடைய தொண்டை நாட்டை ஆண்ட பண்டைத்தமிழ் வேந்தர், பயிர்த்தொழிலாற் பண்புற்ற வேளாளரை அந்நாட்டிற் குடியேற்றிப் பசியும் பகையும் போக்கினர் என்று பழங்காதை கூறுகின்றது. அன்னோர் பாலாற்றில் சுரக்கும் நீரைப் பயன்படுத்தி, தொண்டைநாட்டின் வளம் பெருக்கி மண்டில மாக்களாகவும், தண்டத்தலைவராகவும் அமர்ந்து நலம் புரிவாராயினர். மன்னர் மதிக்கும் மதிநலமும் சீலமும் அவர்களிடம் சிறந்து திகழ்ந்தமையால் முதன்மையார் என்ற பட்டமும் பெற்றனர். தொண்டைமண்டல முதலியார் என்று தமிழ் நாட்டில் புகழ்பெற்று வாழ்ந்தவர்கள் இவர்களே இம்மரபினர் பலர், பெருஞ்செல்வமும் அறிவும் பூத்து இன்றும் விளங்கக்காணலாம். காலஞ்சென்ற குறும்பேட்டை, முத்துக்குமாரசாமி முதலியார், வடபாதிமங்கலம் சோமசுந்தர முதலியார், S. முத்தையா முதலியார், பக்தவத்ஸல முதலியார், குமாரசாமி முதலியார், K. G. சீனிவாச முதலியார், நெடும்பலம், சாமியப்ப முதலியார், பி. டி. ராஜன், இவர்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம். ஆகவே செல்வமும் சீலமும் வாய்ந்த தொண்டைமண்டல முதன்மையார் அன்றுமுதல் இன்றளவும் தமிழ்நாட்டின் நல்லணியாய்த் திகழும் தொல்குலத்தார் என்பது தெள்ளிதின் விளங்குகின்றது.

அரங்கர் பிறப்பும் சிறப்பும்

இத்தகைய பெருங்குலத்தில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு செங்கற்பட்டிலுள்ள வல்லப்பாக்கம் என்ற சிற்றூரில் காளத்தியப்ப முதலியார் என்பவர் சிறந்திருந்தார். தஞ்சை நாயக்கர் ஆட்சியில் அவர் ஓர் உயர்ந்த பதவியை வகித்திருந்தார் என்பர். இவர்க்கு இளையவர் இளையபெருமாள் முதலியார். வாழையடி வாழையென வந்த இவர் மரபில், எழாவது தலைமுறையில், மன்னார்குடிக்கு அண்மையில் உள்ள கோட்டூரில், ஐயாத்துரை முதலியார் இயற்றிய அருந்தவப்பயனாக, அரங்கசாமி முதலியார் கி.பி. 1850ம் ஆண்டிலே தோன்றினர். இளமையிலே எட்டுப்படிப்பைக் கோட்டூரில் முடித்துக்கொண்டு, மன்னார்குடியிலுள்ள வெஸ்லியன் கல்லூரியில் இருபது வயதளவும் ஆங்கிலக் கல்வி பயின்றார்.

அங்கிலையில், குடும்பச் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அவரைச்சார்ந்தது. அவ்வேலையைக் கண்ணுங் கருத்துமாகச் செய்யத் தலைப்பட்டார். நாள்தோறும் பன்னிரண்டு மணி நேரத்திற்குக் குறையாமற் பணி செய்தார். அவர்க்குரிய

நிலங்களைச்சார்ந்து வாழ்ந்த குடிகள் எழுநூற்றுக்கு மேலாக இருந்தும் ஒவ்வொரு குடும்பத்திலும் முதியவர் முதலாகச் சிறுவர் ஈறாக உள்ள எல்லோரையும் அறிந்திருந்தார். இன்னும் தமக்குரிய நிலபுலங்களின் தாக்கும் தாழ்வும், வளப்பமும் இளப்பமும், இன்ன பிறவும் மனப்பாடமெனச் சொல்லும் திறம் பெற்றிருந்தார். சுருங்கச்சொல்லின் அரங்கர் தம் பெருநில முழுவதையும் "வறிஞன் ஓம்புமோர் செய்யெனக்காத்து"ச் செல்வம் பெருக்கினர்.

கற்றதும் கேட்டதும்

தாய்மொழியாகிய தமிழ் மொழியில் அரங்கர் தலைசிறந்த ஆர்வம் உடையாராயிருந்தார். தமிழ்ப்புலமை வாய்ந்த ஆசிரியர் ஒருவரை ஏழாண்டுகள் தம்மிடமே வைத்து ஆதரித்து, அவர்பால் சிறந்த பல நூல்களை முறையாகக் கேட்டறிந்தார். அதனோடு வடமொழியும் தெலுங்கும் அளவோடு பயின்று அவற்றின் நயங்களை உணரும் தகுதி பெற்றார். அவரில்லத்தில் எப்பொழுதும் கலை பயின்ற புலவர்கள் தாம் அரிதின் முயன்றுகண்ட நயங்களை விரித்துரைத்தல் வழக்கம். கற்றதையும், கேட்டதையும் விடாது உளத்தமைக்கும் பெற்றி வாய்ந்த அரங்கர், செவிச் செல்வம் பெற்று விளங்கினர்.

வாழ்க்கையின் குறிக்கோள்

மக்களாய்ப் பிறந்தோர்க்கு ஒழுக்கமே உயர்வுதரும் என்னும் உறுதியான கொள்கை யுடையவர் அரங்கர். மறந்தும் அவர் பிறன் கேடு சூழ்ந்ததில்லை; தீய சொற்களை வழக்கியும் வாயாற் சொன்னதில்லை; வாய்மை நெறியினின்றும் ஒருபோதும் விலகியதில்லை. நாள்தோறும் நீராடி, நெற்றியில் திருநாமம் இட்டு, ஒருமையுடன் இருந்து திருவருளை நினைந்துருகுவார். இறைவனை வணங்கும் அன்பரோடு இணங்குவார்; இச்சகம் பேசும் கொச்சை மக்களுக்கு இடங்கொடார்; அவரைக் காண வருபவர் உரையாடு முன்னமே அன்னார் உள்ளக்கருத்தினைத் தெள்ளிதின் அறியும் திறம் அவர்பால் அமைந்திருந்தது. ஆதலால் நெஞ்சிலே கரவுடையார் அவர் முன்னே செல்ல அஞ்சுவாராயினர். எளிய வாழ்க்கை; அரிய சீர்மை — இதுவே அவர் குறிக்கோள்.

பரந்த நோக்கம்

மத வேற்றுமை, மொழி வேற்றுமை முதலாய பிணக்கங்கள் அவர் உள்ளத்தில் எள்ளளவுமில்லை. வைணவமே அவர்க்குரிய மதம்; ஆயினும் சிவாலயங்களுக்கும் பல சிறப்புக்கள் அமைத்துள்ளார். தமிழ் மொழியே அவர் தாய்மொழி; எனினும் வட

மொழி பயில்வார்க்கும் அறநிலையங்கள் வகுத்துள்ளார். எம்மொழி கற்றோராயினும், எக்கலை யுணர்ந்தோராயினும் அவரவர் வரிசை யறிந்தே பரிசில் வழங்குவார்.

அறப்பெருஞ் செல்வர்

அரங்கர்க்கு இருநூறு வேலிக்கு மேற்பட்ட நிலமும், மூன்றரை லட்சத்திற்குக் குறையாத ரொக்கமும், விலை மதித்தற்கரிய மணியும் அணியும் இருந்தன. ஆண் மகப்பேறில்லை. பெண் குழந்தை ஒன்றே. வழிவழியாக அரங்கர்பால் வந்த பெருஞ் செல்வம்,

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

என்னும் பொதுமறைக்குப் பொருந்திய சான்றாயிற்று. அச்செல்வமனைத்தையும் அறத்திற்கே உரிமையாக்கினார்.

அவர் திருவினால் நிறுவப்பெற்றுள்ள அற நிலையங்கள் பல திறத்தனவாகும். முதலியார் மரபைச்சேர்ந்த ஏழை மாணவர்கள் இலவசமாக உணவருந்திக் கல்வி கற்பதற்காக மன்னார்குடியில் உள்ள மாணவரில்லத்திற்கு ஆண்டுதோறும் நாலாயிரத்திற்கு மேல் ஆறாயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்படுகின்றது. தாய்மொழியைப் பேணும் வகையில் தமிழ் மொழி பயிலும், இருபது மாணவர்க்கு ஏற்ற பொருளுதவி செய்யப்பட்டுள்ளது. இன்னும் வடமொழி பயிலும் இளைஞர்க்கு வேத பாடசாலையும், சாஸ்திர பாடசாலையும் அமைக்கப்பட்டுள்ளன. சாதி, மதம், பிறப்பு என்னும் வேற்றுமையின்றி யாவரும் கற்றுப் பயனடைதற்குரிய பலவகைப் புத்தகங்களையுடைய நூல்நிலையம் ஒன்று நிறுவப்பெற்றுள்ளது. மன்னார்குடியில் கோயில்கொண்டுள்ள இராசகோபால சுவாமிக்கு நாள்தோறும் நறுமலர்மாலை அணிவதற்காகப் பூம்பொழில் ஒன்று பரிபாலிக்கப்பெறுகின்றது. அரந்தை கெடுத்து வரந்தரும் பெருமானைச் சேவிக்க வரும் தேசாந்திரிகளுக்கு விருந்தளிக்க அன்னசாலை அமைக்கப்பட்டுள்ளது. கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையுமுடைய நல்லறிஞரை ஆண்டுக் கொருமுறை வித்துவசபைக்கு அழைத்து, தெய்வமணங்கமழும் விரிவுரைகள் நிகழ்வித்து, அவர்கள் புலமைக்கேற்ற பரிசளிக்கப்பெறுகின்றது. இன்னும் திருக்கோவில்களில் நித்திய நைமித்தியக் கட்டளைகள் முட்டின்றி நடைபெறுமாறு திட்டம் வகுக்கப்பெற்றுள்ளது.

நீதிவழுவா நெறிமுறை

மேற்சொல்லிய வாம்பமைந்த அறங்கள் பலவும், அரங்கனார் எழுதிவைத்துள்ள மரண சாசனத்தை அடிப்படையாக உடையனவாகும். அச்சாசனத்திலமைந்த வாசகமொன்று அவரது

வாக்கு நாணயத்தை வியத்தகு முறையில் விளக்குகின்றது. "பிறர்க்கு நான் கொடுக்கவேண்டியதாக ஏதும் தெரிந்தால், கடன் கொடுத்தவர்களுக்குச் சட்டபூர்வமாக அதனைப்பெற எவ்வித வுரிமை இல்லாதுபோயினும், அன்றிக் காலாவதியாகி யிருப்பினும், தொகையினை எவ்விதத் தடையுமில்லாது உரியவருக்குக் கொடுத்துவிடுதல் வேண்டும்" என்று அச்சாசனத்தில் கடிண்ருக்கின்றது. கால அவதியைப்பற்றிய விதிகள் மக்கள் அமைத்த நீதி மன்றங்களில் கையாளப்படினும், காலமும் கணக்கும் நீத்த கடவுள் வகுத்த அறநெறியில் ஒருவன் கொண்ட கடன், கொடுத்தாலன்றித் தீராதென்பது அரங்கர் கருத்தாகத் தெரிகின்றது.

செய்ந்நன்றியறியும் சீலம் .

அறிவு நூல் பயிற்றிய ஆசிரியர்களிடம் அரங்கனுர் தலையாய அன்பு பூண்டு ஒழுகினுர். அருந்தமிழையும், ஆந்திர மொழியையும் தமக்கு ஆர்வத்தொடு பயிற்றிய உரத்தநாட்டுப்புலவர் ஒருவருக்குச் சிறந்த பொருள் வழங்கி ஆதரித்தார். அவர் செய்த நன்றியை என்றும் மறவாது மனத்திடை வைத்தார். அவ்வாசிரியர் காலஞ்சென்ற பின்னரும், அவர் பேரைச் சொல்லுதல் முறைமையன்று என்றெண்ணிச் "சத்திரம் உபாத்தியாரையா" என்றே கூறிவந்தார். அரங்கர் தம் ஆசானிடத்து நடந்து கொண்டமுறை, அவர் நிறுவிய இல்லத்தில் வாழும் மாணவர்க்கும் பிறர்க்கும் நன்னெறி காட்டுவதாகும்.

இங்ஙனம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அரங்கர், கி. பி. 1907 ஆம் ஆண்டில் பூதவுடலை நீத்துப் புகழுடம்பெய்தினுர். அவரமைத்த மாணவரில்லத்தின் வெள்ளி விழா இன்று நடைபெறுகின்றது. இங்கிலயம் பல்லாற்றுனும் சிறந்தோங்கி அறத்தால் வரும் இன்பத்தை அரங்கர் பெருங் குலத்தார்க்கு என்றும் அளிக்கவேண்டு மென்று இறைவன் திருவடியை இறைஞ்சுகின்றேன்.

க. வாழிநின் புகழே! மன்னுசீர் அரங்கா!
வான்ஒளிர் மதியென, உலகோர்
தாழ்வெலாம் நீங்கத் தந்தபல் அறங்கள்
தழைத்தினி தோங்குக! மேன்மேல்,
ஆழிசூழ் உலகத்து அருங்கவி வாணர்
அணிபெறுங் கவிமலர் தூவ
ஊழிபல் காலம் உன்திரு நாமம்
உயர்வினில் திகழுக மாதோ!

உ. மன்னுயிர்க்கு இரக்கம் காட்டுவ தோன்றே
மாதவற்கு இனியதோண் டெனவே,
தன்னுளங் கோண்ட தனிப்பெருங் குறிப்பால்
தண்ணளி சுரந்தனே! அன்பால்
பன்னலம் தருமாறு அறம்பல புரிந்த
பரிவினல், படிமிசை அழியா
நன்னயப் புகழே நயந்தனே! அரங்கா!
நலமுற வாழிநின் நாமம்!

ங. இயல்பிலா நின்குலச் சிறுவர்கள் எவர்க்கும்
இலவசக் கல்வி, ஊண் தந்தாய்!
தயவினேடு அவர்கள் தங்குற என்றே
தக்கபேர் இல்லமும் வகுத்தாய்!
உயர்வெலாம் நல்கும் கலையமுது உலகோர்
உண்ணவோர் நூலகம் கண்டாய்!
செயல், நினைவு எல்லாம் அறத்தினுக் களித்தாய்
செப்பிட நின்புகழ் சிறிதோ?

ச. அன்பெனும் தேனை அறத்தொடும் குழைத்தே
அருள்சுரந்து அளித்தவன் என்கோ!
மன்பதைக்கு உற்ற துணையெனுங் கல்வி
மாண்நலம் வகுத்தவன் என்கோ!
தன்பெருஞ் செல்வக் குவையெலாம் உலகம்
தழைத்திடத் தந்தவன் என்கோ!
இன்புகழ் அணிவோய்! எங்கள்சீர் அரங்கா!
என்சோலிப் புகழ்வதிங்கு உனையே.

கோட்டூர் அரங்கசாமி முதலியார் மாணவரில்லம், மன்னார்குடி.

வெள்ளி விழா அறிக்கை.

மதிப்பிற்குரிய தலைவரவர்களே! மாண்புமிக்க பெரியோர்களே!

அரங்கரின் அறநிலையமாகிய இந்த இல்லத்தின் வெள்ளி விழா நாளாகிய இந்த நன்னாளில் எங்கும் இன்பமே காணப் பெறுகின்றது. அரங்கரைப்பற்றிய எண்ணம் எல்லார் மனத்திலும் தோன்றுகின்றது. அறிஞர்கள் ஆசி தருகின்றனர். கவிஞர்கள் கவிமலர் தூவுகின்றனர். மாணவர் உள்ளங்கள் மகிழ்ச்சியால் துள்ளுகின்றன. மகிழ்ச்சியும் இன்பமுமே எங்கள் மனத்தில் மாறி மாறிக் காட்சி தருகின்றன. இந்த நன்னாளில் கடந்த 25 ஆண்டுகளில் இவ்வில்லம் செய்து போந்த தொண்டுகளை உங்கள் முன்வைத்தல் கடமையாதலின், சில சொற்களை முன்னுரையாகக் கூறி அப்பணியினைச் செய்கின்றேன்.

இவ்வில்லம் தோன்றிய காலம் 1918. இது தோன்றுதற்குக் காரணமாக நின்றவை சில. அவைகளைக் கூறுவதற்குமுன், முதன்மையர் மரபைப்பற்றிச் சிறிது கூறுதல் இங்கே பொருந்துவதாகும். முதன்மையர் மரபு வேளாண்மைத்திறம் பூண்டது. கல்வியிலும், அறிவிலும், ஒழுக்கத்திலும் முதன்மை பெற்று நின்றது. பண்டைக்காலத்திலே, இம்மரபினர் நம் தமிழ்நாட்டு மன்னர்களிடம் அமைச்சராகவும், படைத்தலைவராகவும், குறுநில மன்னராகவும், புலவராகவும் புகழுக்கிலக்காகி வாழ்ந்தனர். இவை காரணமாக "முதன்மையர்" என்னும் பட்டமும் பெற்றார்கள்.

கடந்த ஒரு நூற்றாண்டாக, இம்மரபின் மேற்குறித்த உயர் நிலை மங்கத்துவங்கியது. காலப்போக்கில் உண்டான பல பொருந்தாக் கொள்கைகளுக்கும், சோம்பலுக்கும் மரபுமக்கள் ஆட்பட்டனர். வேளாண்மைத் திறம் குன்றியது. முன்னோர் அரிதில் தேடிவைத்த மூலப்பொருள்கள் தக்க முறையில் போற்றி வளர்க்கப்படாது போயின. இவை காரணமாக, மரபிலே கல்விநலம் தேய்ந்தது. நுண்ணறிவு வாய்ந்த இளைஞர் பலர் கல்வி கற்கும் வசதியின்றி வாடினர். துவக்கக் கல்வி பெற்றதோடு நின்றனர் சிலர். சிலர் பள்ளிக்கல்வியோடு படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். பல இடர்களுக்கிடையே மேற்படிப்புக்குச் சென்றும், இடையே நேர்ந்த பொருள் முட்டுப்பாடு காரணமாக வீடு திரும்பினர் சிலர். இவ்வாறு கல்விநிலை மோசமடையவே மரபின் பண்டைப்பெருமை மனத்தகத்தே வெறும் கனவாகி நின்றது.

இந்த நிலைமையைச் சீர்ப்படுத்தும் செல்வர் பலர் நாட்டில் ஆங்காங்கே யிருந்தும், தக்க வகை செய்யாது தங்கள் பொழுதைப் போக்கினர். இக்காலத்திலேதான் எமது வள்ளல் அரங்கர் கோட்டூரில் வாழ்ந்துவந்தார்.

அவர் இயற்கையிலேயே நல்ல குணங்களும், எற்ற செயல்களும் வாய்ந்தவர். கருணைகனிந்த மனமுடையவர். பிறர் துன்பங்காணச் சகியார். தமது மரபின் ஓங்கிய பெருமை மங்குவதைக் கண்டார். மனங்கலங்கினர். இளைஞர் உள்ளங்களில் இருள் சூழுவதையும், அவர்கள் கல்விபெறும் வசதியின்றிக் கருகுவதையும் காணக்காண, அவருள்ளம் பெரிதும் வருந்தியது. அறத்துறையை நாடியது. பழங்காலத்திலே மக்களுக்குப் பலவகையில் நலம்புரிவதற்கென்று தோன்றிய கோவில்கள், பசித்தோர் எவர்க்கும் அமுத சுரபிபோல அன்னமிடச் சத்திரங்கள் ஆகிய அறநிலையங்களின் தற்போதைய மங்கியநிலை அவர் கண்முன் காட்சியளித்தன. இவைகளில் தற்காலத்தே எது கல்விக்காகத் தொண்டு செய்கின்றது என்று நோக்கினர். அப்படி ஒன்றுமே யில்லை. மனித வாழ்க்கையை மாண்புறச் செய்வது கல்வி, வாழ்க்கையின் லட்சியங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் ஒருங்கே தரக்கூடியது கல்வி. எந்த மரபின் முன்னேற்றத்துக்கும், சிறப்புக்கும் உயிர்நாடி போன்றது கல்வி. இதனையல்லவோ எவரும் முதன்மையாகப் போற்றவேண்டும் என்று எண்ணினர். இவ்வாறு அன்று, அவர் உள்ளத்திலே கருக்கொண்டு எழுந்த எண்ணமே, பிற்காலத்தே அவர் வள்ளலாகவும், அறநெறிச் செல்வராகவும் உலகின் மனத்திலே நிலைபெறக் காரணமாயிற்று.

அறவுணர்ச்சியில் படிந்த அவர் மனம் பலவகைகளையும் ஆராய்ந்தது. அவருடைய செல்வம் குன்றென ஓங்கியிருந்தது. அதனை, தாம் எண்ணிய, அறத்துறைகளுக்கு ஆக்க எண்ணினர். எண்ணம் செய்கையாக மாறியது. அதன் விளைவாக, கோயிற் பணிகள், குலநலம் பேணுதல், பசித்தோருக்கு அன்னமிடுதல், பாடசாலை நடத்துதல், புலவரைப் போற்றல், மொழிநலம் பேணுதல், நூல்நிலையம் நிறுவுதல் ஆகிய பல அறத்துறைகள் உலகினருக்குத் தொண்டுபுரியத் தோன்றின. அவைகளுள் ஒன்றாக, மற்ற மரபினரை விட, தம்மரபினர் கல்வி நிலையில் மிகவும் பிற்போக்காக இருந்தால் அது, நாட்டு நலத்துக்குத் தடையாகுமென்று கருதியோ, அல்லது தம் மரபினரைத் தாம் கைதூக்கிவிட்டால், பிற மரபினரும் அதைப் பின்பற்றி நலமடைவார்கள் என்று கருதியோ 1918 ஆம் ஆண்டில் இம்மாணவர் இல்லத்தை நிறுவினர்.

இல்லம் தந்த ஏந்தல்

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் பொன்மொழியைச் செயல்முறையிற்காட்டிய அரங்கர் நற்குணங்கள் நிரம்பப்பெற்றவர். நல்லோர் இணக்கத்தோடு ஞான ஒழுக்கமும் அமைந்தவர். எளிய வாழ்க்கை, உயரிய நோக்கம், பரந்த மனம், பாலினும் தூய்மை, கருணை உணர்ச்சி, கலைப்பயிற்சி, கடவுள் அன்பு முதலிய பண்புகள் இவரிடத்தே சிறந்தன. கற்றவர் கூட்டமே கரைகடந்த இன்பம் தருவது என்று கருதுபவர். புலவர் வாயிலாகப் பல மொழிப்புலமை வாய்ந்து பொழுதைப் பொன்னாக்கியவர். இவரது வரலாற்றினை இங்கே விரித்துக் கூறுதல் பொருந்தாமையின், அன்பர் பலர் கருத்துக்கிணங்க அவ்வரலாறு சிறிது விரிந்த முறையில் வெள்ளி விழா மலரில் அமைந்துள்ளது.

இளமையில் நேர்ந்த இன்னல் மின்னலாயது:

இல்லம் நிறுவுவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்தார் அரங்கர். ஆயின் அது தோன்றுதற்குமுன் 1907ஆம் ஆண்டில் இப்பூதவுடல் நீத்துப் புகழுடல் அணிந்தார். உலகில் பொதுவாக நற்கருமங்கள் எதுவும் தோன்றும்போது ஏதாகிலும் அதற்கு இடர் தோன்றுவது இயல்பு. அவ்விடர் மறைந்துவிடுமானல் அக்கருமம் என்றும் சிறப்புடன் விளங்கும். குழந்தைகளுக்குப் பாலாரிட்டம் வருவதும், அது நீங்கினல் பின்பு அக்குழந்தைகளுக்கு நோயே இல்லை என்று உலகினர் கூறுவதும் யாவரும் அறிந்ததே. அதுபோலவே, அரங்கர் தோற்றுவித்த குழந்தையாகிய இம் மாணவரில்லத்துக்கும் பாலாரிட்டம் வந்தது. சிலகாலம் அந்நோயால் வருந்தியது. இவ்வின்னல் பிள்ளையின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தது. பிள்ளை பிழைக்குமோ என்ற ஐயமும் உண்டாயது. ஆனல் பெரிய மருத்துவசாலையாகிய சென்னை உயர்தர நீதி மன்றத்திலே தக்க பல மருத்துவர்களால் குணம் பெற்றுப் பிழைத்துவிட்டது. அதே பிள்ளைதான் இன்று இருபத்தைந்தாண்டுகள் நிரம்பி, கண்ணுக்கினிய கட்டிளம்பருவம் தாங்கி, வெள்ளிவிழாக்கொண்டாட்டம் அணிந்து நம்முன் காட்சி தருகின்றது. தருமம் தலைகாக்குமல்லவா? எனவே இல்லத்துக்கு வந்த இன்னல் மின்னல்போல மறைந்தது.

சடகோபரும் சாசுவத ஏற்பாடும்.

சடகோபர் அரங்கரின் சகோதரர். தமையனர் தந்த தருமங்களை உலகிலே நிலைநாட்டியவர். அரங்கர் இறக்கும் தறுவாயில் தம் பொருளில் ஒரு பகுதியைத் தம்பிக்குத்தர விரும்பினர்.

அதற்காக அவரை அழைத்தார். ஆனால் சடகோபர் போகவில்லை அறம்புரிவதற்கென்று அமைந்த செல்வத்தில் சிறுபகுதியும் தமக்கு என்? என்று கருதினார்போலும். உலகம் பொருளுக்கே அடிமையாய்க் கிடக்கின்றது. அதனை எந்த வழியிலேனும் அடைவதற்கு மனிதர் விளைக்கும் பூசல் எத்தனை? அதற்காக எத்தனை அவதிகள்? இப்படிப்பட்ட உலகிலே இதுபோல ஒருவர் இருந்தாரென்றால் அது அவர் பெருமைக்கு மகுடம் செய்கின்றது என்று சொல்லவும் வேண்டுமா? அதுவன்றியும் ஒரே மரத்தில் பூத்துக் காய்த்துக் கனிந்த இருகனிகள் சுவையில் மாறுபடுமா? இவ்வாறு அவ்விருவர் மனமும் ஒன்றுபட்டு நின்ற உணர்ச்சியே இந்த இல்லம்.

அரங்கர் வகுத்த அறத்துறை நிலைபெறுவதற்கு அஞ்சா நெஞ்சுடன், அயராது உழைத்து, இறுதி வரையில் தமது சொந்தப் பொருளைச்செலவிட்டு வெற்றிபெற்றார் சடகோபர். அதன்பயனாக 1918இல், பல அறத்துறைகளுக்கேற்ற திட்டங்களை ஆராய்ந்து வகுத்தார். அவைகள் நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்தார். அவைகளுள் ஒன்றாக இம்மாணவரில்லம் தோன்றியது. இவ்வாறு அவர் செய்திராவிடில், இன்று இவ்வில்லமோ, அல்லது ஏனைய அறங்களோ தோன்றியிருக்காது என்பது வெள்ளிடைமலை. எனவே; அறங்கள் தந்த அரங்கரைப் போற்றும்போதெல்லாம் அவைகளை நிலைபெறச்செய்த சடகோபரையும் ஒருங்கே போற்றுதல் அவசியம் என்பது விளங்கும்.

1918—19

1918இல் ஏற்பட்ட இல்லம் 1934 வரை நகரின் தென் பாகத்திலுள்ள செங்குந்த முதலியார் தெருவில் உள்ள பல வீடுகளில் நடைபெற்று வந்தது. மாணவர் உணவு கொள்ளுதற்கு ஓர் இடம், உறைவதற்குப் பல வீடுகள். ஆண்டுதோறும் இல்லத்தின் செலவுக்கென 5000 அல்லது 6000 ரூபாய்கள் கிடைப்பதற்கான மூலப்பொருள் திட்டம் செய்யப் பெற்றுள்ளது. இது வன்றிக் கட்டிடங்கள் அமைப்பதற்கும் அதற்குவேண்டிய இடங்கள் வாங்குவதற்குமென 60000 ரூபாய்கள் ஒதுக்கப்பெற்றன. துவக்க நாளில் 48 மாணவர்கள் இருந்தனர். அவர்களிற் பலர் வேறு சில்லாக்களினின்றும் வந்தவர்கள்.

காலஞ்சென்ற கோபாலசாமி முதலியார் 1918 முதல் 1919 வரையில் இவ்வறநிலையங்களுக்குக் கௌரவக் காப்பாளராக அமைந்தார். சடகோபரின் புதல்வரும், தற்போதுள்ள எங்கள் தலைமைக்காப்பாளரின் தந்தையுமாவார் இவர். இவர் இல்லத்துக்கு வேண்டிய பல வசதிகளும் செய்துதந்து அதன் வளர்ச்சிக்கு

ஏற்ற பல தொண்டுகள் புரிந்தார். அப்போதைய இல்லத்தலைவர், திருத்தங்கூர் T. சாமிநாத முதலியாராவார். துவக்க காலமாதலின், பல வேறு இடங்களிலிருந்து வந்த மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் ஒற்றுமையாகவிருந்து அவர்கள் கல்வி பயிலும்படி தலைவர் பெரிதும் முயன்றார். ஆயின், இல்லத்தின் வீடுகள் பலவிடங்களில் சிதறிக்கிடந்தமையால் அதனைத் திறம்படச் செய்ய முடியவில்லை. எனினும் அவர், மாணவரிடம் அவர்களது பெற்றோரினும் மேலாகக் காட்டிய அன்பும், அவர்களது முன்னேற்றத்தில் அவர் காட்டிய ஆர்வமும் குறிப்பிடத்தக்கனவாகும்.

1919—21

இக்காலத்தில் இல்லத்தின் நிர்வாகம் சடகோபரிடம் வந்தது. மாணவரின் தொகை 60-இலிருந்து 75 வரையில் உயர்த்தப்பெற்றது. மாணவர்கள் நகரில் உள்ள இரண்டு பள்ளிகளிலும் கல்வி பயின்றனர். அப்போது கல்லூரி மாணவர்களுக்கு ஏற்ற வசதியான கட்டிடம் இல்லை. ஆகவே, பிரமஞானசபைக் கட்டிடமொன்றைக் குடிக்கூலிக்கு அமர்த்தி அவர்களை அதில் வதியும்படிச் செய்தார் மற்ற மாணவர்கள் வசித்த இடங்கள் நல்ல சுகாதார வசதியின்றியும், படிப்பதற்கு ஏற்ற வசதியில்லாதனவாயும் இருந்தன. இந்தக் குறைகளை நீக்க, அவ்வசதிகள் நிறைந்துள்ள இடமாக ஒன்று வாங்கலாமென நகர் முழுதும் தேடி அலைந்தார். மாலை வேளைகளில் வாரம் இருமுறைக்குக் குறையாது இல்லத்தைப் பார்வையிடுவார். மாணவர் கடவுள் வணக்கத்தின்போதும், உணவு கொள்ளும்போதும் உடனிருந்து கவனிப்பார். குறைகள் ஏதும் காணப்படின் உடனே அவை களைக் களைவார். இதனால் இல்லம் செவ்வனே நடைபெற்று வந்தது. மேலும், இக்காலத்தில், இல்லத் தலைவர்களாக இருந்த திருவாளர்கள் சித்தையா முதலியாரும், பூவனூர் நடராச முதலியாரும் மாணவர் நலத்தையும், அவர்கள் வசதிகளையும் நன்கு கவனித்து வந்தனர். எனினும் முன்னே குறிப்பிட்டது போல, இல்லத்தின் வீடுகள் பலவாகச் சிதறிக் கிடந்தமையால், மாணவரின் படிப்பையும், நடைமுறைகளையும் அடிக்கொருமுறை சென்று கவனிக்க முடியவில்லை. இக்குறைபாட்டை நீக்க, திரு சித்தையா முதலியாரவர்கள் ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு மாணவத் தலைவனை (மானீட்டர்) ஏற்படுத்தி அதன்மேல் ஓரளவு ஒழுங்கைக் கண்டார்.

இவையன்றிச் சடகோப முதலியாரவர்கள் சட்டம், மருத்துவம் முதலிய மேற்படிப்புக்குச் செல்லும் மாணவர் பலருக்கும் பொருளுதவி செய்ய ஏற்பாடு செய்தார்கள். அதனால்

பயனடைந்தவர் பலராவர். அவர்களில் திருவாளர்கள், செல்லையா முதலியார் B.A.B.L., இராமதாஸ் முதலியார் B.A.B L., கோபால முதலியார் L. M. P., மீனாட்சிசுந்தர முதலியார் முதலியோரைச் சிறப்பாகக் கூறலாம். இன்னும், பள்ளிச் சம்பளம் செலுத்த வகையில்லாத ஏழை மாணவர் பலருக்கும் பொருளுதவி தரப் பெற்றது. கல்லூரி வகுப்புக்களில் தேர்வுபெற்றுப் பலவகையிலும் நன்மதிப்பெய்தியவர் பலர். அவர்களுள்ளே, தற்போது வேலூர் நகரமன்றக் கண்காணிப்பாளராக (Municipal Commissioner) உள்ள, திரு. C. அமிர்தகணேச முதலியாரையும் T. தொப்பையாமுதலியாரையும், காலஞ்சென்ற வையாபுரி முதலியாரையும், இன்னும் சிலரையும் குறிப்பாகக் கூறலாம். வையாபுரி முதலியார் தமிழில் நிறைந்த பற்றும் திறமையும் வாய்ந்து விளங்கியவர். பலவகையான சங்க நிகழ்ச்சிகளிலெல்லாம் பங்கு கொண்டு, போட்டிகளில் கலந்துகொண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கம், வேறுபல தமிழ்ச்சங்கங்கள் ஆகிய இவற்றின் தேர்வுகளில் எழுதி வெற்றிகளும் பரிசுகளும் வாங்கினர் என்பது இங்கே குறிப்பிடவேண்டுவதாகும்.

1921—28

இல்லத்து நிர்வாகம் மறுபடியும் கோபாலசாமி முதலியாரவர்களிடம் வந்தது. அப்போதைய மாணவர் தொகை 79. பலகலைகளிலும் திறமையுடையவராகக் கோபாலசாமி முதலியாரவர்கள் விளங்கினமையால், கல்வி, விளையாட்டு, இயல், இசை, நாடகம் முதலிய பல துறைகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி முன்னேற்றம் செய்யவேண்டுமென ஆர்வங்கொண்டார்கள். அதற்கேற்ப, இல்லத்துக்குப் பலமுறையும் சென்று, மாணவர்களிடையே சங்கம் ஒன்று நிறுவி, அதன் தலைவராகத் தானே பலகாலம் இருந்து, சொற்பொழிவு, கட்டுரை எழுதல், கடவுளன்பு கனிந்த பாடல்களை இசையுடன் பாடுதல் முதலிய துறைகளில் மாணவர்கள் ஊக்கத்துடன் ஈடுபடும்படி செய்தார்கள்.

மேலும், மாணவர் விளையாட்டிடங்களுக்குப் பன்முறை தாம் செல்லுவார். சென்று இல்லத்து மாணவர்களைப் பற்பல ஆடல்களில் பங்கு கொள்ளும்படி செய்வதோடு, சிற்சில வேளைகளில் தாமும் அவர்களோடு சேர்ந்து விளையாடி, விளையாட்டில் மனங்கொள்ளாத மாணவர்களையும் அதில் ஈடுபடுத்துவார். இத்தகைய இவர்களது அரிய முயற்சிகள், மாணவர்கள் தக்க உடல் நலம் பெறுவதற்கும், விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் பரிசுகள் பல பெறுவதற்கும் பெரிதும் ஏதுவாயின. இதுமட்டுமா? சிலவேளைகளில் சிறுவர்களைத் தம்மிடம் கூட்டிவைத்துக்கொண்டு,

ஒழுக்கம், உலக அறிவு, வீரம் முதலிய அரும்பொருள்கள் அமைந்த சின்னஞ் சிறுகதைகளை அவர்களுக்கு நகைச்சுவை ததும்ப எடுத்துக் கூறுவார்.

இக்காலத்தில் இல்லத் தலைவர் திரு குமரப்பா முதலியாரவர்கள், உணவு வகையில் காணப்பட்ட குறைகளை நீக்கி, மாணவர்கள் கல்வி, ஒழுக்கம் முதலிய துறைகளில் சிறந்து விளங்குதற்கு ஏற்ற முறையில் தொண்டாற்றினர். பள்ளிகளில் அவ்வப்போது வழங்கப்படும் மாணவர் முன்னேற்றத் தாள்களைக் கூர்ந்து பார்த்து, பிற்போக்குடைய மாணவர்களைக் கண்டித்து நல்லுரை கூறியும், சிறு முற்போக்குடைய மாணவரை மேலும் மேலும் ஊக்கியும் நலம் செய்தார்கள். இராப் பொழுதில் மாணவர் வதியும் விடுதிகளுக்குச் சென்று கவனித்து வருவார். அதனால் மாணவர்கள் விடுதியை விட்டு வெளிச்செல்லும் வழக்கம் நின்றது.

முன்போலவே ஏழை மாணவர் பள்ளிச் சம்பளம் பெற்றனர். மேற்படிப்பு வகையில் மருத்துவம் பயில, V. இராமதாஸ், சட்டம் பயில, T. சீனிவாசன், சென்னை இராமகிருஷ்ணர் இல்லத்துக்கு திருவேங்கடம் ஆகியோரையும், V. சம்பந்தன் என்பவரை ஊமைப்பள்ளிக்கும் அனுப்பி ஆதரவு தந்தனர். இந்நிலையில் இல்லத்தின் அரிய பல தொண்டுகளில் ஊக்கங்காட்டி வந்த திரு கோபாலசாமி முதலியாரவர்கள் 1928-ஆம் ஆண்டில் மண்ணுலகை நீத்தார்கள்.

1928—29

எனவே; மறுபடியும் அவர்கள் தந்தையார் திரு. சடகோப முதலியாரவர்கள் அறநிலையக் காப்பாளராக அமைந்தார்கள். அக்காலத்தில் மாணவர் தொகை 78. மூப்பு, உடல் நலமின்மை இவை காரணமாக அவர்கள், இல்லத்தின் முன்னேற்றத் துறைகளில் தக்க பங்குகொள்ள முடியாது போயிற்று. எனினும் இதற்கு முன் இல்லம் அமைப்பதற்கு வாங்கிய இடத்தில் விரைவில் கட்டிடம் அமைக்க ஏற்பாடு செய்தார்கள். அடிப்படை அமைத்துக் கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டி முடிந்தது. இல்லத்தின் எல்லா வசதிகளும் கட்டிடத்தில் அமையும்படி திட்டங்கள் வகுக்கப்பெற்றன. இல்லத்தின் அமைப்பு தற்போது சிறந்து விளங்குவதற்கு அவர்களது அறிவின் மாட்சியே காரணமாகும். இல்லத்தின் ஏனைய பகுதிகளையும் முடித்து அதன் கம்பீரமான தோற்றத்தைக்கண்டு மகிழுவதற்கியலாமல் 1929-ஆம் ஆண்டில் சடகோப முதலியாரவர்கள் காலம் சென்றார்கள்.

1929—32

ஆகவே; 1929 முதல் அவர்களின் பேராகிய திருவாளர், கோ. பாலகிருஷ்ண முதலியாரவர்கள் அறநிலையங்களின் பாது காப்பை மேற்கொண்டார்கள். அப்போது அவர்களுக்கு 29 ஆண்டுகளே நிரம்பியிருந்தும் இத்தகைய பெரிய பொறுப்பை மன வலிமையோடு ஏற்றுக்கொண்டு இடையே தோன்றிய பல இன்னல்களுக்கும் அஞ்சாது இல்லம் முன்னேற்றமடையும் வகையில் தொண்டாற்றிவந்தது குறிப்பிடத்தக்கது. இந்த காலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 100-க்கு மேலிருந்தது. வசதிக் குறைவான விடுதிகளில் மாணவர் பலவகையில் வருந்துவது கண்டு, கட்டிட வேலைகள் விரைவாக நடைபெறும்படி ஏற்பாடுகள் செய்து, உணவுக்கூடம், சமயலறை முதலியன முடியும்படி செய்ததோடு, மாணவர் தங்குமிடத்துக்கு அடித்தளமும் போடப்பெற்றது. திரு. சாமிநாத முதலியார் என்பவர் சிறிது காலம் இல்லத் தலைவராக இருந்துவந்தார்.

பள்ளிகளில் நடைபெற்ற ஸ்போர்ட்ஸ்களிலும், ஜில்லா ஸ்போர்ட்ஸ்களிலும் இல்லத்து மாணவர்கள் இக்காலத்தில்தான் நிறையப் பங்குகொண்டு பலப்பல பரிசுகள் பெற்றுள்ளார்கள். குறிப்பாகத் தற்போது போலீஸ் துறையில் சப்-இன்ஸ்பெக்டராக இருந்துவரும், P. இராமசாமி என்பவர், மூன்று ஆண்டுகள்வரை (Grigg) மெடல் வாங்கிப் புகழ்பெற்றார். இன்னும் மாணவர்கள் சாரணர் இயக்கம், ரோவர் வகுப்பு ஆகியவைகளில் திறம்பட முன்னேறிச் சிறப்புற்றனர். அவர்களுள் தற்போது இங்கர் ஸ்பெஷல் தாசில்தாராக உள்ள திரு. P. சொக்கலிங்க முதலியார் அவர்களும், பட்டுக்கோட்டையில் ரெவெனியூ இன்ஸ்பெக்டராக விருக்கும் திரு. S. நாகலிங்க முதலியாரையும் குறிப்பாகச் சொல்லலாம். இவைதவிர, கல்வியிலும், சங்கக் கூட்டங்களிலும் சிறப்புற்றவர் பலர். அவர்களிற் சிலர் பின்வருமாறு:—

T. முத்தையா முதலியார், Assistant Engineer, Bellary.
T. S. குஞ்சிதபாதம், Commerce Dept., New Delhi.
காஞ்சென்ற கமலதியாகராச முதலியார், Asst. D. E. O

இவ்வாறு மாணவர்கள் பலதுறையிலும் சிறக்கச் செயல்புரிந்து புகழைப் பெருக்கினர்.

1933—36

நிர்வாகத்தில் சேர்ந்த சில சிக்கல்கள் காரணமாக 1932-இல் இல்லம் நடைபெறவில்லை. பிறகு 1933 முதல் 36 வரையில் அரங்கரின் புதல்வியாரான மாதுஸ்ரீ பத்மாசனி அம்மையாரின் அரிய நிர்வாகத்தின் கீழ் இல்லம் நடைபெற்றுவந்தது. இக்காலங்களில் மாணவர்கள் எண்ணிக்கை சராசரி 49. அறநிலையங்களின் முதல் ஸ்திரீ நிர்வாகி இவர்களேயாவர். தந்தையார் வகுத்துப்போந்த

அறங்களை வளர்க்கப் பெரிதும் ஆர்வமுடையவராய், முதலில் இல்லக் கட்டிடத்தை விரைவில் கட்டி முடிக்க ஏற்பாடு செய்தார்கள். மாணவர்களடைந்துவந்த பலவகைக் குறைபாடுகளை யெல்லாம் நீக்க எண்ணியவராய், தாமே அவைகளைப் பார்வையிட்டு அவை நீங்குமாறும், இல்லம் முன்னேற்றம் அடையும்படியும் ஏற்ற தொண்டுகள் செய்துவந்தது குறிப்பிடத்தக்கதாகும். அவர்களுடைய எண்ணங்களுக்கு உதவியாய் இல்லத்தின் தலைவராக திரு. சுந்தரேச முதலியாரவர்கள் பணியாற்றிவந்தார். மாணவர்களிடத்தே அன்புகாட்டி, அவர்கள் பலதுறையிலும் முன்னேறுவதற்கான வழிகளையும், திட்டங்களையும் தேர்ந்து வகுத்தார். மாணவர் சங்கம் திருத்தி அமைக்கப்பட்டது. நீதி மன்றம் ஒன்று நிறுவப்பெற்றது. அங்கே மாணவர் செய்யும் பிழைகளை மாணவர்களே விசாரித்து தக்க தண்டனை தருவர். இன்னும் கால அட்டவணை ஏற்படுத்தப்பெற்று அதற்கிணங்க இல்லத்தின் வேலைகள் தவறாது நடைபெற்றன. மாணவர்கள் விளையாட்டிலும், தோட்ட வேலைகளிலும் ஈடுபடுத்தப்பெற்றனர். மேலும் மாணவர்கள் இல்லப் பணிகளை ஏற்றுக்கொள்ளுமாறு தங்கள் காரியங்களைத் தாங்களே செய்துகொள்ளுவதில் எத்தகைய உயர்வு தாழ்வும் கருதாமல் இருக்கவும், கண்ணியமாக எவரிடத்தும் நடந்துகொள்ளவும் ஏற்ற முறையில், மிகுந்த உற்சாகத்துடன் சில பணிகளை இவர் செய்தது போற்றத்தக்கது. உள்ளம் ஒன்றுபட்டு மாணவர்கள் உருக்கமுடன் இசை பாடி இறைவனை வணங்கப் பயிற்சி தரப்பெற்றது. முதன்முதலாக, இல்லம் தந்த வந்தலின் இசை பரவ ஸ்தாபகர் தினவிழாக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்தார்.

1934-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மாணவர்கள் புது இல்லம் புகுந்தனர். இங்கு வந்தபின்னர், மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் முதலியவற்றை நன்கு கவனிக்கமுடிந்தது. அதன்மூலம் இல்லம் முன்னேற்ற வழியில் ஒரு கடிகாரத்தைப்போல் நடைபெற்றுவந்தது.

1936 முதல் இன்றுவரை திரு. பாலகிருஷ்ண முதலியாரவர்களின் பார்வையில் இல்லம் நடைபெறுகின்றது. சென்ற சில ஆண்டுகளில் குறைவாகவிருந்துவந்த மாணவர் தொகை, படிப்படியாக உயர்ந்து தற்போது 90 ஆகியுள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் இல்லம் அடைந்துள்ள முன்னேற்றங்கள் பலவாகும். வீட்டில் எப்படிப்பட்ட உணவு, சிற்றுண்டி முதலியவைகள் தரப்படுகின்றனவோ அதேபோல இங்கும் செய்தால்தான், வீட்டைப்பற்றிய எண்ணமின்றி மாணவர்கள் மனம் ஒன்றுபட்டுக் கல்வி பயிலுதல்கூடும் என்று கருதிய நிர்வாக டிரஸ்டியவர்கள், அதற்கான திட்டங்கள் வகுத்ததன்மூலம் அவைகள்

அவ்வாறே நடந்துவருகின்றன. மாணவர்கள் கல்விநலம் பெறுவதோடு, ஒழுக்கம், உடல் வலிமை, தொண்டு, பொது அறிவு, சொல்வன்மை, எழுத்துவன்மை, தம் வேலைகளைத் தாமே செய்து கொள்ளும் பழக்கம் முதலிய நலங்கள் வாய்ந்து சிறப்பதற்கான வகையில் சட்டதிட்டங்கள் பல அமைக்கப்பெற்றன. இதனால் இவ்வாண்டில் பலன் கிட்டியது. அட்டவணைக்கிணங்கிய இல்லத்தின் செயல்கள் ஒருநாள் முழுதும் இருந்து பார்ப்பவர்களுக்கு நன்கு புலனாகும்.

பள்ளிகளில் மாணவர்களின் கல்வித்திறமை, ஒழுக்கம் முதலியவற்றைத் தெரிந்துகொள்வதற்காக வார அறிக்கைத்தாள்கள் அச்சிடப்பெற்று அவைகள் பள்ளிகளுக்கு அனுப்பப்பெறுகின்றன. படிக்கும் நேரங்களை வரையறுத்து, அக்காலங்களில் மாணவர்கள் கவனக்குறைவின்றிப் படிக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. வகுப்புகளிலும் பரீட்சைகளிலும் மாணவர்களுக்குள்ள திறமை அவ்வப்போது அவர்களின் பெற்றோர்களுக்கு அனுப்பப் பெற்றதன் பயனாக, பிற்போக்குடைய மாணவர்கள் தனிமுறைக் கல்வி (Private tuition) பெற்றனர்.

மேலும் மாணவர்கள், சங்கம், சபை, விளையாட்டு, தோட்ட வேலை, இல்லப்பணி முதலிய துறைகளில் மனமுவந்து ஈடுபடுகிறார்கள். சட்ட திட்டங்களுக்காக ஏதும் செய்யவேண்டுமே என எண்ணாது, இவ்வில்லத்தின் நோக்கங்களை நன்குணர்ந்து, தமக்கு இவ்வில்லத்தால் கிடைத்த வாய்ப்பினைத் தக்க முறையில் பயன் படுத்திக்கொண்டு வாழ்க்கையில் உயரவேண்டும் என்ற உயரிய ஆர்வம் மாணவரிடையே காணப்படுகின்றது. பள்ளிகளில் அவர்கள் சென்ற ஆண்டுகளில் காட்டியுள்ள திறமையும், அவர்கள் ஆசிரியரிடத்தே பெற்றுள்ள நன்மதிப்புமே இதற்குத் தக்க சான்றுகளாகும். மாணவர்களின் ஒழுக்கநிலை செம்மையாகவே உள்ளது. இவைகளோடு இல்லம் அன்பு, அமைதி, அழகு என்னும் ஒளிகளோடு திகழுகின்றது.

மாணவர்களைப் பெற்றோர்கள் பார்க்க வரும்போதெல்லாம் இங்குள்ள வசதிகளைப் பார்த்துவிட்டு, "இப்படிப்பட்ட இடத்தில் உங்களுக்கு என்ன குறை, வீட்டில்கூட இவ்வளவு வசதிகள் செய்யமுடியாதே, படிப்பில் நீங்கள் ஏன் திறமையடையக் கூடாது?' என்று தங்கள் பிள்ளைகளிடம் கூறுவதுண்டு எனவே; ஏழை மாணவரில்லமாயினும், மாணவர்களுக்கு எவ்வகைக் குறையும் தாராத எழில்மிகுந்த மாளிகையாகவே இது திகழுகின்றது. இவைகளுக்கெல்லாம் எமது நிர்வாக டிரஸ்டியவர்கள் இல்லத்தின் முன்னேற்றத்தில் கொண்டுள்ள ஆர்வமே காரணமாகும்.

நிர்வாக டிரஸ்டி அவர்கள் தமதுபல அலுவல்களுக்கிடையே அடிக்கடி இல்லத்துக்கு வருவார்கள். அவ்வப்போது காணும் குறைகளைக் களைந்து ஏற்ற செயல் புரிவார்கள். வருங்கால உலக நலத்துக்கும், மரபு நலத்துக்கும் தம்மாலான தொண்டுகளைச் செய்தே தீரவேண்டும் என்னும் உயரிய உணர்ச்சியே இதற்குக் காரணம். இத்தகைய அவர்களது ஊக்கத்தினால், ரூ. 995 செலவில் இல்லத்துக்கு மின்சார விளக்குகளும், மாணவர் குளிக்கும் வசதிகளுக்கு ஓர் தண்ணீர் இறைக்கும் மின்னியக்கப் பொறி (Power Water Engine) யும் 1938ம் ஆண்டில் அமைக்கப்பெற்றன. 1940ம் ஆண்டில், மாணவர்கள் வசதியோடு படிப்பதற்கும் எழுதுவதற்குமாக, ஓராயிரம் ரூபாய் செலவில் மேசை நாற்காலிகள் வாங்கி வழங்கப்பெற்றன. மாணவர் பலவகை விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கேற்ற விளையாட்டுக் கருவிகளும் வாங்கி வழங்கப்பெற்றன. ஏழை மாணவர் பலருக்கு ஆண்டு தோறும் உதவிச் சம்பளம் தரப்பெற்றது. மாணவர் அறைகளின் முன்பும், இன்னும் மாணவர் கண்படும் இடங்களிலெல்லாம் வாழ்வினை உயர்த்தும் பெரியோர் பொன்மொழிகள் பல மாட்டப் பெற்றன. இவைகளைப் பன்முறை பார்ப்பதன் மூலம் மாணவர் வாழ்வு சிறக்குமல்லவா? இல்லத்தின் நாற்புறமும் உள்ள வெட்ட வெளியில், கனிதரும் மரங்களும், நிழல்தரும் மரங்களும், இறைவன் திருமேனியை அழகு செய்ய வரையாது மலர்தரும் பூம்பொழிலும் இல்லத்தைச் சூழ அமைக்கப்பெற்றன. வண்ணச் செடி வரிசையும், வண்ண மலர்ச்செடி வரிசையும் இடையே வாழ்வுக்கு வளந்தரும் வேம்பு வரிசையும் ஆகியவை இல்லத்தின் கருப்பொருள்களைக் காண விரும்பினவேபோல ஊடுருவிச் சென்று மாணவர் கண்களுக்கினிமையூட்டி, வாழ்வினை நலமுடையை தாக்குகின்றன. இவ்வாறு பலதுறையிலும் மாணவருக்குத் தொண்டாற்றும் இல்லம் தன்னை நிறுவிய வள்ளலின் நாளை ஆண்டுதோறும் ஓர் திருநாளாய்க் கொண்டாடி வருகின்றது.

இன்னும், இல்லம் முன்னேறுவதற்கான பல திட்டங்கள் வகுக்கப்பெறுகின்றன. அவைகளுள், இல்லத்தின் முன்பு வணக்கக் கூடமும், வேலை பார்ப்பவர்களுக்கு வீடுகள், நோயுற்றவர்க்கு மருத்துவ நிலையம், விளையாட்டு வெளியில் வானொலிப் பெட்டி, மாணவர் நீந்தியும், படகு விட்டும் இன்புறுவதற்கென ஒரு நீர்த் தேக்கம், சமய அறிவினையும் தமிழறிவினையும் மாணவர் பெறுதற் கேற்ற வகுப்புகள், ஓர் தனி நூல் நிலையம் ஆகிய இவைகள் அமைத்தலைச் சிறப்பாகக் கூறலாம். இன்னும் பள்ளி யிறுதிப் படிப்பு முடித்த மாணவர்களை சட்டம், விஞ்ஞானம், மருத்துவம் தமிழ்ப்புலமை, சிற்பம் முதலிய மேல்நிலைக் கல்விகளுக்கு அனுப்புவதற்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கூடிய விரைவில்

இத்திட்டங்கள் யாவும் நிறைவேறி இல்லம் எல்லா வகையானும் சிறந்து விளங்குமென எண்ணுகின்றோம்.

இல்லத்தின் முன்னேற்றத்திற்காக, சென்ற 25 ஆண்டுகளில் நற்பணி பல புரிந்த, இல்லக் காப்பாளர்கள், உண்மையும் கடமையு முணர்ந்து தொண்டாற்றிய இல்லத்தலைவர்கள். மாணவர் முன்னேற்றத்துக்குப் பெரிதும் துணைசெய்த ஆசிரியர்கள். இல்லத்தின் கருத்துக்களையுணர்ந்து, கடமை தவறாது இல்லத்துக்குப் பெருமை தந்த மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் பொன்னாளாகிய இந்த நன்னாளிலே எங்கள் உளமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம். அடுத்தபடியாக இல்லத்தினின்று படித்து வெளிப்போந்து ஏற்றம் அடைந்த பழைய மாணவர் பலர், தமது நன்றியறிதலைக் காட்டும் முறையில் பொருளுதவி செய்துள்ளனர். அவர்களுக்கும் எமது நன்றி உரியது. மூன்றாவதாக இன்றைய வெள்ளிவிழா பலவகையிலும் சிறப்பதற்கு உடலாலும் பொருளாலும் அன்போடு உதவிபுரிந்த மாணவர்களுக்கு எமது பாராட்டினைச் செலுத்துகின்றோம். இறுதியாக, உலகில் அறங்கள் தழைப்பதற்கும், அரங்கர் உள்ளம் அறத்துறையிலே படிந்து அதன்மூலம் இவ்வில்லம் தோன்றித் தொண்டு புரிவதற்கும், இன்றைய வெள்ளிவிழா இனிது சிறப்பதற்கும் கருவியாய் நிற்கின்ற கருணையங்கடலை, காலத்தொடு கற்பனை கடந்த கடவுளை, கனிந்த அன்பினால் வழுத்துகின்றோம்.

"அறத்தால் வருவதே இன்பம்"

(1918—1943)

அறநிலையக்காப்பாளர்கள்	இல்லத்தலைவர்கள்
திரு. S. கோபாலசாமி முதலியார் 27-12-1918—24-5-1919.	திரு. சாமிநாத முதலியார் 1918—1919.
திரு. S. சடகோப முதலியார் 5-10-1919—1-2-1921.	திரு. சித்தையா முதலியார் 1919—20
திரு. S. கோபாலசாமி முதலியார் 1-2-1921—15-7-1928.	திரு. நடராஜ முதலியார் 1921—1922
திரு. S. சடகோப முதலியார் 15-7-1928—9-3-1929.	திரு. குமாரப்ப முதலியார் 1922—1927
திரு. G. பாலகிருஷ்ண முதலியார் 9-3-1929—15-2-1932.	திரு. சாமிநாத முதலியார் 1930
மாதுஸ்ரீ பத்மாஸனி அம்மை 27-3-1932—4-4-1936.	திரு. சிங்கார முதலியார் 1932
திரு G. பாலகிருஷ்ண முதலியார் 5-4-36—	திரு. S. சுந்தரேச முதலியார் 1932—36
	திரு. V. கோபாலசாமி முதலியார் 1936—

1918–43

காலம்	மாணவர் எண்	உதவிச்சம்பளம் ரூ.	அ.	பை.	மேற்படிப்பிர்கு உதவி பெற்றவர்	தொகை ரூ.	அ.	பை.
1918	48	189	0	0	மீனாட்சிசுந்தரம் (1918—25)	319	12	0
1919	67	306	6	0	M. திருவேங்கடம் (1921—25)	978	14	3
1920	76	244	4	0	C அமிர்தகணேசன் (1921—22)	41	0	0
1921	67	47	8	0	S. கமலதியாகராசன் (1924—25)	18	0	0
1922	79	49	8	0	S. கோபாலகிருஷ்ணன் (1929—30)	136	0	0
1923	62	31	4	0	P. சொக்கலிங்கம்	50	0	0
1924	71	29	4	0	R. குப்பையா (1918—19)	124	0	0
1925	81	118	0	0	R. கோபால் (1918—23)	760	0	0
1926	83	132	2	0	(வைத்திய படிப்பிற்கு)			
1927	78	84	2	0	V. இராமலிங்கம் (1927—30)	355	0	0
1928	72	104	2	0	C. சிவசுப்பிரமணியம் (1918—23)	748	0	0
1929	84	184	12	0	(சட்டப்படிப்பிற்கு)			
1930	82	423	8	4	M. இராமதாஸ் (1920)			
1931	73				(சட்டப்படிப்பிற்கு)	200	0	0
1932	104				T. S. சீனிவாசன் (1922—23)	100	0	0
1933	47	216	2	0	T. சம்பந்தன் (1920)	30	0	0
1934	47	31	0	0	R. சம்பந்தன் (தமிழ்) (1921—22)	38	0	0
1935	38	62	0	0	T. கோபாலகிருஷ்ணன் (1943)			
1936	37				(காலேஜ் வகுப்புக்கு) ,,	500	0	0
1937	35	36	12	0	M. முத்துக்குமாரசாமி ,,			
1938	40	34	12	0	M. முத்துக்கிருட்டினன் ,,			
1939	60	148	0	0	V. R. நாராயணசாமி	250	0	0
1940	69	126	4	0	(தமிழ்)			
1941	75	62	6	0				
1942	88	79	5	0				
1943	90	250	0	0				

ஸ்தாபகர் தின விழாக்கள்.

ஆண்டு	தலைவர்கள்	சொற்பொழிவாளர்கள்
1933	திரு. ஹார்ட்லி துரை	திரு. N. G. பொன்னையா B.A.
1937	ராவ்பகதூர் N. R. சாமியப்ப முதலியார், M.L.C., நெடும்பலம்.	திரு. C. சிவசுப்பிரமணிய முதலியார் B A.B.L.
1938	,, K.G. சீனிவாச முதலியார், மன்னார்குடி.	திரு. C. அமிர்தகணேச முதலியார் B. A.
1939	திரு. S. A. அய்யாசாமிச் செட்டியார் M.A.B.L., (ஜில்லா முனிசீப், மன்னார்குடி.)	திரு. P. சீனிவாசலு நாயுடு M A. (தத்துவ ஆசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
1940	திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார், B.A.B.L., திருநெல்வேலி.	திரு. A. சிதம்பரநாதஞ் செட்டியார் M. A. (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
1941	திரு. T. V. அப்பர்சுந்தர முதலியார், (M.A.M. Ed. Leeds) தஞ்சை ஜில்லா கல்வியதிகாரி.	திரு. ரா. பி. சேதுப்பிள்ளை B.A.B.L., சென்னைச் சர்வகலாசாலை.
		திரு. S. K கோவிந்தசாமி பிள்ளை M.A. (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.)
1942	திரு. சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் B.A., கோவை.	திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை B.O.L., முத்தியாலுபேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

வே. கோபாலசாமி,
இல்லத்தலைவன்.

மாணவரும் கடவுள் வழிபாடும்.

அருட்டிரு, சுவாமி விபுலாநந்தர் B. Sc., (London)
பேலூர் மடம், ஹௌரா, வங்காளம்.

வஸந்த பஞ்சமி. இப்புண்ணிய தினத்திலே வங்க நாட்டிலுள்ள மாணவர்கள் சரஸ்வதி தேவியை வழிபடுகின்றார்கள். 'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும்' தேவியின் அழகிய திருவுருவத்தைக் கைவல்ல சிற்பாசாரிகள் மண்ணினாற்செய்து வர்ணந்தீட்டி விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள். இத்தகைய உருவத்தை வாங்கிவந்து வெண் பூமாலை சூட்டி வழிபாடாற்றுவது வழக்கம். மாணவர்களும் இசைவல்லோரும் தொழிலாளர்களும் தங்கள் புத்தகங்களையும் எட்டுச்சுவடிகளையும் இசைக் கருவிகளையும் தொழிற் கருவிகளையும் திருவுருவத்தைச் சூழவைத்து அவை தம்மையும் கலைமகளுருவாக நினைத்துப் பூசை புரிவார்கள். வெள்ளிக் கலசத்திலோ வெண்கலக் கலசத்திலோ மாவிலை தேங்காய் வைத்துக் குங்குமப் பொட்டிட்டு நீர் நிறைத்துக் கலசத்திலே தேவியை ஆவாகித்துப் பூசையைத் தொடங்கவேண்டும். அவல், சர்க்கரை, தேங்காய்ப்பழம், கனிவகைகள், தித்திப்புப் பண்டங்கள் என்னுமிவை தேவிக்குத் திருவமுதாகப் படைக்கப்படுவன. இசை மடந்தையாகிய பாமகளுக்கு இசையோடு கூடிய பாடல்கள் உவப்புடையனவாதலின், பாடகர்கள் இனிமையான கீதம் பாடுவார்கள். கல்வித் தெய்வத்தை வழிபடுவோர் அகமும் புறமுந் தூய்மையாயிருக்கவேண்டுமாதலின், எல்லோரும் கங்கையில் நீராடி வெள்ளை வஸ்திரந் தரித்துக்கொள்வார்கள். பஞ்சமித் தினம் முழுவதும் வழிபாடு நடக்கும். அடுத்த நாள் காலையிலும், சாயங்காலத்திலும் வழிபாடாற்றியபின் திருவுருவத்தை எடுத்து மேளதாளத்தோடு ஊர்வலஞ்செய்து கங்கைக்கரையை யடைந்து கங்கையிலே விட்டுவிடுவார்கள்.

வேலூர்த் திருமடத்துப் பெரியகோயில் மண்டபத்திலும், மடத்தைச்சார்ந்த கலாசாலையிலும், கைத்தொழிற் பள்ளிக்கூடத்திலும் தனித்தனியாக கலைமகள் வழிபாடு நடந்தேறியது. இவ்வித வழிபாடு புறத்தே செய்யும் பூசனையாகும். அகத்தே செய்யும் பூசனையும் ஒன்று உண்டு. இருதய கமலமாகிய பதும பீடத்திலே, பதுமாசன நிலையிலே அமர்ந்து மறுநீங்கிய சரத் காலத்துப் பூரணசந்திரன் போன்று ஒளிருகின்ற தேவியின் திருவுருவத்தையும், புத்தகம், படிகமாலை, அமிர்தகலசம், சின்முத்திரை தாங்கிய நான்கு திருக்கரங்களையும், புன்முறுவல் பூத்த திருமுகத்தையும் அகக்கண்ணினாலே நோக்கி,

'ஆஸநம் ஸ்வாகதம் பாத்யம் அர்க்கியம் ஆசமநீயகம்
மதுபர்கஸ் ததாசம்யம் ஸ்நாநீயம் வஸ்த்ர பூஷணே
கந்த புஷ்பே தூபதீபௌ நைவேத்யம் வந்தநம்ததா'

என மஹாநிர்வாணதந்திரத்திற் கூறியபடி 1. ஆசனம் (இருக்கையளித்தல்) 2. ஸ்வாகதம் (வரவேற்று இன்சொற் கூறல்) 3. பாத்யம் (கால் கழுவ நீர்தரல்), 4. அர்க்கியம் (நீர், பால், தருப்பை, தயிர், நெய், அன்னம் முதலியவற்றைத் திருமுன்னிலையில் வைத்தல்), 5. ஆசமநீயம் (முக்குடி நீர்தரல்), 6. மதுபர்க்கம் (தேன், பால், தேங்காய்த்துருவல் கனிவர்க்கம் முதலியவற்றை உண்ணத்தருதல்), 7. ஆசமனம் (முக்குடி நீர்தரல்), 8 ஸ்நாநம் (நீராட்டல்), 9. வஸ்திரம் (ஆடை சாத்துதல்), 10. பூஷணம் (ஆபரணஞ் சாத்தல்), 11. கந்தம் (வாசம்பூசுதல்), 12. புஷ்பம் (மலர் சூட்டல்), 13. தூபம் (நறும்புகை காட்டல்), 14. தீபம் (விளக்கு ஏந்துதல்), 15. நைவேத்யம் (திருவமுது ஊட்டல்), 16. வந்தனம் (புகழ்பாடுதல்) என்னும் பதினறு உபசாரங்களையும் மனத்தினுற் செய்து தேவியை வழிபடுதல் அறிவுடையோர் செய்யும் மானத பூஜையாகும்.

கார்த்திகை மாதத்து நிறைமதி நாளாகிய பௌரணமியிலே வங்க நாட்டினர் அழகுத் தெய்வமாகிய மஹாலக்ஷ்மியை வழிபடுவார்கள். ஐப்பசி கார்த்திகை மாதங்கள் சரத்காலமாகும். இக்காலத்திலே சந்திரன் மற்றெல்லா காலங்களைப் பார்க்கிலும் மிகுந்த அழகோடு விளங்குவான். பாற்கடல் கடைந்த காலத்திலே, சந்திரதேவனும் இலக்ஷ்மிதேவியும் உடன்பிறந்தனரெனப் புராணங்கூறும். 'திரு' என்னும் தமிழ்ச் சொல் புறத்தும் அகத்தும் அமைந்த அழகினைக் குறியீடு செய்யும். ஆதலினுலே தமிழர் அழகுத் தெய்வத்தைத் திருமகள் என வழங்கினர். செந்தாமரை மலரினை ஆசனமாகக் கொண்டமையின், திருமகளாரைச் செங்கமலநாச்சியார் என்பர். சரஸ்வதி தேவியைப் புறத்தும் அகத்தும் வழிபட்டதுபோல இலக்ஷ்மிதேவியையும் வழிபடலாம்.

வானகத்தும் மண்ணகத்தும் வயங்குசுடர் நீயாயின்
கானகத்தும் பொழிலகத்தும் கருதுமெழில் நீயாயின்
ஞானகத்துக் கொண்டனநின் நளினமலர்ப் பதமாயின்
தேனகத்த வனசமொன்றே திருப்பீட மாவதுவே

கோபாலன் திருமார்பிற் குலவுமொளி நீயாயின்
பூபாலர் தடந்தோளிற் பொலிவனப்பு நீயாயின்
நாவார வழுத்துவநின் னளினமலர்ப் பதமாயின்
பூவாரும் பதுமமொன்றே புதுப்பீட மாவதுவே

பொன்னீர்கேல் மணியணிசேர் புகழினமை நீயாயின்
மென்னீர இடைமடவார் வியனெழிலும் நீயாயின்
நன்னீா ருளத்தனின் னளினமலர்ப் பதமாயின்
செந்நீர்மைக் கமலமொன்றே திருப்பீட மாவதுவே

எனத்துதித்து இருதய கமலமாகிய பீடத்திருத்தி மஹாலக்ஷ்மி தேவியை மானத பூஜையாக வழிபடலாம்.

தீபாவளி தினத்திலே காளிதேவியை வழிபடுவார்கள். காளிதாசன் முதலிய பெரும்புலவர்கள் காளிதேவியை வழிபட்டுக் கவிபாடும் வல்லமையைப் பெற்றார்கள்; அரசர்கள் வழிபட்டுப் பகைவர்களை வென்றார்கள். மகிஷாசுரனை யழித்துத் தேவர்களைக் காப்பாற்றிய துர்க்காதேவியின் வழிபாடு புரட்டாதி மாதத்திலே நவராத்திரி காலத்திலே நடக்கும். ஒன்பது நாட்களின் ஈற்றிலே விஜயதசமியன்று தேவி வெற்றிபெற்ற நாளாகும். துர்க்காதேவியைப் பழந்தமிழர் போர்க்களத்திலே, வெற்றிவெல் போர்க் கொற்றவை யெனும் பெயரோடு வழிபட்டார்கள். இக் காலத்திலே தென்னாட்டிலே துர்க்கை, இலக்ஷ்மி, சரஸ்வதியாகிய மூன்று தெய்வங்களையும் நவராத்திரி காலத்திலேதான் வழிபடுகிறார்கள். சத்தி வழிபாடு வங்கநாட்டிலேதான் சிறப்பாக நடக்கிறது.

தென்னாட்டிலே சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும், பழைமை பொருந்திய சுப்பிரமணிய ஆலயங்களும் இருக்கின்றன. இமயமலைச் சாரலிலேயமைந்த வதரிநாராயணமும், கேதார நாதமும், இமயத்திற்கு வடபாலிலுள்ள திருக்கைலாசமும், யமுனைக் கரையிலமைந்த பிருந்தாவனமும், கங்கைக்கரையிலமைந்த காசியும். கிழக்குக் கடலோரத்திலுள்ள பூரிஜகந்நாதமும் வடநாட்டிலுள்ள சிறந்த சிவவிஷ்ணுவாலயங்களாகக் கருதப்படுவன. இவ்வாலயங்களுக்கெல்லாம் தென்னாட்டிலிருந்தும் அநேக யாத்ரீகர்கள் போகிறார்கள். தென்னாட்டிலுள்ள திருப்பதி, திருவரங்கம், சிதம்பரம், மதுரை, இராமேசுரம், கன்னியாகுமரி முதலிய ஆலயங்களுக்கு வடநாட்டார் யாத்திரை புரிவார்கள்.

மாணவர்கள் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதியை வழிபடுதலைக் குறித்துத் தொடக்கத்திலே விரிவாகக் கூறினும். எல்லா மாணவரும் தத்தம் சமயநெறியிற்கேற்ப ஆலயத்திற்குச் சென்று வழிபாடியற்றலும் சமயப்பிரவேசமாகிய தீக்ஷை பெற்றுக்கொள்ளுதலும் இன்றியமையாதன கல்வி, கேள்வி, கோயிற் பழக்கம் ஆகிய மூன்றும் மாணவர் அறிவு பெறுதற்குரிய வழிகளாம். முன்னாளிலே மாணவர்கள் குருவுக்குப் பணிவிடை

செய்துகொண்டு நகரத்துக்குப் புறம்பாகிய தவச்சாலைகளிலே வாழ்ந்து கல்வி கற்றூர்கள். அக்கல்வியானது உலக விவகாரத்திற்கு வேண்டிய கலையறிவையும் பாரமார்த்திக ஞான அறிவையும் ஒருங்கு அளித்தது. இக்காலத்திலே பழைய குருகுலங்களை முன்னுளிலமைந்த மாதிரியாக நடத்தமுடியாதெனினும் மன்னூர்குடி மாணவரில்லம் போன்ற நிலையங்கள் இயன்றவரை பழைய குருகுலவாசங்கள் போன்று அமைதல்வேண்டும்.

"கேவலம் வயிற்றுப் பிழைப்புக்கு வேண்டிய கல்வி பயிலேன்; ஆண்டவனை அறிகின்ற கல்வியே நான் வேண்டுவது" என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சதேவர் தமது இளமைப் பருவத்திலே கூறினர். மேனுட்டுக் கலையறிவு நிரீச்சுரவாதக் கொள்கைகளைப் பரப்பிவரும் இக்காலத்திலே கடவுள் வழிபாடு மாணவர்களுக்கு இன்றியமையாத சாதனமாகும்.

கோட்டூர் அரங்கசாமி முதலியார் மாணவரில்லம் சிறப்புற்றோங்கத் திருவமர்மார்பனும் திருமகளாரும், சரஸ்வதி தேவியும் திருவருள் பாலிப்பாராக. இருபத்தைந்தாண்டு திறம்பெற நடைபெற்று அநேக மாணவர்க்கு உணவும் கல்வியும் உறையுளும் அளித்த இந்நிலையம் தனது நூற்றூண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடும் எல்லையின்மேலும் நிலைபெற்றிருப்பதாக. இங்குக் கலை பயிலுகின்ற மாணவர்கள் உடலுறுதியும் மனவலிமையும் வாய்க்கப்பெற்று ஆண்டவன் பணியும் தமிழ்நாட்டுப் பணியுஞ் செய்து இன்புற வாழ்வார்களாக.

கோடை மலர்.

ரா. பி. சேதுப் பிள்ளை B.A., B.L.,
தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.

தமிழ்நாட்டில் தொன்றுதொட்டுச் சீரும்சிறப்பும் வாய்ந்து விளங்கும் குலத்தார் வேளாளர் ஆவர். பழுதற்ற வேளாண்மையே அவர் தொழில்; பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பான்மையே அவர் பண்பு. அரசர் ஆக்கமும், வீரர் ஆண்மையும், அறிஞர் ஊக்கமும், வேளாளர் இயக்கமும் மேழியால் விளைவனவே என்று தமிழ்க்கவிஞர் வியந்துரைப்பாராயினர். சீரைத் தேடின் ஏரைத்தேடு என்று பணித்தனர் சான்றோர்.

இத்தகைய பெருங்குலத்திற் பல்லாற்றானும் சிறப்புற்றோர் முதன்மையார் (முதலியார்) என்னும் பட்டம் எய்தினர். இவர் பெருமையைக் கவியும் பேசும்; கல்லும் சொல்லும். கவியரசராகிய கம்பரை ஆதரித்து அழியாப் புகழ்பெற்றார் காவிரிநாட்டுச் சடையப்ப முதலியார். அவர் வறுமையின் பெரும் பகைவர்; தஞ்சம் அடைந்தோரைத் தாங்கும் தகைமை சான்றவர்; ஒருமையே மொழியும் பெருமையாளர். இவ்வள்ளலின் புகழ் மணம் கம்பர் கவியிலே கமழ்கின்றது.

நானூறு ஆண்டுகட்கு முன்பு தொண்டை நாட்டிலே தோன்றினர் அரியநாதர் என்னும் முதலியார். ஆண்மையாலும் ஆன்ற மதிநலத்தாலும் அரசரது நன்மதிப்பைப் பெற்றார்; தளவாய்ப் பட்டம் எய்திப் பாண்டி நாட்டு அமைச்சராயினர்; பகைவர்களை அடக்கினர்; பாளையங்களை நிறுவினர்; பாசனங்களைப் பெருக்கினர்; அறப்பணிகளை ஆக்கினர். இன்னும் ஆலவாயிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் பரிச்சிலையில் நின்று அறத்தின் நீர்மையை அறிவிக்கின்றார்.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் மன்னார்குடியைச் சார்ந்த கோட்டூரில் அரங்கசாமி முதலியார் தோன்றினர்; தென்கலையும் வடகலையும் தேர்ந்துணர்ந்தார்; வறுமையால் வருந்தி வந்தோரை ஆதரித்து அவர் திருந்திய முகங்கண்டு திளைத்தார்; வரிசை யறிந்து புலவர்க்குப் பரிசளித்தார்; வழிவழியாக வந்த

விழுமிய பொருளை அறத்திற்கே உரிமையாக்கினர். இவர்பால் அமைந்த அன்பின் இனிமையை அறிந்த ஆன்றோர் "கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே, தருநிழலே" என்று வாயாரப் பாடி வாழ்த்தினர்.

புலவர் பாடும் புகழமைந்த கோடைத் தருவிலே பூத்த நறுமலர் இன்று மன்னர்குடியிலே மணங்கமழ்கின்றது. அறவோர்க்கு விருந்தளிக்கும் அன்னசாலை ஒருபால்; வடகலை ஓதும் பாடசாலை ஒருபால்; ஆங்கிலம் பயிலும் இளைஞர் வாழும் மாணவர் இல்லம் ஒருபால். இவ்வாறாக அந்நகரில் எம்மருங்கும் அரங்கனார் அறமே விளங்குகின்றது.

அவ்வள்ளலார் நிறுவிய அறநிலையங்களைக் கண்ணினைக் காக்கும் இமைபோல் அறங்காப்பாளர் காத்து வருகின்றனர். இன்று வெள்ளிவிழா நிகழ்த்தும் பேறுபெற்ற மாணவர் இல்லத்தை பலவகையானும் சிறப்புற நடத்திக் குலநலம் பேணும் குறிக்கோள் இவர்கள் உள்ளத்திற் குடிகொண்டுள்ளது. இப்பொழுது எழுந்துள்ள போரும் புகையும் ஒழிந்து, சீரும் ஒளியும் திகழுங் காலத்தில் இம்மாணவர் இல்லம், அரங்கனார் மரபைச் சேர்ந்த ஏழை மாணவர் எந்நாட்டவராயினும், எத்தொகையினராயினும், அவரனைவர்க்கும் "அடையாத வாயில் அகமாய்" விளங்கும் என்பதில் ஐயமில்லை. மேழிச்செல்வத்தை ஏழை மாணவர்க்கு அளித்து அவருள்ளமே கோயிலாக்கொண்ட அரங்கநாதர் புகழும், அவர் வகுத்த அறத்தினைத் திறம்பட நடத்தும் ஆணையாளரும் பல்லாண்டு வாழும்வண்ணம் இறைவன் திருவருளை வேண்டுகின்றேன்.

சங்க இலக்கியமும், ஆழ்வார்களும்.

ரா. ஸ்ரீ தேசிகன் M A.
ஆங்கில விரிவுரையாளர், பிரசிடென்ஸி கல்லூரி, சென்னை.

ஆண்டவன் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்த ஆழ்வார்களுக்கும், சங்க இலக்கியத்திற்கும் என்ன சம்பந்தம்? என்று ஒருவர் வினவலாம். ஆழ்வார்கள் இயற்றிய பாடல்களைத் துருவி ஆராய்ந்தால், சங்க இலக்கியத்தில் அவர்கள் மனம் எப்படி ஈடுபட்டிருந்தது என்ற விஷயம் நன்கு புலனாகும். சங்க இலக்கியமே ஆழ்வார்களின் பாடல்களிலிருந்து ஏன் விளைந்திருக்கக்கூடாது? என்ற கேள்வியும் பிறக்கலாம். ஆனால் நவீன சரித்திர ஆராய்ச்சிக்கு முன் ஆழ்வார்களைப்பற்றி எழுந்த புராணங்களும், கட்டுக் கதைகளும் வலிவிழந்து ஓட ஆரம்பித்துவிட்டன. துவாபர யுகம் கிருத யுகம் முதலிய யுகங்களில் ஆழ்வார்கள் தோன்றினார்கள் என்பதற்குச் சான்றுகளில்லை. சங்க காலத்திற்குப் பிறகே அவர்கள் உதயமானார்கள் என்ற உண்மை நாளுக்கு நாள் பலப்படுகின்றது.

சங்க இலக்கியத்தில் காணப்படும் முக்கிய அம்சங்கள் எவை? அவைகள் எப்படி ஆழ்வார்களிடத்தில் பிரதிபலித்திருக்கின்றன? என்ற விஷயங்களை நோக்குவோம்.

சங்க இலக்கியத்தில் காதலும் வீரமும் தழைத்தோங்கி நிற்கின்றன. இவ்விரு அம்சங்கள் ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படுகின்றன. ஆனால் நாட்கள் கழியக் கழிய இவைகள் தேய்ந்து போய்விட்டன. உண்மையான காதலும் மறைந்து போய்விட்டது. வீரமோ செயலிலும் இல்லை, சொல்லிலும் இல்லை. ஆனால் சங்ககாலத்தில் கேட்ட இவ்விரு உணர்ச்சிகளின் ஒலியைப் பாரதியில் கேட்கின்றோம். அதனால் இவைகள் வேரொடு வெந்துபோய்விட வில்லை என்று தெரிகிறோம்.

உணர்ச்சிகள் அழிந்துபோகா. ஏதாவது ஓர் உருவத்தை ஒவ்வொரு உணர்ச்சி எடுத்துக்கொண்டு விடுகிறது. காதலை வெறுத்த நம்மாழ்வார் "திருவிருத்தம்" பாடுகிறார்; காதலை வெறுத்த மாணிக்கவாசகர் "திருக்கோவையார்" பாடுகிறார். அகத்துறை இலக்கணம் முழுவதும் ஆழ்வார்களும், நாயன்மார்களும் அருளிய பாசுரங்களில் பார்க்கிறோம். மனிதக் காதல் தெய்வக்காதலாக மாறிவிட்டது. கடவுள் தலைவனாகிவிடுகிறான். ஆழ்வார் தலைவியாகிறார். காதற் துறையில் நிகழக்கூடிய பல சந்தர்ப்பங்களை அழகுபெற அமைத்து ஆழ்வார்கள் பாடுகிறார்

கள். இம்முறை புதிய முறையன்று. வெகு காலத்திற்கு முந்தியே இது கையாளப்பட்டிருக்கிறது. ஹீப்புரு கவி சாலமன் (Solomon) இம்முறையில் பாடியிருக்கிறார். காதலை ஒருவிதமாக நாம் ஒப்புக்கொண்டாலும், வீரம் அவர்களிடத்தில் இருப்பதற்கு இடமில்லையே என்ற கேள்விக்குச் சமாதானம் வேண்டுமல்லவா?

சங்க இலக்கியத்தில் காணப்படுகிற வீரமெல்லாம் புறவைரிகளை வென்று வாகை சூடிய நிலையே தவிர பிறிதில்லை. இவ்வாழ்வார்களிடத்திலும், நாயன்மார்களிடத்திலும் காணப்படும் வீரமோ ஒரு தனிச்சுடர்விட்டெரியும் வீரம். உட்பகையை வென்றவர்கள் அரக்கிலச்சினை செய்து புன்புல வழியடைத்து நன்புல வழி திறந்து ஞான நற்சுடர் கொளுத்தினவர்கள். இப்படி செய்கிறவனை தீரன் என்று உபநிஷத்துக்கள் சாற்றுகின்றன. கள்ளத்தனமாய் நடமாடி உள்ளதைச் சூறையாடுகிற குறும்பர்களை அடியோடு மாய்த்து, மரணத்தையும் எதிர்த்துப் போர் புரிந்து அமர வெற்றிக்கொடியை நாட்டிய மஹாபுருஷர்கள் அவர்கள்.

“பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை”

என்று முரசடிக்கிறார் நம்மாழ்வார். “நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்” என்று வெற்றிச்சங்கை ஊதுகிறார் அப்பர்.

இச்சுருதியில் அவர்கள் வீரம் பேசுகிறது. காதலைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. சங்க காலத்து அகத்துறை இலக்கணத்திற்கு இவர்கள் பாடல்களை உதாரணங்களாகக் கொடுத்துவிடலாம்.

அகத்துறையில் காணப்படும் சில பாடல்களையெடுத்துக் கொள்ளுவோம்.

தலைவன் கூடுகிறபொழுது, தலைவியின் மகிழ்ச்சிக் கெல்லை இல்லை. அவனைப்பிரிந்த நிலையில் அவள் வேதனையோ சொற்கடந்த வேதனையாய் முடிகிறது.

ஒரு நிசி: இருளோ செறிந்த இருள். மக்களின் சொல்லோ அவிந்துபோய்விட்டது. உலகம் தூங்குகின்றது, என் கண்கள் மட்டும் அயரவில்லை. நான் தூங்காது கங்குல் வெள்ளத்தைப் பார்த்து நிற்கின்றேன்.

நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓஒயான் மன்ற துஞ்சா—தேனே. (குறுந்தொகை)

இதே கருத்தை வள்ளுவர் ஒரு குறளில் பாடியுள்ளார். காதல் வெள்ளத்திற்குக் கரை காண்கிலேன். என்னைத்தவிர வேறு ஒருவருமில்லை

காமக்கடும் புனனீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளன்

இக்குறள் ஒரு சித்திரமாக நம்மாழ்வார் பாடலில் அமைந்து கிடக்கிறது.

"ஊர் அடங்கிவிடுகிறது உலகம் யாவையும் நள்ளிருள் போர்த்துவிடுகிறது; இருள் வளர்கிறது. என் ஆவியை யார் காப்பார்? சர்ப்பசயனன் வராதபோனல்" என்று விரிந்துகிடக்கிற இருளைப்பார்த்து தலைவி ஓலமிடுகிறாள்

ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய்
நீரெல்லாம் தேறி ஓர் நீளிரவாய் நீண்டதால்
பாரெல்லாம் உண்ட நம்பாம்பணையான் வாரானல்
ஆர்? எல்லே! வல்வினையேன் ஆவிகாப்பார் இனியே.
(திருவாய்மொழி.)

இப்பாட்டின் நீண்ட ஓசையிலே இருளின் நீளத்தை உணர்கிறோம். கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதன்றோ! தனித்த நிலையில் தலைவனுக்கு நாரையைத் தூதுவிடுகிற முறைக்கு மூலம் சங்க இலக்கியத்தில் இருக்குமெனத் தோன்றுகிறது.

இங்கே மலைக்குப் பக்கத்தில் ஒருவருமில்லை. தினையின் தாள்போலக் கால்களையுடைய நாரை சலசலவென்று ஓடுகின்ற அருவியில் மீனை நாடி நிற்கின்றது. என்னைக்கூடிய தலைவன் தப்பினல் நான் என்ன செய்வேன்? வேறு சாட்சியில்லையே" என்று தலைவி புலம்புகிறாள்

"யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே" (குறுந்தொகை)

இந்த நாரைக்குத்தான் தன் காதல் ரகசியம் தெரியுமென்று திருமங்கை மன்னன் தலைவி நிலையை அடைந்து நாரையைத் தூது விடுகிறார்.

திருக்கண்ணபுரத்துள்ள என் நாதனுக்கு என் காதலை, உரைத்தால், இதைப்போல எனக்கு இன்பமில்லை. உனக்கு மீன் கவர்ந்து உண்ணத்தருவன். தந்தால் நீயும் உன் பெடையும் இனிதிருக்கலாம்.

செங்கால்மடநாராய்! இன்றே சென்று
திருக் கண்ணபுரம்புக்கு என் செங்கண் மாலுக்கு
என்காதல் என் துணைவர்க்கு உரைத்தியாகில்
இதுவொப்பது எமக்கின்பமில்லை நாளும்
பைங்கான மீதெல்லாம் உனதேயாகப்
பழன மீன்கவர்ந்துண்ணத்தருவன் தந்தால்
இங்கே வந்து இனிதிருந்து உன் பெடையும் நீயும்
இருநிலத்தில் இனிதின்ப மெய்தலாமே.
(திருநெடுந் தாண்டகம்)

மேலும் காதல் இல்லையேல் சாதல் என்ற வழக்கைச் சங்க காலத்தில் மடலேறுதல் மூலம் காதலன் தெரிவித்துள்ளான். இம்மடலேறுதல் விஷயமாகத் திருமங்கை மன்னன் 'சிறிய மடல் பெரிய மடல்' என்ற இரு மடல்களைப் பாடியிருக்கிறார். மடலேறுதல் ஆடவர்க்கே உரியது; தலைவிக்குப் பொருத்தமில்லை இதை மனத்தில் வைத்தே திருமங்கை மன்னன் பின் வருமாறு பாடுகிறார்

மன்னும் வழிமுறையே நிற்றும் நாம் மானோக்கின்
அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம்
மன்னும் வட நெறியே வேண்டினோம்......
(பெரியதிருமடல்)

வடநெறியை அதாவது பிராயோபவேசத்தை ஆழ்வார் விரும்புகிறார். மலைக்காட்டில் தனியே மலர்ந்து தன் மணத்தை இழக்கும் ஒரு வல்லிக்கடி மலரின் நிலைபோல என் நிலை இருக்கிறது என்று உள்ளங் கரைகிறார் ஆழ்வார்

கல்நவிலும் காட்டகத்து ஓர்வல்லிக் கடிமலரின்
நல்நறு வாசம் மற்றாரானும் எய்தாமே
மன்னும் வறுநிலத்து வாளாங்கு குத்தது போல்"

என் அழகெல்லாம் உதிர்கின்றன என்று உள்ளம் நைகின்றார். தலைவன் தலைவியைக் கூடிய பிறகு அவளை அழைத்துச் சென்றுவிடுகிறான். பெண்ணை இழந்த தாய் புலம்புகிற வழக்கம் தன் பெண் ஆண்டாளை இழந்ததனால் எழுந்த சுடுசோகத்தைப் பெரியாழ்வார் இம்முறையில் வைத்துப் பாடியிருக்கிறார்.

நல்லதோர் தாமரைப் பொய்கை நாண்மலர் மேல் பனிசோர
அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு அழகழிந்தா லொத்ததாலோ
இல்லம் வெறியோடிற்றாலோ என் மகளை எங்கும் காணேன்
மல்லரையட்டவன் பின்போய் மதுரைப்புறம் புக்காள் கொலோ?

ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனான்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் உடன் போக்குத்துறையும் இங்கே நோக்கத்தகுந்தது. பாலையில் தலைவன் தலைவியை அழைத்துச் செல்லுகிறான். செவிலித்தாய் பாலைவனத்தைத் துருவி நோக்குகிறாள். நோக்கி நோக்கி அவள் கண்கள் ஒளி இழந்துவிடுகின்றன. கணக்கில்லாத நக்ஷத்திரங்கள் போல உள்ள மனிதர்கள் நடுவில் தன் தனிமையை அவள் அனுபவிக்கிறாள்

காலே பரிதப்பினவே கண்ணே
நோக்கி, நோக்கி வாளிழந்தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற வில் வுலகத்துப் பிறரே.

இந்த உடன்போக்குத்துறையை ஆழ்வார் ஈச்வரபரமாய்ச் செய்துள்ளார். உலகப் பாலையிலிருந்து சர்வேச்வரன் ஜீவராசிதனைத் தன் குளிர்ச்சி பொருந்திய திருவடி நிழலுக்கு அழைத்துச் செல்லுகிறான்.

நானிலத்து நன்னீரை மென்று சுவைத்து உமிழ்ந்து
விடப் பட்ட பாலை இது

இதற்கப்பால் தேனிளஞ்சோலை உள்ளது. அது அழிவிலா க்ஷேமத்தைத் தரும்.

"நானிலம் வாய்க்கொண்டு நன்னீ ரறமென்று கோதுகொண்ட
வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ்பாலை கடந்த பொன்னே!
கால் நிலந்தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகாவுது அம்பூந்
தேனிளஞ்சோலை அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே".
(திரு விருத்தம்)

இதே கருத்தைப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் மிக அழகுபெற ஒரு பாட்டில் சமைத்துள்ளார்.

வெய்யோன் விரிகதிரினால் வியர்வை முகத்திலரும்பிய அன்னமே, இன்னும் காததூரம் போனால் இப்பாலை அகலும் இதற்கு அரைக்காதத்திற்கப்பால் சர்ப்பசயனமும், பொன்மயமான திருக்கோவிலும் சந்திர புஷ்கரிணியும், புன்னை மரத்தின் நிழலும் மதில்களும், வண்டுகள் மலர்களில் உறையும் காவிரித் துறையும் தென்படும்.

முன்னமேழ் புரவியாரிரவிகாய் வெயிலினான்
முத்தரும் பியகலா முழுமதித் திருமுகத்
தன்னமே! யின்னமோர் காவதம் போதுமே
லகலு மிப்பாலை யப்பாலரைக் காவத
மென்னையாளுடை யவன்று யிலாவமளியு
மிலகு பொற்கோயிலு மிந்துவின் பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம்
பூவிரித்துறையும க்காவிரித்துறையுமே.

சங்கப் பாடல்களிலுள்ள கருத்துக்களை அப்படியே ஆழ்வார்கள் கையாண்டிருக்கிறார்கள். கண்ணகி 'சிலப்பதிகாரத்தில்' தன் முலையைத் திருகி எறிகிறாள். இந்தச் சாயல்தான் ஆண்டாளின் பாசுரத்தில் அடிக்கிறது

"கொள்ளும் பயனொன் றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே"

சங்க இலக்கியப் பயிற்சியின் ஞாபக ஒலிதான் இங்கே கேட்கிறது. குறுந்தொகையில் அமைந்து கிடக்கும் முல்லைத்துறைக் காட்சியைத்தான் ஆண்டாளுடைய பாட்டில் பார்க்கிறோம்.

என்னுடைய இளமையைப் பார்க்கவில்லை. பொருளை விரும்பிச்சென்ற என் தலைவர் இன்னும் வந்தபாடில்லை. எவ்விடத்தில் இருக்கிறாரோ? தெரியவில்லை. கார் காலம் வந்துவிட்டது. முல்லை பூத்து நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது என்று தலைவி கூறுகிறாள்

"இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்
பெயல் புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகு முகையிலங் கெயிறாக
நகுமே தோழிநறுந்தண் காரே" (குறுந்தொகை)

இதே கருத்து ஆண்டாளின் பாசுரத்தில் தோன்றுகிறது.

முல்லைப்பூவே, உன்முறுவல் கொண்டு எனக்கு அல்லலை விளைவிக்காதே, உன் அடைக்கலம் என்று ஆண்டாள் எங்குகிறாள்

"முல்லைப்பிராட்டி! நீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை
அல்லல் விளைவியேல் ஆழிநங்காய்! உன்னடைக்கலம்"

குலசேகராழ்வார் பாடிய ஒரு பாட்டிற்கு மூலம் 'குறுந்தொகை'யில் இருக்கிறது.

"கோபத்தினால் தள்ளின தாயையே நினைந்தே அழும் குழந்தைபோல நீ என்னைத் தள்ளினாலும், உன்னைக் கைவிடேன் அப்பனே!" என்று புலம்புகிறார்

"அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள் நினைந்தேயழும் குழவியதுவே போன்றிருந்தேனே"

இதைத்தான் ஆளவந்தார் தம் தோத்திரரத்தினத்தில் மொழி பெயர்த்துள்ளார். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஆழ்வார்கள் உயிர் பெற்றுவிட்டார்கள். ஆழ்வார்களின் பாசுரங்களில் சங்க இலக்கியத்தின் எதிரொலி எழுகிறது.

தலைவனை நோக்கித் தோழி கூறுகிறாள் "தாய் மாறுபட்டு வருத்திய காலத்தும் வாய்விட்டு 'அன்னாய்' என்னும் குழந்தை போல நீ இன்னா செய்யினும் உன்னைத்தவிர வேறு புகலிடம் இல்லை அவளுக்கு

"தாயுடன் றலைக்குங்காலையும் வாய்விட்
டன்னா வென்னுங் குழவிபோல
இன்னா செயினு மினிதுதலை யளிப்பினும்
நின் வரைப் பின்னளன் றோழி
தன்னுறு விழுமங்களை ஒரோ விலளே" (குறுந்தொகை.)

இப்படிக் கருத்துக்களை ஆழ்வார்கள் கையாளுகிற முறையை நோக்கினால், அவர்கள் சங்க இலக்கியத்தில் தோய்ந்த எழுதினார்கள் என்பதில் சந்தேகமில்லை. உலகத்தை மறந்து புளிய மரத்தின் அடியில் பகற்கனவு கண்டுகொண்டிருந்தார்கள் என்ற விஷயத்தில் நமக்கு ஐயம் பிறக்கிறது. நம்மைப்போல பிறந்தார்கள். நம்மைப்போல சுகதுக்கங்களை அனுபவித்தவர்கள். ஆனால் ஞானச்சுடர்கொண்டு உள் இருளை ஓட்டினார்கள். கனவிலே ஒரு ஞானியாகிவிட முடியாது. பெரும் முயற்சினாலும், கண்துஞ்சாத உழைப்பினாலும் மோக்ஷசாம்ராஜ்ஜியத்தை நிலைநிறுத்த முயன்றார்கள் என்ற எண்ணத்தில் நமக்கு எத்தனை ஆறுதல், எத்தனை ஊக்கம்! நாமும் அவர்களைப்போல பேரின்ப வாழ்வின் பொருட்டுப் பாடுபடுவோமாக.

வையகமும் வள்ளலும்

வித்துவான் சடகோபராமானுஜப் பிள்ளை,
ஆசிரியர், புலவர் கல்லூரி, கரந்தை.

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற பொய்யில் புலவன் பொருளுரைக்கு இலக்காகி வாழ்ந்த வள்ளல் பலர். "வையத்து வாழ்வாங்கு" என்றதால் உலகில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தால் மற்றையோருக்குப் பயன்படும் என்ற பேருண்மையையும் பெற்றியையும் தானீண்டு 'வாழ்வாங்கு' என்று குறித்தார். தம்புகழ் குறீஇய தன்மையோர்கள் தான் யார் என்பதை நோக்குவோம். அவர்கள் தான் வள்ளல் என்ற பெயரோடு வாழ்ந்தவர். வள்ளல் என்ற சொல் வண்மை என்ற பண்புப் பெயரடியாகப் பிறந்தது. கொடையாலும், திறலாலும் வாழ்ந்து உலகிற்கு வழிகாட்டியாக நின்றார் ஆதலால் அத்தகையவர்க்கு வள்ளல் என்ற சிறப்புப் பெயர் பொருத்தமுடைத்தே. அவர்கள் முறைதான் யாதோ வென்னின் "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு" என்றுரைத்த மறுவில் செந்நாப்புலவன் மாட்சி மிக்க பனுவலின்படி தங்கள் முயற்சியால் திரண்ட செல்வத்தை ஈட்டி "உயர்ந்தகேள்வி ஊக்கலர் தம்மின்' என்றதைத் தீர்ந்தோராவர். 'தக்கார்க்கு' என்றதனால் 'அடங்கலர்ந்தீர்ந்ததான' மாகாமல் 'அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர் கொடுத்தார் என்னும் சொல்' என்றாங்குக் கலங்களுக்கேற்பக் கொடுத்தும் அறநிலையங்களை நிறுவியும் வாழ்ந்தோராவர். வள்ளல்களின் தன்மை எத்தகையது என்று சிறிதுதுருவி ஆய்வோமாயின், புலவர், வள்ளல், கொடைத்திறன் முதலியவற்றைச் சிறப்பித்துக் கூறும் புற நானூற்றில் அமைந்த ஒரு பனுவலின்கண் இத்தகையோரின் சிறப்புப் புலப்படுவதைக் காணலாம். அது வருமாறு.

உண்டாலம்ம! இவ்வுலகலம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியருண்டலும் இலரே. முனிவலர்
துஞ்சலும் இலர். பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர். பழியெனின்
உலகுடன் பெறினினுங் கொள்ளலர். அயர்விலர்
அன்னமாட்சி அனையராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.

(கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டு)

இவ்வொருபாட்டே பெரியோர்களின் வள்ளல்களின் தன்மையை வரையறுத்துக் கூறுவதற்கமையும். "பலசொல்லக் காமுறுவர் சிலசொல்லல் தேற்ருதவர்" என்று கூறிய நுண்மாண் நுழைபுலனுடை வள்ளுவரின் வாய்மொழியே சாலும். இனி இதன் பொருளைச் சிறிது நோக்கி மேற்செல்வாம். பிறர்க்கென முயலுநர் உண்மையான் உண்டால் அம்ம இவ்வுலகம் என மாறிக் கூட்டுக. 'உண்டு' என வினைக்குறிப்பை எடுப்பிலே கொடுத்துக் கூறியதே பெரும் மிடுக்குடையது. இதுபோன்று வினைச்சொல்லை முதலில் எடுத்தாளுவது பேராற்றல் வாய்ந்த பெரும் புலவர்க்கே கைவந்த செயல். வடமொழியில் பெரும்புலவனுன காளிதாசன், குமாரசம்பவத்தின் தொடக்கத்தில் 'அஸ்தி' என்று கூறுகிருன். இந்திரர் அமிழ்தம்...இலர் என்றதனுல் நரை முதலிய ஐந்தையும் ஒழிக்கும் அமிழ்தத்தையும் பலருடன் உண்பார் என்ருல் மற்றையவற்றைப்பற்றிக் கூறவேண்டுவதின்று. இதனுல் இவர்கள் தேவரைவிட மேலாவர் என்பது தேற்றம். எங்ஙனே என்னில், தேவரும் அசுரரும் ஆகிய இருவரும் வருந்திப் பெற்ற அமிழ்தத்தைத் தாமொரு சாரரே உண்ண நினைத்த தேவரைவிடச் சிறந்தவர் ஆவார். இது கருதியேபோலும் "தேவரனையர்கயவர்" "என்று கயவரோடு தேவரைச் சேர்த்தார் என்றுகூட ஐயமுண்டாகின்றது." புகழ்பட வாழாதார் யார் யாரும் இல்லையென்றபடி புகழுண்டாகுமானுல் உயிரைக்கொடுத்தும் புகழை நிறுத்துவர் 'புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெரியோன்" என்று சிபியைக் குறிப்பது, புகழை நிறுத்தவும், பிறவுயிரின் இன்னலைத் தவிர்க்கவும் தன்னுடலைச் சிதைத்துக் கொடுத்த செயலாலன்ருே. 'பழி...லர்' பிறருக்கு ஊறுநேருமாயின் எல்லா வுலகும் கைக்கு மிகவும் வருத்தமின்றிக் கிட்டுவதாயினும் கொள்ளார்கள்" பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ் ஞான்றுமில்" என்ற வனப்புடை வள்ளுவர் வாய்மையை யுள்ளியல்லவா அவர்கள் வெறுப்பது 'தம...நர்' இதனுல் மக்கள் எவ்வாறு வாழ்க்கையை நடத்தவேண்டும் என்பதை நடத்திக்காட்டும் பெரியோரின் தன்மை கூறுகிருர். இத்தகைய வெள்ளியோர் உண்மையான் உலகு இயங்குகின்றது என்று கூறி முடித்தார்.

இனி இத்தகைய வள்ளியோரால் நிகழ்ந்த செயல் எவை என்பனவற்றைச் சுருக்கமாக ஆய்வோம். சங்க இலக்கியங்களை நோக்குமாயின், அவற்றுள் பேராற்றல் வாய்ந்த பெரும் வள்ளல்களாலன்ருே இன்றும் நாம் பொன்னே போற் போற்றத்தகுந்த பல நூல்கள், அறநிலையங்கள் ஆகியவை திகழ்கின்றன. இனி பிற்பட்ட காலமாகிய கி. பி. 7 முதல் 13ம் நூற்றுண்டுவரை திகழ்ந்த வள்ளல்கள் சோழபாண்டியர்களாகிய பேரரசர்களாலும் திருவெண்ணெய் நல்லூர் சடையன் போன்ற பெரு வள்ளல்க

ளாகுமன்றோ உலகுக்குத்திலகமாய் விளங்காநின்ற கம்ப ராமாயணம் பெரிய புராணம் முதலிய நூல்கள் திகழ்கின்றன. இவற்றுள் வள்ளல்களின் நிலை அடியார் பெருமை முதலிய மலை இக்காகத் தோன்றுகின்றன. அவற்றுள் ஒன்று இரண்டை மட்டும் நினைப்பூட்டுகின்றேன் வாசங்கலந்த ... ஆசங்கை கொண்ட கொடைமீனியண்ணல் சரராமன் வெண்ணெயணுகும் என்றும், "சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி" என்றும் கூறுவதனாலறியலாகும்.

இனி மேற்கூறிய காலத்திற்குச் சிறிது பின்னால் வருமோமானால் 15ம் நூற்றாண்டு முதலிய பிற்பட்ட காலத்தில் கொங்கர் குல வரபதியாட்கோண்டான் என்ற குரிசில் இல்லாவிட்டால் வில்லிபாரதம் போன்ற சந்தப்பாக்கள் நமக்குக் கிட்டுமா என்பதைச் சிறிது சிந்திக்கவேண்டும் (சீயசங்சன் இன்றேல் முன்னூல் ஒழியப்பின்னூல் தம்முள் இணையோவோவென்றுந் துணிவே மன்னும் நன்னூல் எங்கே வீரசோழன் போன்ற அரசர் இன்றேல் புத்திமித்திரனை அறிவார் யார். அவர் செய்த வீரசோழியம் எங்கே).

இனி அவற்றுட் பிற்பட்ட காலமாகிய இக்காலத்தில் முச்சங்கம் போய்ப் பாடுவாரற்றுப் பாடுவார்க்கொன்று ஈகுநரும் அற்று என்பனவற்றை மறுத்துச் சங்கமும் உண்டு, புலவர்களுக்கு ஈவோரும் உண்டு என்பவற்றை நிறீயினர் பலர். அவருள்ளும் வெள்ளிடைபோல விளக்கமுற்றுத் திகழும் மாணவர் விடுதி, வித்வச்சபை ஆகியவற்றை நிறுவினர் அரங்கசாமி முதலியார் அவர்களே ஆவார். முன் கூறியாங்கு இவர்கள் தாளாற்றித்தந்த பெருமுயற்சியால் வந்த பொருள் எல்லாவற்றையும் எவ்வறம் சிறந்தது என்று உன்னி உள்ளத்தில் ஊறிய கல்வி அறமே சிறந்ததென எண்ணினர்கள். இவ்வற நிலையத்திற்காக இவர்கள் எண்ணத்தில் வகுத்தமைத்த முறை சாலச்சிறந்தது. "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர், எண்ணியர் திண்ணியராகப் பெறின்" என்றுங்கு மனத்திற் கொண்ட கொள்கையே இவ்வாறு பரிணமித்து வந்ததன்றி வேறன்று. இவர்கள் அறநிலையமாக அமைக்கப் பெற்ற மாணவர் விடுதியைக்கண்டு மகிழாதார் இன்று வியக்கத்தக்க முறையில் விடுதியும், அதன் நாற்புறமும் குளிர்ந்த காற்றைத் தரும் மலர்ச்சோலையும் இறைவனை வழிபடுதற்குரிய மாமலர்த் தொடவையும் கண்ணைக்கவரும் காட்சியளிக்கின்றன. மாணவர்களின் ஒழுக்கமுறை மிகவும் நன்றாக அமைந்துளது. உண்டியுறையுள் இவைகள் சீர்பெற்ற முறையில் திகழ்கின்றன. இத்துணையும் சிறப்பாக இலங்குவதற்கு முதல் (கருவி) வேண்டும். அம்முதல் அவற்றைக்கண்காணிப்பார் அவர்களே என்று சொல்லிவிடலாம்.

அவர்கள் இவற்றைச் சீர்பெற நடத்திச் செல்லும் முறை மிகவும் போற்றத்தகுந்தது.

இதுகாறும் வையமும் வள்ளலும் என்னும் தலைப்பின்கீழ் ஒருவாறு இவற்றைப்பற்றிச் சுருக்கி எழுதலாயிற்று இதன் திறம் விரிப்பிற் பெருகுமாதலால் விரிவஞ்சி விடுத்தனன்.

மாண்புறு செயலால் மாணவரில்லம்
காண்வர விளங்கக் கண்ணனை வழுத்தும்.

சேக்கிழாரும் கல்வெட்டுகளும்.

வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை **B. O. L.**
ஆசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.
(உரிமை ஆசிரியர்க்கே.)

இரண்டாம் குலோத்துங்கனை அநபாய சோழன் காலம் கி பி. 1123-1148. இவன்காலத்துச் சோழ அரசியலில் தலைமை அமைச்சராக இருந்தவர் பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமான். அப்புலவர் பெருமான் செய்த சைவத் திருநூலுட் கூறப்பட்டுள்ள நாயன்மார் அறுபான் மூவர் காலமும் ஏறக் குறைய (கி. பி. 200 முதல் கி. பி. 850) 650 ஆண்டுகள் என வரலாற்று ஆராய்ச்சிகொண்டு கூறலாம். எனவே, சேக்கிழார், தமக்குமுன் ஏறத்தாழ 300 ஆண்டுகட்கு முற்பட்ட சுந்தரர் (கி. பி. 825-850) பாடிய தொகையைக் கொண்டும், தமக்கு 100 ஆண்டுகட்கு முற்பட்ட நம்பியாண்டார் பாடிய அந்தாதி கொண்டும், மூவர் பாடிய தேவாரம் கொண்டும், பேயார் முதலியவர் பாடிய சிறு நூல்களைக்கொண்டும் பெரியபுராணம் பாடியருளினர் என்பது நன்கு புலனுகிறது. ஆயின், இவை மட்டுமே அவர்க்கு உதவிபுரியவில்லை என்பது இங்கு அறியத்தக்கது.

இராஜராஜ சோழன் (கி. பி. 985-1014) திருமுறை வகுத்தவன்; நாயன்மார்க்கு உருச்சிலைகள் அமைத்தவன்; பல அணிகள் செய்து அலங்கரித்தவன்; தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலில் தேவாரம் ஓத 48 பேரை வைத்திருந்தவன்.[1] ஆனல், இராசராசனுக்கு முன்னரே பல கோவில்களில் பதிகங்கள் ஓதப்பட்டன என்பது அறியத்தக்கது: (1) மூன்றும் நந்திவர்மன் (காடவர்கோமான்கழற்சிங்களன்) காலத்திலேயே(கி.பி. 825-850)

---

[1] South Indian Inscriptions, Vol. II, pp. 19-20.

திருவல்லம் கோவிலில் ஓதுவார் நியமனம் பெற்றிருந்தனர். முதற் பராந்தக சோழன் காலத்தில் அல்லூர்,[2] பழூர்,[3] திரு எறும்பியூர்,[4] திருத்தவத்துறை,[5] திருவாடுதுறை[6] முதலிய இடங்களில் தேவாரப் பதிகங்கள் ஓதப்பெற்றன என்பது கல் வெட்டுகளால் அறியக்கிடக்கிறது. இவற்றுடன் சேக்கிழார் காலத்திற்கு முன்னரே நாயன்மார்க்குக் கோவில்கள் உண்டாகி விட்டன என்பதும் புலனாகிறது. கழற்சிங்க நாயனார் காலத்தி லேயே திருநாகேஸ்வரத்தில் மெய்ப்பொருள் நாயனார்க்குக் கோவில் இருந்தமை அறியலாம்.[7] மேலும் நாயன்மார் பெயர்கள் சேக்கிழார்க்கு முற்பட்ட தமிழ்மக்கள் இட்டு வழங்கலாயினர் என்பது பல்லவர் சாஸனங்களாலும், சோழர் சாஸனங்களாலும் நன்கறியலாம். எனவே, சேக்கிழார் காலத்தில் நாயன்மார் பெயர் களும் வரலாறுகளும் நாட்டில் வழக்கில் இருந்துவந்தன என் பதை நன்கறியலாம்.

சேக்கிழார் இவ்விவரங்களுடன் நின்றுவிடவில்லை என்பதைக் கூறவே இக்கட்டுரை எழுந்தது. நாயன்மார் காலம் கி. பி. 200-825. அஃதாவது பல்லவப் பேரரசு தோன்றி, இருந்து, மறைந்த காலம்; பாண்டியர் மறைந்து, தோன்றிய காலம்; சோழர் வலி குன்றிச் சிற்றரசாக இருந்தகாலம்; களப்பிரர் ஆண்டு, சிற்றரச ரான காலம். நாட்டில் பல சமயக் குழப்பங்கள் தோன்றிய காலம்; பல நாட்டார் விடாத போர்கள் நிகழ்த்திய காலம். இவ் விவரங்களைப் பல்லவர் பாண்டியர் பட்டயங்களும் கடம்பர், சாளுக்கியர், கங்கர் பட்டயங்களும் பிற நூல்களும் தெள்ளிதில் விளக்குகின்றன. இத்தகைய குழப்பமான காலத்தில் வாழ்ந்தி ருந்த நாயன்மார் வரலாறுகளைக் கூறுதல் எளிதான செயல் அன்று. சேக்கிழார் சைவசமய அடியார் வரலாற்றைப் பக்தி அளவிப்பாடி முடிக்க விழைந்தார் இல்லை. அவர், தமது பெருநூல் தென் இந்திய வரலாற்றுக்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும் என்னும் சீரிய நோக்குடன் பல்லவர் வெளியிட்ட பட்டயங்களை எல்லாம் நன்றாகப் படித்தார்; கல்வெட்டுகளை அழுத்தமாகப் படித்தார்; இக்கால வரலாற்று ஆசிரியர் கூறத்தினறும் பல நுட்பமான செய்திகளையும் மிகத்தெளிவாக உணர்ந்தார். இவை அனைத்தையும் தாம் பாடியுள்ள பெரிய புராணத்தில் ஆங்காங்கு அழகாகக் கூறிச் செல்கின்றார். தமிழ்ப்புலமையும் சாஸன அறி வும் உடையார் இவற்றை ஆராயின், சேக்கிழார் பெருமான் சிறந்த கல்வெட்டுப் புலவர் என்பதை எளிதில் உணர்வர். கல் வெட்டுகளை எல்லாம் படித்து வரலாற்று அறிவுடன் நூல் பாடிய

---

[2] 373 of 1903 [3] 349 of 1918 [4] 129 of 1914 [5] 99- of 1929
[6] 139 of 1925 [7] P. T. S. Iyengar's Pallavas' Part III, p. 58.

பெருமை தமிழ் மொழியில் சேக்கிழார் ஒருவர்க்கே உண்டு! உண்டு!! உண்டு!!! இதனை மெய்ப்பிக்கச் சில சான்றுகளே[1] இலங்குத்தரப்படும்

கழற்சிங்க நாயனார், 'படிமிசை நிகழ்ந்த தொல்லைப்பல்லவர் குலத்து வந்தார்' என்பது பெரிய புராணம்.

வரலாறு கி. பி. 9ஆம் நூற்றாண்டோடு பல்லவர் பேரரசு தமிழ்நாட்டில் ஒழிந்து ஆதித்தசோழன் பேரரசு ஏற்பட்டது. பிறகு பல்லவர் மரபினர் மைசூர், பெல்லாரி முதலிய இடங்களி லிருந்து ஆண்டனர். அவர்கள் தம்மை 'நுளம்பப் பல்லவர்' என்று கூறிக்கொண்டனர். அப்பிற்காலப் பல்லவர் சேக்கிழார் காலத்திலும் அதன் பிறகும் இருந்து சோழரோடு ஓயாது போரிட்டுக்கொண்டிருந்தனர்[1]. அமைச்சரான சேக்கிழார் அந் நுளம்பப் பல்லவரை நன்கறிந்தவர். அதனாற்றான் 'நாம் கூறப் புகுந்த கழற்சிங்க நாயனார் நம் காலத்து நுளம்பப்பல்லவர் மரபி னர் அல்லர்; அவர் தொல்லை (முற்பட்ட) பல்லவர் குலத்து வந்தவர்' என்பதைத் தம்காலத் தமிழர்க்கு அறிவிப்பார் போலத் தெளிவாக மரபு கூறியிருத்தல் வியக்கத்தக்கதே அன்றோ? வர லாற்று அறிவு எந்த அளவு உயர்ந்து இருந்தால், சேக்கிழார் இந்த நுட்பமான வரலாற்றுக் குறிப்பை நினைவுறுத்தி யிருத்தல் வேண்டும்!

> "விரைசெறி மலர்மென் கூந்தல் உரிமைமெல் லியலார் தம்முள்
> உரைசிறந் துயர்ந்த பட்டத் தொருதனித்தேவி"
>
> கழற்சிங்கர் புராணம் செ. 4

வரலாறு இக்கழற்சிங்கனே மூன்றாம் நந்திவர்மன். இவனுக்கு 'அடிகள் கந்தன் மாறம் பாவையார்' என்பவளும் இராஷ்டிர கூட அரசன் மகளான 'சங்கா' என்பவளும் மனைவிமார் என் பது கல்வெட்டுகளால் அறியக்கிடக்கிறது. முன்னவள் முத்தீச் சுரர் கோவில் முதலிய கோவில்கட்குப் பல தானங்கள் செய் துள்ளவள். பின்னவளே பட்டத்தரசி என்று பாகூர் பட்டயம் பகர்கின்றது. அவள் மகனே நிருபதுங்கவர்மன். அவள் 'உரை சிறந்து உயர்ந்தவள்' என்று சேக்கிழார்பெருமான் கூறியுள்ளார்.

---

[1] 'Periyapuranam in its Historical Setting' என்னும் ஆராய்ச்சி நூல் விரைவில் எம்மால் வெளியிடப்பெறும்.

[1] With Nirupathunga or Aparajita, *the main line of the pallava kings* appears to have come to an end. But, however, a branch of them known as the Nolambas continued to exercise sovereignity at Nolambapadi as late as the thirteenth century A. D.- Hemavathi Pillar Inscription. vide L. Rice's 'Mysore and coorg from Inscriptions' pp 55-59.

இத்தொடருக்கு விளக்கவுரையாகப் பாகூர்ப் பட்டயத்தில் 14ம் சுலோகம் அமைந்துள்ள பெற்றியை என்னென்பேம்! அதனைக் காண்க:

"சங்கா, தாய் தன் பிள்ளைகளை நேசிப்பதுபோலக் குடிகளை நேசிக்கிருள். அவள் இலக்குமி அவதாரம் என்னலாம்" குடிகளை நேசிக்கும் அரசியை குடிகள் புகழ்தல் இயல்பே அன்றே? '(குடிகள் புகழ்) உரை சிறந்து உயர்ந்தவள்' என்பது என்ன அழகாக இருக்கிறது! இதனைச் சேக்கிழார் நுட்பமாக உணர்ந்து கூறலன்றே சிறப்புடைத்து! சேக்கிழார் பட்டயங்களைப் படித் திராவிடில் (1) கழற்சிங்கர்க்கு மனைவியர்பலர் என்பதையும், (2) அவருள் பட்டத்தரசி உரைசிறந்து உயர்ந்தவள் என்பதையும் எங்ஙனம் கூறியிருத்தல் கூடும்?

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்"

சிறுத்தொண்டர் புராணம் செ. 6

வரலாறு நரசிம்மவர்ம பல்லவனுக்கும் இரண்டாம் புலிகேசி என்னும் சாளுக்கியனுக்கும் நடந்த போரின் முடிவு சாளுக்கியர் தலைநகரமான வாதாபியின் அழிவில் முடிந்தது. இது நடந்தகாலம் கி. பி. 642. இதிற் கலந்துகொண்ட பல்லவன் சேனைத்தலைவரே சிறுத்தொண்ட நாயனர் என்பவர். இந்தப் பல்லவர் வெற்றியைப் பாராட்டி (1) வேலூர் பாளையப்பட்டயம், 'அகத்தியன் வாதாபியை அழித்தாற்போல நரசிம்மன் வாதாபியை அழித்தான்' என்கிறது[1]; (2) உதய சந்திர மங்கலப்பட்டயமும் இதனையே குறிக்கிறது[2]. (3) சாளுக்கிய விநயாதித்தன் வெளியிட்ட சோரப்பட்டயம்,......'எங்கள் சிறுமைக்கும் அவமானத்திற்கும் பல்லவ அரசனே காரணமானவன்' என்று புலம்புதலைக் காண்க. இப்போருக்கு வாதாபி அழிவிற்குப்பின் 13 ஆண்டுகள்வரை சாளுக்கியர் தலையெடுக்கவில்லை. இந்த வரலாற்றுச் செய்திகளை உளங்கொண்டே சேக்கிழார் பெருமான், 'தொன்னகரம் துகளாக' என்று கூறியிருத்தல் கண்டு இன்புறத் தக்கது.

"காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற
மாடெலாம் சிவனுக்காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்"

பூசலார் புராணம், செ. 9

---

[1] S. I. I. vol. I p. 152
[2] I. A. vol. 8, p. 277

இவன் இராஜசிம்மன் என்னும் பல்லவன். இவன் சிறந்த சிவபக்தன். இவனே காஞ்சியில் கைலாசநாதர் கோவில் கட்டியவன். இவன் 'சிவசூடாமணி, சங்கரபக்தன்' எனப்புகழப் பட்டவன். இவன் சைவசித்தாந்தத்தில் வல்லவன் என்று கல்வெட்டுக் கூறுகிறது. இவன்காலம் கி. பி. 680—710 என்னலாம். இவனுக்குப் பின் கி. பி. 710—775 வரை ஆண்ட இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் இரண்டாம் விக்கிரமாதித்தன் (சாளுக்கிய அரசன்) பல்லவனைத் தோற்கடித்துக் காஞ்சியைக் கைப்பற்றினான்; கைலாசநாதர் கோவிலைப் பார்வையிட்டான். அதற்கு இராஜசிம்மன் வைத்திருந்த பெருஞ் செல்வத்தை அபகரியாமல் அப்படியே விட்டுவிட்டான்[1], என்று அவனது கல்வெட்டே கூறுகின்றது. அக்கல்வெட்டுப் பழைய கன்னடமொழியில் கைலாசநாதர் கோவில் மண்டபத்தூணில் இருத்தலை இன்றும் காணலாம்.

கி. பி. 12ஆம் நூற்றுண்டினரான சேக்கிழார் பெருமான் கி. பி. 8ஆம் நூற்றுண்டு நிகழ்ச்சியை எத்தகைய சான்றுடன் கூறியுள்ளார் என்பது நோக்கத்தக்கது. 'சிவனுக்காகப் பெருஞ் செல்வம் வகுத்தல் செய்தான்' என்று அவர் கூறியதைச் சாளுக்கிய விக்கிரமாதித்தன் கல்வெட்டு மெய்ப்பித்து நிற்றலைக்காண, சேக்கிழார் பெருமானது கல்வெட்டு அறிவு, குன்றின் மீதிட்ட விளக்கென ஒளிர்தல் காண்க.

இங்ஙனம், சேக்கிழார் பெருமான் வரலாற்று உணர்ச்சியுடன் பெரியபுராணம் பாடியுள்ளார் என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம். சங்க நூல்களிலும், பிற்கால நூல்களிலும் இத்தகைய வரலாற்றுச் சிறப்பைக் காண்டல் அருமை. வரலாற்றுப் பேரறிவுடன் சிறிய செய்தியையும் தக்க சான்றைக் கொண்டே கூறும் தகுதியுடைமை சேக்கிழார் ஒருவரிடமே காணுதல்கூடும். இத்தகைய பெரும் புலவரைப் பெற்றுள்ள தமிழர் அவரை அறியாதிருத்தல் அறியாமையே. 650 ஆண்டுகள் வரலாற்றை வகுத்து நுட்பமாகக்கூறும் பெரிய புராணத்தின் பெருமையை எல்லாத் தமிழரும்—அவர் எச்சமயத்தினர் ஆயினும் சரி—அறிந்து போற்றும் நாளே — பெரிய புராணத்தை எல்லாத்தமிழரும் தத்தம் வரலாற்று நூல் எனப்பேணும் நாளே—தமிழ்நாடு 'தன் உணர்ச்சி' கொண்ட நாடாகும். சுருங்கக் கூறின்,

'வரலாற்றுக் குறிப்புகள்' என்னும் செங்கற்களைக் கொண்டு கட்டி, 'சைவ சமயம்' என்னும் நறுமணச் சாந்துகொண்டு பூசிய ஓர் பேரின்ப மாளிகை பெரிய புராணம் என்னலாம்.

சேக்கிழார் பெருமான் பொன்னடி போற்றுதும்.

---

[1] Epigraphica, Indica vol. 9, p. 205

மக்கள் ஒழுக்கம்.

பு. சி. புன்னைவனநாத முதலியார்,
தமிழ் விரிவுரையாளர், சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

மக்கள் உடம்பு பெறற்கரிது. பெற்றபின் அறியும் அறிவு அரிது. அங்ஙனம் அறிவு அறிந்தார் என்பார், அறத்தின் வழு வார், நெறிதலை நின்று ஒழுகுவார் என்றபடி தக்க தின்னது தகாத தின்னது என்று ஒக்க உன்னுபவரே மக்கள். உன்னார் மாக்கள். என்னெனில், உயர்குடித்தோன்றல், ஊனமில் யாக்கை ஆதல், மயர்வு அறு கல்வி கேள்வித் தன்மையால் வல்லராதல், பெரி துணர் அறிவே ஆதல், பேர் அறங்கோடல் என்பவை மக்களால் பெறுதற்கு அரியவை என்ப. கூற்றங் கொண்டோடுப்பொழுது தாம் செய்வினையே தம்மோடு செல்வது, நல்லறங் கேட்டலின் பயன் காட்சி ஒழுக்கொடு ஞானம் தலைநின்று மாட்சி மனை வாழ் தல், வீட்டுலகம் எய்தல் என இரண்டே

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்ற போய்யில் புலவர் பொன் மொழிப்படி சில்வாழ் நாட் பல்பிணிச் சிற்றறிவுடைய மக்கள் கரையிலாக் கல்வியை நீரொழி யப் பாலுண் குருகில் தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்க. சிற்றுயிர்க்குற்ற துணையாகுங் கல்வியைப் பெற்ற மக்கள் வாலறிவன் நற்றாள் தொழல் கடன்.

இச்சிறப்பொழுக்கமே பிறப்பின் சிறப்பொழுக்கமாம். நிற்க கடந்த கால் நூற்றாண்டாகக் கல்விநலங் கருதி நூற்றுக்கணக் கான மாணவர்க்கு உண்டியும் உறையுளும் உதவிப் போற்றி வரும் மன்னார்குடியிலுள்ள கோட்டூர் அரங்கசாமி முதலியார் (Hostel) விடுதியின் வெள்ளி விழாக் காலத்து வெளியிடப் பெறும் ஒண் மலர்க்கோர் இதழ் உதவுமாறுவேண்டிய (warden) காப்பாளர் திரு. வி. கோபாலசுவாமி முதலியார் அவர்கள் விருப் பிற்கிசைந்து மாணவர் ஒழுக்க உயர்வுக்குற்ற கட்டுரை ஒன்றை வரைந்தனுப்பல் ஆயிற்று.

"மக்கள் ஒழுக்கம்" என்ற தலைப்பில் எழுதப்படுவன பல பக்கங்கள் கொள்ளக்கூடியனவாயினும், இடங்கருதியும் விரி வஞ்சியும் மாணவர்க்குப் பயன்படும் பெரும் பொருள்களே பெரும்பான்மையாகச் சுருக்கி வரையப்பட்டிருக்கின்றன.

ஒருவன் தனக்குப் பிறர்செய்த நன்றி அறிதலும், பொறையும், இன்சொல்லும், எல்லா உயிர்க்கும் இன்னாதன செய்யாமையும், கல்வியும் ஒப்புரவு மிக அறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தாரோடு நட்டலும், ஆகிய இவ்வெட்டுமே ஒழுக்கங்கட்கு காரணம். ஒழுக்கம் தவறாதவர்கள் நற்குடிப்பிறப்பு, நெடிய வாழ்நாள், செல்வம், அழகு, நில உரிமை, சொற்செலவு, கல்வி, நோயின்மை என்ற எட்டினையும் எய்துவர்.

விடியற்காலமாகிய பின் யாமத்திலே துயில் எழுந்து தான் பின்னர் செய்யும் நல் அறத்தையும் ஒள்ளிய பொருளுக்கு வருவாய் ஆகிய காரியத்தையும், ஆராய்ந்து பார்த்து, கங்குல் புலர்ந்ததும் பழுதின்றித் தந்தையையும் தாயையும் தொழுது. எழுந்து ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குக. மல மூத்திரங்கள் இயங்கிய இயக்கம் இரண்டுடன் இணைவிழைச்சும், வாயினால் வழங்கிய வழைச்சும், என்ற நால்வகை எச்சிலும் உண்டான இடத்து ஒன்றும் படித்தலாகாது, வாயால் ஒன்றையும் சொல்லலாகாது, தூங்கலாகாது.

சிறுகாலையில் ஒரு கோலால் பல்துடைத்துக் கண் கழுவித் தான் வணங்கும் கடவுளைத்தான் அறியும் நெறியால் தொழுக. தன்னால் வணங்கப்படும் தேவரை வழிபடுதற்கண்ணும், தீய கனவைக்கண்ட இடத்தும், தூய்மை குன்றிய காலத்தும், உண்டதை வாந்தி செய்த இடத்தும், மயிர் களைந்த இடத்தும், உண்ணும்பொழுதும், பொழுதேற உறங்கியஇடத்தும், புணர்ச்சி ஆன காலத்தும், கீழ்மக்கள் உடம்பு தீண்டிய இடத்தும், மலசலம் கழித்த இடத்தும், ஐயுறாமல் நீராடுக. அங்ஙனம் நீராடுமிடத்து ஓராடையை உடுத்து நீராடுக. இரண்டு உடுத்தன்றி ஒன்றுடுத் துண்ணற்க. உடுத்த ஆடையை நீரின்கண் பிழியற்க. ஓராடை யுடுத்து அவையின்கண் செல்லற்க. தலையில் தேய்த்த எண்ணெயை வழித்து மற்ற உறுப்புகளில் பூசற்க. அடுத்தவர் ஆடை செருப்பு முதலியவற்றைத் தீண்டற்க. தண்ணீரில் தன் நிழலைப் பார்த்தலும், சும்மா தரையைக் கீறுதலும், இரவில் ஒரு மரத்தின்கண் சேர்தலும் ஆகா. நெறிப்பட்டார்: நீராடும் பொழுதில் ஒருநாளும் நீந்தார். நீரில் எச்சில் உமிழமாட்டார். அமுங்கி இருக்கமாட்டார். குளித்து காலைக் கழுவி வாயைத் துடைத்து உண்கலத்தைச் சுற்றித் தண்ணீர் இறைத்து உண்க. கால் கழுவின நீரின் ஈரம் புலர்வதற்கு முன்னே உண்ணத் தொடங்குக. படுக்கும் இடத்தில் கால் கழுவின ஈரம் காய்ந்த பின்னரே ஏறுக. ஒருவன் உண்ணும்பொழுது கிழக்கு முகமாகப் பொருந்தித் தூங்காமலும், அசைந்து ஆடாமலும் நன்றாக இருந்து எவ்விடத்தும் வேறொன்றினையும் நோக்காமலும், பேசா

மலும் உண்கிற உணவைத் தொழுது சிந்தாமல் நன்கு உண்க. கிழக்கு நோக்கி இருந்துண்ணக்கூடாதாயின், வேறு திசை நோக்கி இருந்தும் உண்ணலாம். படுத்தோ, நின்றோ, வெளியிடை இருந்தோ, கட்டிலின் மேலிருந்தோ, உண்ணுதல் முதலிய ஆகா. தம்மிற் பெரியார் தம்பந்தியிலிருந்து உண்ணும் இடத்து அப்பெரியார் உண்பதற்கு முன் தான் உண்ணுமலும், முந்தி எழுந்திராமலும், அவர்களை நெருக்கியிராமலும் இடமிருந்து உண்க. உண்ணும்போது இனிப்பான கறிகளை முதலிலும், கசப்பான கறிகளை இறுதியிலும், ஒழிந்த சுவைக்கறிகளை இடையிலும் உண்க.

உண்கலங்களில் சிறியவற்றைப்பற்றி அன்பும் ஒழுக்கமும் குன்றுமல் உண்டு பின்கலங்களை நீக்குக. உண்டபின் வாயை நன்கு கொப்பளித்து எச்சில் அறச் சுத்தி செய்து குடங்கை இட்டு உழுந்து அமிழும் அளவுள்ள நீரை மூன்றுதரம் உட்கொள்ளுக. தண்ணீரை இரு கையாலும் குடிக்கலாகாது. பெரியோரிடம் ஒன்றைப் பெறும்பொழுதும், ஒன்றைக் கொடுக்கும்பொழுதும் இரண்டு கைகளாலும் வாங்கல் கொடுக்கல் செய்ய வேண்டும். உடம்பை இரு கையாலும் சொறியலாகாது. தூங்கும்பொழுது கடவுளைக் கைகுவித்து வணங்கி வடதிசைக் கண்ணும் கோணத்திசையின் கண்ணும் தலை வையாது மேலே போர்த்துக்கொள்ளும் போர்வையை உடம்பிற்குக்கொடுத்து படுக்கையில் சேர்க.

அரசன், உபாத்தியாயன் தாய் தந்தை, தனக்கு மூத்தோன் இவ்வைவரும் ஒப்பற்ற பெரியோராவர். இவர்களைத் தேவரைப் போல் தொழுதெழுக. ஐங்குரவர்கள் சொல்லிய சொற்களைக் கடந்து ஒன்றைச் செய்தலும், அமாவாசை, பூரணை முதலிய நாட்களில் கொம்பால் பல் துடைத்தலும், மரங்குறைத்தலும் ஆகா. புல் முளைத்திருக்கும் இடம், வயல், பசுவின் சாணம், சுடுகாடு, வழி, தீர்த்த கட்டம், தேவகுலம், நிழலிடம், பசு நிற்கும் இடம், சாம்பல் இருக்குமிடம், என்ற பத்திடங்களிலும் எச்சில் உமிழ்தலும், மலசலம் கழித்தலும் கூடாது. மலசலம் கழிப்பவர் பகல் தெற்கு நோக்கியும், இரவு வடக்கு நோக்கியும் இருந்து கழித்தல் ஆகா. பொய், குறளை பேசுதலும், பொருமை உறுதலும், பிறர் பொருள் வவ்வுதலும், வறுமை உறுவித்து தெய்வக் கோபத்திற்கு ஆளாக்கும்.

அட்டமி, அமாவாசை, பௌர்ணமை, சதுர்த்தசி, அரசர்க்குத் துன்பம் வருங்காலம், பூகம்பம், இடிமுழக்கம், தூய்மை இல்லாத நாள், ஆகிய காலங்களில் வேதம் ஓதல் ஆகாது.

ஒழுக்கமுடையோர் கல் எறிவதும், தூரப்போகின்றூர் ஒருவரை அழைத்தலும், ஒருவன் செய்வதுபோலத் தானும் அவனை இகழ்ந்து செய்தலும், கோபமும், ஒளித்தலும், கை தட்டலும், பிறர்க்கு வெளிப்படக் கண்ணிடுதல் முதலான செய்து, தன் உறுப்பைச் செகுத்தலும் செய்யார். தம்மிடத்துச் சென்ற வர்க்கு உணவுடன் முறுவலோடு கூடிய இன்னுரையும், கால் கழுவ நீரும் இருக்க மனையும், கிடக்கப்பாயும், கிடக்கும் இடமும், கொடுத்துதவுக. ஒப்பற்ற அறிவுடையவர் போர்க்களம், கள்ளால் களித்தாடும் இடம், பொது மகளிர் சேரி, தண்ணீர்த் துறை முதலிய இடங்களில் நெடுநேரம் நிற்கார்.

பிணியில்லாதிருத்தலை விரும்புவோர் பாழான வீட்டினுள்ளும் கோயில்களுக்குள்ளும், சுடுகாட்டிலும் ஊர் இல்லா இடத்துண்டாகிய ஒன்றுகிய முற்றிய மரத்திடத்தும், ஒன்றியாகப் போகார். பகற் பொழுதில் தூங்கார். ஒருவர் எழுந்து போகத் தொடங்கினபொழுது அவரைப் பின்னே நின்று அழையார். தும்முவதும் செய்யார். மறந்தும் எங்கே போகிறீர் என்றும் சொல்லார். முன்போய் எதிர்முகமாக நின்றுகொண்டு ஒன்றைச் சொல்லாமல் பக்கமாக நின்று சொல்வார். பெரியோர் தம்முடன் ஒரு வழியில் போகும் பொழுது வாகனத்தில் ஏறிச்செல்லுதலும் காலில் செருப்பணிந்தும் கையில் குடை பிடித்துச் செல்லுதலும் கூடா. பெரியோரைக் கண்டால் எழுந்திருத்தலும் காலின்கண் தொழுதலும் அவர் நன்றென்ற சமயத்தின்கண் நிற்றலும் சிறந்த ஒழுக்கமாம். தவசியர், சுமந்தார், பிணிப்பட்டார், மூத்தார், பிள்ளைகள், பசுக்கள், பெண்கள், இவர்களுக்கு வழிகொடுத்து விலகிப் போகிறவர் பிறரால் வாழக்கடவர் என்று போற்றப் படுவர்.

அறிவால்மிகுந்தோர் தம்மை ஈன்ற தாயுடனாயினும் மகளுடனாயினும் தம் உடன் பிறந்தாளுடன் ஆயினும் தனித்திருக்க விரும்பார். நற்குடிப் பிறப்புடையார் கல்வி செல்வம் குணம் முதலியவற்றை பலமுறை எடுத்துக் கூறுர். சிறந்த குணமுள்ள மாணக்கர் ஆசிரியர் முன்பு அடங்கியிருத்தல் வேண்டுதலின் ஆசிரியர் பாடம்சொல்லாதிருந்தால் தாம் சும்மா இருக்கக்கடவர். அவர் தம்முன்பு இருந்தபோது அவர் கட்டளை இடாமல் இருக்க தாம் எழுந்து போகாதிருக்கக்கடவர். அவர் பாடம் முதலியவை சொல்லின் காதுகொடுத்துக் கேட்டு ஒப்புவிக்கக்கடவர். அவர் ஒன்றும் சொல்லாவிட்டால், தாம் மீண்டும் அவரைக் கேளாதிருக்கக் கடவர். பெரியோருடைய ஒழுக்கத்தை நினைந்து வாழக்கடவோர் தாம் ஒருவருக்குச் செய்த நன்றியின் பயனைச் சொல்லார். தமக்கு ஒருவரிட்ட உணவை இகழ்ந்துரையார். தாம் செய்த அறத்தைவும் விரதத்தையும் புகழ்ந்துரையார். ஒருவன்

தன்னுடைய மனைவி, அடைக்கலப் பொருள், தான் சேர்த்து வைத்த பொருள், இவைகளை அருமையாகப் பாதுகாக்க வேண்டும். பெரியோரிடத்தில் ஒன்றைப் பேசும்பொழுது வணங்கி நின்றுவது வாய் பொத்தி நின்றுவது சொல்வதன்றி வேறுவித மாகச் சொல்லற்க.

வாழ்த்து

திங்களொடு கங்கையணி செஞ்சடைமுக் கட்பெருமான் திருத்தாளேத்தும்
பங்கமில்நற் பண்பன்கோட் டூரங்க சாமிமன்னர் குடிநல் மக்கள்
தங்குளத்தின் இருள்துறக்கச் சமைத்தகதிர் ஹாஸ்டல்வெள்ளி விழாக்கா லத்தே
பொங்குமறி வருளொழுக்கம் புகட்டுகெட் டுரையொன்றைப் பொறித்தி என்ன,
பூபாலர் போற்றுதமிழ்ப் புன்னைவன நாதனென்பாற் புரிந்த அன்பார்
கோபால சுவாமிநற் காப்பாளன் கொடுத்தபணி குறிக்கோ ளாகத்
தாவாநல் இசையரங்க சாமியுண்டி உறையுளகம் தழைத்தே ஓங்க
காபாலி இறையருள்தான் வாழ்த்திஉளம் கசிந்தின்பம் காணு வோமே.

Rao Bahadur N. S. Narasimhachariar,
Dt. and Sessions Judge,
President Special Tribunal,
E. L. A. SALEM. 13—11—42.

A strange circumstance brought me into this building (I had almost said temple) I walked in and found this was the gift of a great Benefactor who came from the well known Kottur Mudaliar family. It was to me at once a joy and an inspiration to see the boys at their desks, pouring over their books. The place was quite clean. The dining hall had to be announced as such, because there was none of the odour of the kitchen there. The store-room would he quite an instruction to many a housewife. what is more, the young warden appeared to be every inch a gentleman, courteous, affable and very obliging. Institutions like this should multiply in our country. I wish this hostel every success. May this flourish for ever in growing memory of the great Founder.

நகைச்சுவை.

ஜி. சுப்பிரமணியப் பிள்ளை M. A,
தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

நவரசம் என்னப்படும் ஒன்பது சுவைகளுள் முதன்மையும் சிறப்பும் வாய்ந்தது நகைச்சுவை. இந்நகைச்சுவை எள்ளல், இளமை, பேதமை, மடன் என்று சொல்லப்பட்ட நான்கினுள் ஒன்றன் அடியாகப் பிறக்கும். இவற்றுள் எள்ளல் காரணமாகப் பிறக்கும் நகையை ஆங்கிலத்தில் Irony அல்லது Satire என்று வழங்குவர். இவ்வித எள்ளல் நகையானது ஒருவருடைய மனதை நோகச்செய்யும் விதத்தில் குத்தலாக இருக்கும். இதை நையாண்டி, பரிகாசம் என்றும்கூறுவர். ஆனல் மற்றைய இளமை, பேதமை, மடன் என்னும் மூன்றும் பிறர் எவருக்கும் நோதலை உண்டுபண்ணுது. அவ்வப்பாத்திரங்களினுடைய இளமையினுதல், பேதமையினுதல், மடமையானுதல் நகை விளைக்கக் கூடியவாய் அமையும். இவ்வகை நகைச்சுவை, தனிப்பட்ட சுத்த ஆசியமாய், கீழ்ப்பட்ட கோமாளிக் கூத்துப்போலன்றி, உயர்வும் சீர்மையும் பெற்று, குற்றமற்ற சிரிப்பை விளைவிக்கும் திறம் பெற்றுல் அதை ஆங்கிலத்தில் ஹியூமர் (Humour) என்று சொல்வர். இவ்வரிய சுவையை விளைவிக்கக்கூடிய ஆசிரியர்கள் ஒவ்வொரு மொழியிலும் மிகச் சிலரே இருத்தல் கூடும்.

ஹியூமர் என்னும் இவ்வித நகைச்சுவை சில இடங்களில் வெளிப்படையாய் விளங்கிக் கிடக்கும். இன்னும் சில இடங்களில் அதி நுண்ணிதாய் எளிதில் வாசகர்களுக்குப் புலப்படாத நிலையில் அமையும். சில ஆசிரியர்கள் சில தனிப்பாடல்களில் தாமாகவே இந்நகைச்சுவையை விளைவித்து இன்பமூட்டிவிடுவர். ஆனல் நாடக காப்பிய நூல்களில் சில பாத்திரங்களின் விபரீதப் பண்புகளின் வாயிலாகவும் இந்நகையை உண்டுபண்ணுவர். இதை Idiosyncratic Humour என்றும் கூறுவர். இத்தகைய ஆசியம் விளைவிக்கும் பாத்திரங்களிற் சிலர் அவ்வாறு தாம் ஆசியம் விளைவிப்பதைத் தெரிந்தே செய்வர். தமக்கு இன்னதென்று தெரியாமலே பிறர்க்கு நகை விளைவிக்கும் பாத்திரங்களும் உண்டு. தமிழ் இலக்கியத்திற் சில உதாரணங்களால் இச்சுவையைக்கண்டு தெளிவோம்.

ஒருவனுக்குக் கையில் சிரங்கு வந்துவிட்டால் கையைக் கீழே தொங்கவிட முடியாது. கையிற் கிளிகொண்டு திரிபவனைப் போல் எப்பொழும் கையை ஏந்திக்கொண்டே யிருப்பான். மணி

மணியாகக் கொப்புளங்கள் கையிற் பூத்திருக்கும். சில புண்பட்டுச் சிவந்திருக்கும். சில ஆறித் தழும்பு பட்டிருக்கும். இன்னும் சில புதியவாய்க்குருத்துவிட்டு வெள்ளிய முத்துக்கள் போலத்தோன்றும். இது சாதாரணமாய் நாம் வெளி உலகில் பார்த்துவரும் காரியம். ஆனால் இதைக்குறித்து நற்புலமை வாய்ந்து நகைச்சுவை ததும்பப் பாடும் புலவர் கவியாகப் பாடினல் அதில் ஒரு விந்தையும், வேடிக்கையும் ஆசியமும் இருக்கும் இது சொல்லும் விதத்தில் அமைந்த நகைச்சுவை பாட்டு வருமாறு:

"முத்துப் பவழம் முழுவயிரம் மாணிக்கம்
பத்தியொளி வீசு பதக்கமெலாம் — சித்தன்
சிரங்கப்பீ ராயன் சிறியேன் தனக்குத்
தரங்கண்டு தந்த தனம்"

கையில் தினவும் குத்தும் எடுத்துத் துன்பமுறும் ஒரு செய்தியை எவ்வளவு இனிமையாகவும் இலகுவாகவும் பாடி நம்மைச் சிரிக்க வைத்துவிட்டார் புத்தேரிப் புலவர். கையிற்கண்ட சிரங்குகளை நவரத்தினங்களாக்கி அவை தமக்குச் சிரங்கப்பராயன் என்னும் வள்ளல் வரிசை தெரிந்து அளித்த வெகுமதி என்னவும் சிரிக்காதவர்களும் சிரித்துவிடுவார்கள். சிரங்கு வலியெல்லாம் எங்கோ ஓடிப்போய் விடும்போல் இருக்கிறது. அதுதான் திருவள்ளுவரும் "இடுக்கண் வருங்கால் நகுக" என்றார் போலும்!

கூனர்களும், குறளர்களும், பெண்களுக்குத் துணையாய் அமர்த்தப்பட்டு எப்பொழுதும் நகை விளைவித்திருப்பவர்கள். இவர்களுடைய வீரத்தைக்குறித்து, சீவக சிந்தாமணியில் ஒரு சம்பவம் கூறப்படுகிறது. காந்தருவதத்தை என்பவளுடைய பரிவாரங்களுள், கூனரும், குறளரும் அவளுடைய மெய்க்காப்புக் காகச் சுற்றியிருந்தனர். அவள் தன் சுயம்வர மண்டபத்திற்குச் சென்றபொழுது, அவளுக்கு முன்னை இவ்வீரப்படை சென்ற அழகு வெகு விநோதமாய் இருந்ததாம். குறுகிய வடிவினராயிருந்தும் அளவோடு அடியெடுத்து வைத்துக் கையை முன்னும் பின்னும் வீசி நடந்தபொழுது அவர் கழுத்தின் மாலை அங்கும் இங்கும் அசைந்தது. போர்க்களம் செல்லும் வீரர்போல் கம்பீர நடைநடந்து சென்றனர். திருத்தக்க தேவர் வெகு அழகாகக் கூறியிருக்கிறார்.

"ஆரந் துயல்வர வந்துகில் சோர்தர
வீரம் படக்கையை மெய்வழி வீசித்
தேரை நடப்பன போற்குறள் சிந்தினோ
ரோரு நடந்தென வொண்டொடி முன்னே"

தேரைபோல ஊர்ந்துசெல்லும் இக்குள்ளர்கள் வெகு ஆர்ப்பாட்டத்துடனேயே மண்டபம் சென்றிருக்கவேண்டும். ஆனால் அங்கு

சீவகனேடு மற்ற அரசர்கள் போர்தொடங்கியவுடன் இக்கூனர், குறளர்களுடைய வீரமெல்லாம் பறந்து விட்டது. எங்கு ஒடி ஒளிவதெனத் தெரியாது திகைத்தார்கள். ஒளிவதற்குச் சரியான இடம் கிடைக்கவில்லை. பாலைவனத்தில் நெருப்புக்கோழி தலையை மணலிற் புகுத்து ஒளிந்துகொண்டதாக நினைப்பதுபோல், சிலர் பொற்பெட்டிக்குள் நுழைந்து சாந்துவைக்கும் சாடிக்குள் தலையை நுழைக்க முயன்றனர். சிலர் அங்குள்ள பூமாலைகளை எடுத்துத் தங்கள்மேல் மூடிக்கொண்டு பூமாலைகளைப் போலவே காணப்பட்டனர். சிலர் தூண்களின் பின்னே மறைந்துகொண்டனர். இதைக்கண்ட பலரும் அவர்களுடைய வீரத்தைக் கண்டு சிரிக்கலுற்றனர். இவ்வாசியக்கவி வருமாறு:

"கூன்களுங் குறளும் அஞ்சிக்குடர்வெந்து கொழும்பொற் பேழை
தான்கொளல் பாயவோடிச் சாந்துக்கோய் புகிய செல்வ
தேன்கொள் பூமாலை குடித்தாமமாய்த் திரண்டு நிற்ப
வான்பளிங் குருவத்தூணே மறைபவு மாயவன்றே"

சிந்தாமணியில் வேறோரிடத்தைக் கவனிப்போம். சீவகன் பெறலரும் மங்கையர் பலரை எளிதிற்பெற்று இன்புற்றவன். அவன் விமலை என்னும் ஒரு பெண்ணையும் மணந்தான். அதனல் அவன் தோழர்கள் எல்லாம் அவனை மன்மதன் என்று கூறிப் புகழ்ந்தனர். ஆனுல் அவர்களுள் ஆசியம் நிறைந்த புத்திசேனன் என்னும் அந்தணன் வேடிக்கையாகப் பேசுவதில் திறமை வாய்ந்தவன். அவன் நகையாடலைக் கருதியும், சுரமஞ்சரி என்னும் பெண்ணைச் சீவகன் மணக்கும் விதத்தில் அவனைத் தூண்டும் பொருட்டும் கேலியாகப்பேசலுற்றுன் "நீங்கள் இவனை மன்மதன் என்று புகழ்வதற்குக் காரணம் என்ன? பெண்தான் மலிந்து கிடக்கிறதே. புருஷர்கள் குரங்கு போலிருந்தாலும் சரியே, பெற்றோர் விரும்பித் தங்களைக் கட்டிக்கொடுத்துவிட்டாற் போதும், இந்தப் பெண்கள் பயபக்தியோடு வணங்கி புருஷர்களின் வசமாகின்றனர். இன்னுமொரு விஷயமும் இருக்கிறது. பெண்களைப் பெறுவதே பெருந்தொல்லை. அவர்களுக்கு வரன்தேடி முடிப்பதோ வெகு கஷ்டம். பெண்களை வீட்டில் வைத்துக்கொண்டு வயது முதிர விடுவது பாவமான காரியம். அதுமட்டுமா? பெரிய தவறு நேர்ந்துவிடும். அதனல் இந்தப் பெண்களைப் பெற்றவர்கள் எவன் வருகிறுனென்று எதிர்பார்த்திருப்பர். யாராவதுவந்து கேட்டாற் போதும்; சனியன் தொலைந்ததென்று அவன் தலையில் வைத்துக் கட்டிப் பெண்ணை அனுப்பி விடுவார்கள். இதுவே உலகியற்கை. இதற்கு மன்மதன் எதற்கு ஐயா? என்கிறுன்."

"அம்பொரைந்துடைய்ய காமனைய்ய னென்ன வந்தணன்
அம்புநீர ரல்லர் நன் குரங்கு நீர ராயினும்
தங்குரவ்வர் தாங்கொடுப்பின் நெஞ்சுநேர்ந்து தாழ்வர்தாம்
பொங்கரவவ்வல் குலாரெனப் புகன்று சொல்லினான்"

"அற்றுமன்று கன்னியம் மடந்தை மாரணிநலம்
முற்றினாரை நீடுவைப்பின் மூள்கும் வந்து பாவமும்
குற்றமற்று மாகுமென்று கோதை சூழ்ந்து கூறினார்க்
குற்றடுத் தயாவுயிர்த் தொழிதல் யார்க்கு மொக்குமே".

இச்செய்யுட்கள்•சீவகனை ஏளனம்செய்வதுபோற் காணப்படினும் உண்மையில் சீவகன் உக்கிமக்கிப்போய்க் கிடந்த மகளிரையன்றி, எழிலும் ஆற்றலும் வல்ல யவ்வன மங்கையரைப் பீடும் புகழும் வாய்ப்பப் பெற்றவன் ஆகலின் இவை ஏளனமாகா. குற்றமற்ற ஆசியமாகவே கொள்ளப்படும்.

இவ்விதம் தமிழ் இலக்கியத்திற் பலவிடங்களிலும் இந்நகை சுவையைப் பரக்கக் காணலாம். அவற்றைத் தெரிந்து படித்தால் தெவிட்டா விருந்தாகவே யிருக்கும்.

S. Parthasarathi Aiyar,

Dt. Judge.

TANJORE. 8—12—42.

I had great pleasure in visiting the hostel. It is situated in ideal surroundings and the hostel provides all amenities to the boys, who are indeed lucky to be inmates of the institution. I hope that the boys would rise up to the high level of character and culture that the great Donor expects of them. The warden seems to be taking much interest in the boys.

கயவர் யார்?

மு. வரதராசனார் B. O. L.
தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை.

பொதுவாக, உலகத்தார் புகழ்ப்பித்தர் என்று கூறலாம். மக்கள் புகழுக்காகவே செயற்கரிய செயல்களைச் செய்ய முற்படுகின்றார்கள். போர் வீரர்களைக் குறிப்பிடும்போது, புகழை விரும்புகின்றவர்கள் என்றும் புகழின் பொருட்டு உயிர்வாழ்வை விரும்பாதவர்கள் என்றும் கூறுகின்றார் திருவள்ளுவர். "சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்" (குறள்—777).

ஈகையால் விளையும் புகழ் வள்ளல்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. அதனினும் சிறந்த பயன் ஒன்று அவர்களுக்கு இல்லையாகவே, புகழுக்காகவே வாழத் தொடங்குகின்றார்கள். "ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது, ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள்—231.) என்பது அவர்கள் கண்ட உண்மை.

பண்டைக் காலத்துப் பாடல்கள் பலவற்றையும் ஆராய்ந்தால், இத்தகைய வீரர்களின் வாழ்வையும் வள்ளல்களின் வாழ்வையும் காணலாம். அப்பாடல்கள் அவர்களைப் புகழ்தலே நோக்கம் எனக் கொண்டவை. அவற்றைப் பாடிய புலவர்களோ, புகழ்வதைக் கடமையாகக் கொண்டவர்கள். பாடல்பெற்ற பெருமக்களோ புகழுக்காக உடல், பொருள், ஆவி அனைத்தும் அளித்தவர்கள். புலவரால் பாடப்பெறும் புகழுடையவர்க்கே வானுலக ஊர்தி உண்டு என்பது முன்னோர் நம்பிக்கை.

இந்தப் புகழ்ப்பித்து, தமிழுலகைக் கெடுத்துவிட்டது என்பது சிலர் கருத்து. புகழ்ப்பித்து இந்த நாட்டைக் கெடுக்கவில்லை. அதற்கு மாறாக, நற்செயல்களைப் பாராட்டிப் புகழும் பழக்கம் மக்களிடையே குறையக் குறையவே நாடு கெட்டது என்பது உண்மை. இதனை ஒருவாறு ஆராய்வோம்.

பொதுவாக உலகத்தார் புகழ்ப்பித்தர் என்று முன்னே அறிந்தோம். மிக உயர்ந்த குறிக்கோள்கொண்டு வாழ்க்கையை வெல்வோர் சிலர் உண்டு. அவர்கள் புகழையும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் அவர்கள் வாழ்வை அப்படியே உலகம் பின்பற்றும் என்று எண்ணிவிடலாகாது. "வேண்டேன் புகழ்" என்றார் மாணிக்கவாசகர். அவர் பக்திப் பித்தர். அவர் கூறியது முழுதும் உண்மையே. அவர் நிலையோ மிக உயர்ந்த நிலை. அவர்

போல் கூற வல்லார் எத்தனைபேர்? "வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்" என்று கூறும் ஆற்றல் — உலக வாழ்வையும் வேறு எவ்வகை வாழ்வையும் மதியாத மன உறுதி பெற்ற மாணிக்கவாசகராலேயே "வேண்டேன் புகழ்" என்று கூற முடிந்தது. ஆனால் இந்த உலக வாழ்வைப் பொருளாக எண்ணுவோரே பெரும்பான்மையோர். அவர்களுக்குப் புகழே சிறந்த தூண்டுகோலாகவும் நோக்கமாகவும் துணையாகவும் இருக்கவல்லது.

பழங்காலத்தில் தோன்றிய பாடல்களை - சங்கப்பாட்டுக்களை - மேலே ஆராய்ந்தோம். முயற்சியால் உயர்ந்த தமிழனும் தமிழனால் உயர்ந்த தமிழும் வீறுபெற்று வாழ்ந்த காலம் அது. அந்தக் காலத்தில் மக்கள் வாழ்வுக்குப் புகழ் பெருந்துணை செய்தது. பிற்காலத்தே மறுமைப் பேச்சுப் பெருகிற்று; வாழ்வில் அச்சம் பரவிற்று. அவற்றால் விளைந்த பயனோ மிகச்சிறிது. மறுமை மறுமை என்று மக்களெல்லாம் இம்மையைத் துறந்துவிட்டார்களா? அவ்வாறு ஒன்றும் துறந்துவிடவில்லை. பேச்சில் மறுமையும் செயலில் இம்மையுமாகப் பொய் வாழ்வே பெருகிற்று. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தந்திரமே பரவிற்று. புகழாசை யாரையும் விடவில்லை. நேர்மையான வழிகளில் அன்று புகழ்பெற்றதுபோய், தந்திரமான வழிகளில் இன்று புகழ் பெறுகின்றார்கள். அன்று வீரத்தாலும் கொடையாலும் புகழ்பெற்றதுபோய், இன்று அரசியல் உத்தியோகத்தாலும், ஈயாச் செல்வத்தாலும் புகழ்பெறுகின்றார்கள். அன்று புலவர் பாட்டால் புகழை அளந்து மகிழ்ந்தது போய், இன்று அரசியல் தேர்தல்களால் (எலெக்ஷன்களால்) புகழை அளந்து ஏமாறுகின்றார்கள். முடிவில், "உலகம் கெட்டுப்போனது; தந்திரமும், ஏமாற்றமும் இல்லையானால் வாழமுடியாது; நல்லவனுக்குக் காலம் இல்லை. கடவுள் எங்கே? அறம் எங்கே?" என்று சோர்ந்து சோம்பற் பேச்சுப் பேசலானோம்.

நம் சோர்வுக்கு மருந்து தேடவேண்டும். "உலகம் கெட்டுப் போகவில்லை. தந்திரமும் ஏமாற்றமும் இல்லாமல் வாழமுடியும். நல்லவனுக்குக் காலம் உண்டு. கடவுளும் உண்டு. அறமும் உண்டு" என்று ஊக்கம் பெற்று உண்மைப் பேச்சுப்பேசத் தொடங்கல் வேண்டும். வழி என்ன?

இந்த உலகத்தில் மாணிக்கவாசகர்போலப் புகழும் வேண்டாத உயர்ந்த நிலை உற்றவர்களைப் போற்றுவோம். அவர்களை அந்த அளவில் விடுவோம். மற்ற உலகத்தைப் பார்த்துப் பயன் பெறுவோம்.

கடவுள் படைப்பு வியப்பானது. அவர் படைப்பில் வீணானது ஒன்றும் இல்லை. மக்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் பயன்படுகின்றவரே. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் ஆற்றல் பெற்றவரே. அந்த ஆற்றல் எது என்று அறிந்து அதனை எடுத்துப் புகழவேண்டுவது நம் கடமை. குழந்தை இயல்புகளை நன்கு அறிந்தவர்களே குழந்தைகளை வளர்க்க வல்லவர்கள். "மக்கள் இயல்புகளை நன்கு அறிந்தவர்களே மக்களைத் திருத்த வல்லவர்கள். அவர்களே புலவர்களாகவும் சீர்திருத்தக்காரர்களாகவும் விளங்குவார்கள்" குழந்தை செய்யும் தடுக்குகளையே எந்நேரமும் எடுத்துப் பேசுவோரிடம் குழந்தை ஒரு நாளும் அன்பு காட்டாது; அவருடன் இணங்காது; அவர் ஏவும் வேலையைச் செய்யாது. அந்தக் குழந்தையின் நல்ல குணம் இன்னது என்று அறிந்து, "அப்பா, நீ நல்ல பையன் என்று தெரியுமே. நேற்று நீதானே எனக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தாய். சுறுசுறுப்பான பையன். அதோ அதை எடுத்து வா" என்று உண்மை அன்புடன் (தந்திரமாக அல்ல) பேசினால், குழந்தையை எளிதில் திருப்பலாம். பெரும்பாலான மக்கள் உடல் வளர்ச்சியில் வளர்ந்திருக்கிறார்களே அன்றி, மன இயல்பில் வளர்ச்சிபெறாமல் அறியாக் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். ஆதலின், சீர்திருத்தம் அந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். மக்களின் பண்புநலனை அறிந்து புகழ்ந்துரைக்கும் வழக்கத்தை எக்காலத்தும் கைவிடுதலாகாது.

"எதை மதிக்கிறோமோ, அது உயரும்" என்பது அறிஞர் பலர் கருத்து. "எதைப் பயன்படுத்துகிறோமோ, அது உய்யும்" என்னும் கூர்தல் அறத்தார்—டார்வின் முதலானோர்—கொள்கையும் அதனை ஒத்ததே. புகழை மதிக்கவேண்டும்; புகழாசையைப் பயன்படுத்த வேண்டும். ஈகைக்குணம் சிறிது உள்ளவரைப் புகழத் தொடங்குவோம்; அவர் பெரிதும் ஈவார்; மேலும் புகழ்வோம்; அவரே வள்ளல் ஆவார். இந்த நன்முயற்சி வெற்றி தரும்; திரு. அரங்கசாமி முதலியார் போன்றார் பலரைத் தமிழ் நாட்டுக்கு உதவும். "உண்மையுடையார் பலரைத் தேடிக்கண்டு அவரைப்புகழ்வோம்; உண்மை பரவும், பொய் அழியும். நேர்மையுடையார் பலரைத் தேடிக்கண்டு அவரைப்புகழ்வோம்; நேர்மை வாழும், தந்திரம் ஒழியும். தொண்டு வல்லார் பலரைத் தேடிக் கண்டு அவரைப் புகழ்வோம்; தொண்டு ஓங்கும், வஞ்சகம் சாகும்."

அவ்வாறு செய்யாமல், புகழாமல், புகழாசையை வளர்க்காமல் விடுவோமானால், தமிழுலகம் மேலும் கெடும் இன்று குடும்பங்களில் தந்தைக்கும் மகனுக்கும் உள்ள கசப்பு ஒருபுறம்.

தமயனுக்கும் தம்பிக்கும் உள்ள பகை ஒருபுறம். மாமிக்கும் மருகிக்கும் உள்ள பூசல் ஒருபுறம். தெருவெல்லாம் பல கட்சியாய்ப் பிளவுகள் பல ஆயின. ஊரெல்லாம் பற்பல வேற்றுமையாய்ப் பிணக்குகள் பல ஆயின. தமிழ்நாடு என்பார் கண் முன்னே, ஒற்றுமை என்பது மருந்துக்கும் இல்லாக்கொடுமையே கொடுமை!

இந்தக் கொடிய நிலை நீங்கவேண்டும் என்று அனைவரும் விரும்புகின்றோம். அதற்கு முயற்சி செய்கின்றோமா? இல்லை. நம்முள் ஒற்றுமை இல்லை என்று பேசுகிறோம். அதன் காரணத்தை ஆராய்கின்றோமா? இல்லை. ஒன்றுமே இல்லை என்பது பிற்போக்கான நாட்டு மக்கள் பேசும் பேச்சு. முற்போக்கான நாட்டுமக்கள் வரலாற்றில் இப்பேச்சுக் காணமுடியாது. காரணம் பற்றிய பேச்சே அவர்களிடம் காணமுடியும். ஒற்றுமை இல்லை, ஒற்றுமை இல்லை என்று வாளா பேசுவதைவிட, காரணம் கண்டு அதுபற்றிப் பேசுவது நலம். அது எப்படி? இதோ இப்படி:— "தமிழர் ஒருவரை ஒருவர் விரும்புவதில்லை; வெறுக்கின்றனர்; பகைக்கின்றனர். ஒருவரிடம் நல்ல பண்பு கண்டு புகழ்வதில்லை; குற்றங் காண்கின்றனர்; குறை கூறுகின்றனர்." இவ்வாறு இன்றுமுதல் பேசுவோம். பிரிவு-பகை-அடிமை என்னும் நோய் ஒழியும். ஒற்றுமை - அன்பு - உரிமை என்னும் நலம் ஓங்கும். எனவே, சுருங்கச்சொல்லின் ஒவ்வொருவரிடமும் உள்ள நன்மை கண்டு புகழ்வோமாக; விரும்புவோமாக; குற்றம் கண்டு பழிப்பதையும் வெறுப்பதையும் விடுவோமாக. (கலைத்துறையில் குற்றம் காணல் வேறு; அங்கு ஆராய்ச்சியே நோக்கம்; பழிப்பதும் வெறுப்பதும் நோக்கம் அல்ல; ஆதலின் அது வேறு.)

இன்றுமுதல் இவ்வாறு செய்யத் தொடங்குவோமானல், நாளையே தமிழ்க் குடும்பத்தில் இன்ப அமைதி காண்போம்; தமிழ்த்தெருவெல்லாம் அன்பு வாழ்வு காண்போம். தமிழூர் தோறும் உரிமை உயர்வு காண்போம். தமிழுலகம் முழுவதும் ஒற்றுமை நலம் காண்போம். அரசியல் உத்தியோக வேட்கையும் ஈயாச் செல்வ வேட்டையும் போய், பண்டைத்தமிழ்நாடே போல, வீரமும் ஒப்புரவும் இடம் பெறும். தந்திரமும் ஏமாற்றமும் அழிந்து நேர்மையும் தொண்டும் நிலவும். பகையினையும் பூசலையும் பெருக்கும் தேர்தல்களுக்கும் வழக்குகளுக்கும் செலவாகும் செல்வம் எல்லாம் கல்வி நிலையங்களுக்கும் மாணவர் விடுதிகளுக்கும் வந்து உதவும். 'எங்கள் நாட்டில் நல்ல தலைவர்கள் இல்லை. அவர் வஞ்சகர், இவர் பொய்யர், அவர் தந்திரக்காரர், இவர் காரியவாதி, அவர் வெறும் பேச்சாளி, இவர் கோழை, அவர் முரடு, இவர் வழவழ" என்னும் பேச்சுச்செத்து, "எங்கள்

நாட்டில் தக்க தலைவர் பலர் உள்ளனர். அவர் அறிஞர், இவர் கலைஞர், அவர் கொடையாளி, இவர் செயலாளி, அவர் சொல் வன்மை மிக்கவர், இவர் சூழ்வன்மை மிக்கவர், அவர் திண்ணியர் இவர் பொது நோக்கினர்'' என்று இறுமாப்போம். அன்று நம்மை யல்லவா உலகம் எதிர்நோக்கி நிற்கும்?

இவ்வளவும் வெறுங் கனவு அல்ல; இன்று கனவாய்த் தோன்றலாம்; நாளையே நனவாதல் திண்ணம். ஒரு சிறு மாறுதல் நம் உள்ளத்தில் (உலகத்தில் அல்ல) வேண்டும். அது என்ன? நாம் பிறரைப் பழிக்க வல்லவராய் இருக்கின்றோம்; புகழ மறந் தோம். பிறரிடம் குற்றம் காண வல்லவராய் இருக்கின்றோம்; குணம் காண மறந்தோம். அந்த நிலையினையே மாற்றவேண்டும். குற்றமோ குணமோ காணும் வல்லமை நமக்கு உண்டு. குற்றத் தைக் காண்பதும் வல்லமையே. திருவள்ளுவர் அந்த வலலமை கயவர்க்கே உண்டு என்கிறார்.

(உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின்) பிறர்மேல் வடுக் காண வற்று ஆகும் கீழ். (குறள்-1079) அந்தக் குறளைப் படிக் கும்போது, நாமனைவரும் கீழ்மக்களோ என்ற எண்ணம் எழ, மானம் உயிரை ஈர்க்கின்றது. தமிழர் கயவர் அல்லர் என உலகுக்கு உணர்த்துவோம். குற்றம் காண வல்லார் என்னும் பழி ஒழிய, குணம்காண வல்லார் என்னும் புகழ்பெறுவோமாக.

V. S. Tyagaraja Mudaliar M. A.,

"I find that in the daily routine followed in the hostel due attention is paid both to education and sports. I am quite sure that the boys who benefit themselves by this great institution will become useful citizens of India."

S. A. Aiyasami Chettiar M. A., B. L.,

Dt. Munsif.

"I was very much impressed with all that I saw. The inmates were studious, the garden was well kept and the premises were scrupulously clean".

மார்க்கு கொடுக்கும் விதம்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் **B.A. B.L.**

சிஷ்யன் குருவினிடம் கற்க வந்தான். எத்தனையோ காரியங்களை குருவும் சொல்லிவந்தார். குருவை விட்டுப் பிரியும் போது நான் எல்லாவற்றையும் கற்றுவிட்டேனா? என்று கேட்டான் மாணவன்.

“இல்லை அப்பா. நீயே இனிக் கற்றுக்கொள்ளவேண்டியதுதான். அதுவும் எவ்வளவோ இருக்கிறது” என்றார் குரு.

“எப்போது எனக்கு எல்லாவற்றையும் கற்றேன் என்று தெரியவரும்” என்று கேட்டான் மாணவன்.

“எப்போது அறிந்ததும் அறியாததும் ஒன்று என்று உனக்குப் படுகிறதோ அப்போது தான் எல்லாவற்றையும் கற்றவன் ஆவாய்” என்றார் குரு.

[நமக்கு அறிவு தத்துவம் கிடையாது: கடவுள் தானே நமக்குள் அந்தர்யாமியாய் இருந்து எல்லாவற்றையும் அறிகிறார். அதுபற்றி அறிந்ததையே அறியாதது என்றுதான் நாம் கருதவேண்டும். இது தான் குரு சொன்ன வார்த்தையின் பொருள்.]

மாணவன் ஊருக்குப் போனான். ஒரு மாசம் இரண்டு மாசம் சுற்றியடித்தான். பிறகு புதுப் புஸ்தகங்களை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தான். ஒன்றும் விளங்கவில்லை. அவைகளை வைத்துவிட்டு குரு சொல்லிக்கொடுத்த புஸ்தகங்களையே எடுத்துப் பார்த்தான். அவைகளிலும் ஒன்றும் விளங்கவில்லை.

மாணவனுக்கு என்றுமில்லாத சந்தோஷம் உண்டாய்விட்டது. அப்படியே தகப்பனாரிடம் போனான். ஒரே எக்களிப்போடு கூத்தாடிக்கொண்டு நின்றான்.

“ஏன் இவ்வளவு சந்தோஷம்?” என்று தகப்பனார் கேட்டார்.

“எல்லாப் படிப்பும் எனக்கு வந்துவிட்டது” என்று சொன்னான் மகன்.

“அது எப்படி” என்று கேட்டார் தகப்பனார்.

“தெரிந்ததும், தெரியாததும் ஒன்றாக மனசுக்குப் படவேண்டும் என்று குரு சொல்லியிருக்கிறார்” என்று சொன்னான்.

* * * *

கதை முடிந்துவிட்டது. பூர்வமான கதையுந்தான்.

யோசித்துப் பார்த்தால், தற்காலத்திய நம்மை நோக்கி எழுதிய மாதிரியிருக்கிறது கதை. இது தெரிந்தது, இது தெரியாதது என்று நாம் பகுத்துணர உலகமே இடங்கொடுக்க மாட்டேன் என்கிறது. எப்படி என்று பார்ப்போம்.

* * * *

தெற்கு ஜில்லாவிலுள்ள டிரெயினிங் ஸ்கூலுக்கு இன்ஸ்பெக்டர் வந்தார். டிரெயினிங் ஸ்கூல் மாணவர் ஒருவரைப் பார்த்து "காண்டா மிருகத்தைப் பார்த்திருக்கிறீரா" என்று கேட்டார்.

"பார்த்திருக்கிறேன்" என்று சொன்னார் அவர். எங்கே பார்த்திருக்கிறீர்? என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

மாணவர் அப்படியே அந்த அறையை விட்டு ஓடினார். சிறிது நேரங்கழித்து ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வந்தார். புஸ்தகம் படமில்லாத ஒரு குட்டித் தமிழ் அகராதி. வெகு எக்களிப்புடன் 'கா' பக்கத்தை திருப்பி இன்ஸ்பெக்டர் முன் வைத்து, "இங்கேதான் பார்த்தேன்" என்று, காண்டாமிருகம் என்ற வார்த்தையை நகத்தால் அழுத்திக் காட்டினார். கடுதாசி கிழியாததுதான் பாக்கி. அவ்வளவு அழுத்தமாய்க் காட்டினார் மாணவர்!

அகராதியில் வார்த்தைக்கு அர்த்தம் போட்டிருந்தது. அதாவது "மிருக இனத்தைச் சேர்ந்தது" என்று.

* * * *

அந்த மாணவர் நமக்கு நல்ல வழிகாட்டி. அபூர்வமான வழிகாட்டி. எத்தனை விஷயங்களை இந்த முறையில் 'அறிந்தோம்' நாம் என்பதை யோசனை பண்ணச் செய்கிறார் அல்லவா!

அறியவில்லை என்கிற உணர்ச்சியே நமக்கு வருகிறதில்லை!

* * * *

பூகோள சாஸ்திரத்தில் அமெரிக்காவைப் பற்றிப் படித்துவிட்டு, எல்லாம் தெரிந்துவிட்டதாக இறுமாப்பு அடைகிறோம். நயகாரா தெரிந்துவிட்டது. மிஸிஸிபி நதி தெரிந்துவிட்டது. அமெஸான் நதி தாம்பிரபருணியை விடப் பெரிது, காவேரியை விடவும் பெரிது என்று தெரிந்துவிட்டது! நூறு மைல் அகலமுள்ள நதியல்லவா தெரிந்துவிட்டது. ஷார்ட்டு ஸைட்டுக்காக கண்ணாடி போட்ட கண்ணுக்கல்லவா தெரிந்துவிட்டது. சரி. இன்னொன்றைப் பார்ப்போம்.

இங்கிலாந்துக்குப் போகாமலே பைன் மரம், பைன் காடு இதையெல்லாம் தெரிந்ததாக பாவனை. ஆசிரியர் ஸ்காட் எழுதிய

நாவல்களைப் படித்துவிட்டு ஸ்காட்லாண்டிலுள்ள மலைப்பிரதேசங்களையும் கோட்டைகளையும், கோட்டைகளின் வாசல்கள் என்ன தாழ்வாரங்கள் என்ன, சந்து பொந்து என்ன, எல்லாவற்றையும் தெரிந்துவிட்டதாகவே எண்ணம்.

இங்கிலாந்தின் பண்பாட்டுச் சரித்திர புஸ்தகமொன்றை வாசித்துவிட்டு பூர்வ பண்பாடும், இடைக்காலத்துப் பண்பாடும், தற்காலப் பண்பாடும் அடடா! எப்படியிருக்கிறது என்று வியக்கிற காரியத்தை என்ன என்று சொல்ல. ஆங்கிலேயருக்கே அதெல்லாம் எளிதில் விளங்காது. இங்கிலாந்து தேசத்தில் கால் எடுத்து வையாதீ நமக்கா விளங்கிவிடப்போகிறது!

இதெல்லாம் போக, கன்றுவியிலும் கன்றுவி என்னவென்றால், ஆங்கிலக் கவியே நமக்குத் தெரிந்துவிட்டதென்ற எண்ணந்தான். ஏதோ ஒரு கவியின் வெறும் சாராம்சத்தை அறிந்து கொள்ளுகிறது, அப்படியும் இப்படியுமாகப் பொழிப்புரை ஒன்றை எழுதுகிறது, அல்லது எடுத்துச் சொல்லுகிறது. வார்த்தைகளுக்கு இலக்கண அமைப்பை சொல்லிவிடுகிறது. இதெல்லாம் கவியை உணர்ந்ததாக ஆகுமா? கவிப்பண்பை உணர்ந்ததாக ஏற்படுமா? பாவம், அதற்கான உள்ளுணர்ச்சி, இவைகள் தெரிந்தால் அல்லவா கவி தெரிந்தது என்று ஆகும். அல்லாத பக்ஷம் கரும்புச்சாற்றை விட்டுவிட்டு, வெறும் சக்கையைச் சவைக்கிற காரியந்தானே!

இந்த ஏமாற்றமும் ஏமாளித்தனமும் என்றைக்கு நம்மை விட்டுப்போகுமோ தெரியவில்லை. ஆனாலும் இவைகளைப் போக்கடிக்கிறதற்கு ஒரு வழியிருக்கிறது.

பள்ளிக்கூடத்தில் பரிக்ஷைகள் நடக்கும்போது மாணவர்களைத் தங்களுக்குத் தெரிந்தது இன்னதென்றும் தெரியாதது இன்னதென்றும் பகுத்தறியும்படி தூண்டவேண்டும்; இடங்கொடுக்கவாவது வேண்டும். பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் வைத்துக்கொண்டு இடங்கொடுக்கமாட்டேன் என்றுதான் சொல்லுகிறது உலகம். ஆனால் அவர்களோடு நாம் முரண்ட முடியுமா: முடியாது.

பள்ளிக்கூடமும் ஆசிரியர்களும் சேர்ந்து ஒத்துழைத்தால் ஒருவகையாகக் காரியம் சித்தியாகும்.

கேள்விகளுக்கு ஒரு பையன் விஷயம் தெரிந்தே எழுதலாம் (யானை ஒன்றைப் பார்த்துவிட்டு எழுதலாந்தானே). அவனுக்கு ஐம்பது மார்க்குக் கொடுக்கவேண்டும். மற்றொரு பையன், காண்டா மிருகத்தைப்பற்றி புஸ்தகத்தைப் புரட்டிப்பார்த்தான்.

படங்களைப் புரட்டிப் பார்த்தான். ஆசிரியருடைய பிரசங்கத்தையுங் கேட்டுப் பார்த்தான். கடைசியில் கேள்விக்கு விடை எழுதும்போது **தெரியாது** என்று எழுதிவிட்டால், அவனுக்கு நூறு மார்க்கு கொடுக்கவேண்டும். தெரியாது என்று உண்மையைச் சொல்லுவதற்கு மார்க்கு அதிகமாகக் கொடுக்கிறது என்ற சம்பிரதாயம் ஏற்பட்டுவிட்டால், வயசானகாலத்தில் அமெரிக்கா தெரிந்துவிட்டது,··· ஆங்கிலக்கவி தெரிந்துவிட்டது என்றெல்லாம் எண்ணமாட்டார்கள். கூசாமல் அப்படிச் சொல்லவும் முன் வரமாட்டார்கள். பிறர் அப்படிச் சொல்லுவதைப் பார்த்தால் லஜ்ஜைப்படுவார்கள். கண்டதுதான் காட்சி காணாதது காட்சி அல்ல.

Swami Vipulananda B. Sc. (London)

Belur Mutt, Howrah.
16—3—42

I visited Mannargudi to participate in the annual literary and religious conference (Vidva-Sabha) held in connection with the K. R. M. Estate endowment. Hearing that a hostel is run for poor deserving students under the auspices of the same charitable endowment, I made it a point to visit the hostel and see things for myself. The warden who was an under graduate at the Annamalai University when I was the professor of Tamil then, kindly received me and took me round. I was delighted with all that I saw the general neatness of the whole establishment, the orderly manner in which the stores are arranged, the lay-out of the flower and Vegetable gardens, the bathing and conservancy arrangements and the health of the pupils. I suggested certain additions to the ornamental side of the flower garden. I congratulate the management on having secured the services of a warden who is so devoted to the work and who is so willing to learn and profit by other people's experience.

உயர்வு உள்ளல்.

ச. கந்தசாமி முதலியார்
உபதலைவர், சென்னை வேதாந்த சங்கம்,
தமிழாசிரியர் இந்து தியலாஜிகல் உயர்நிலைப்பள்ளி.

உயர்வாகிய-நல்ல-தூய-எண்ணங்களையே எண்ணுக என்பது இத்தலைப்பின் பொருள். இஃது ஆசிரியர் திருவள்ளுவர் இட்ட கட்டளை. என்னை? மாந்தர் அனைவரும் உயர்வு பெற விரும்புகின்றனர். கல்வியில் உயர்வு, தொழிலில் உயர்வு, பொருளில் உயர்வு, புகழில் உயர்வு, அழகில் உயர்வு, குடும்பத்தில் உயர்வு, நாட்டில் உயர்வு, சாதலிலும் உயர்வு பெற விரும்புகின்றனர். ஆயின் சிலரே உயர்வு பெறுகின்றனர். பலர் உயர்வு பெறுவதில்லை; இழிவும் பெறுகின்றனர். இதற்கு என்ன காரணம்? "மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்கின்றார் திருவள்ளுவர். மாந்தர் எண்ணம் எவ்வளவு உயர்கின்றதோ அவ்வளவு உயர்வையே அவர்கள் பெறுவர். உயர்வாகிய எண்ணங்களையே எண்ணுவது எளிதான செயலன்று. இதனைப் பழக்கத்தினால் பெற வேண்டும். பழகுவதற்கும் மாணவப் பருவமே சிறந்த பருவம். மாணவன் தலையில் இடி விழுந்தாலும் அஞ்ச வேண்டுவதில்லை; தன் மனத்தில் தாழ்ந்த எண்ணம் - கெட்ட எண்ணம் - தோன்றினால் அதற்கு நடுங்கவேண்டும். தாழ்ந்த எண்ணம் எது? எந்த எண்ணத்தை ஒருவன் தன் பெற்றோரிடமாவது, ஆசிரியரிடமாவது, நண்பர்களிடமாவது தெரிவிக்க விரும்பானோ அந்த எண்ணம் தாழ்ந்த எண்ணமே "தீய செயல் செய்வதன்றோ தவறும்? தீய எண்ணமும் தவறோ? அதனால் யாருக்கு என்ன கெடுதல் நேர்ந்துவிட்டது?" எனின், ஆசிரியர் திருவள்ளுவரே இவ்வினாக்களுக்கு விடை கூறுகின்றார் அவர்,

> உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
> கள்ளத்தால் கள்வேம் எனல்.

என்பர். ஆசிரியர் களவின்மேல் வைத்துக் கூறினாரேனும் எத்தீய செயலை உள்ளலும் தீதென்றே கொள்க.

"அற்றேல், உள்ளம் உள்ளுகின்றது. நான் என்ன செய்வேன்? நான் விரும்பாவிடினும் என் மனம் ஏதேதோ நினைக்கின்றது. அதனைத் தடுப்பது எங்ஙனம்?" எனின், இவ்வினாவுக்கு விடை கூறவே உலகில் பல்வேறு சமயங்கள் - மதங்கள் - தோன்றின. ஒருவன் எச்சமயத்தவன் ஆயினும் ஆகுக. அவன் அச்சமயத்தில் இவ்வினாவுக்கு விடைகண்டு, கண்டதனைச் செயலில்

காட்ட முயலானுயின், அவன் சைவனும் அல்லன்; வைணவனும் அல்லன்; கிறிஸ்தவனும் அல்லன்; மகம்மதியனும் அல்லன். அல்லன்! அல்லன்!! அவன் நல்லவன் அல்லன்!!!.

"அந்தோ! என் மனத்தில் எவ்வளவு கெட்ட எண்ணங்கள்! என் தலையை உடைக்கட்டுமா? தற்கொலை செய்து கொள் ளட்டுமா? என்று எண்ணுகின்றனர் சிலர். புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிப் பிறக்காமல் மனிதனாய்ப் பிறந்தது இப் போராட்டத்திற்கே. போராடு வெற்றி பெறுவாய். உயர்வு பெறுவாய்.

வைகறையில் சூரியன் உதிப்பதற்கு இரண்டு மணி நேரத் துக்குமுன் - எழுந்திரு. கடவுளை வணங்கு. பிரார்த்தனை செய். உன் பிரார்த்தனையில், "சர்வேசா! இன்று என்மனத்தில் கெட்ட எண்ணங்கள் தோன்றுவாறு காப்பாயாக" என்பதும் ஒன்றாக இருக்கட்டும். உன் கடமைகளை எல்லாம் சரியாகச் செய்து முடி. இடையில் கெட்ட நினைவு எழுந்தால், உடனே அதை விட்டுவிடு; விட்டுவிடுவதற்கு விரைவாக ஏதாவது வேலை செய். இரவு உறங்கு முன் மறுபடியும் வணங்கிப் பிரார்த்தனை செய். அப்போது, "ஆண்டவனே! இன்று என் மனத்தில் தோன்றிய சில கெட்ட எண்ணங்களுக்காக என்னை மன்னிப்பாயாக" என்று வேண்டிப் பின் உறங்கு.

சோம்பேறியின் மனம் பேயின் தொழிற்சாலை (Idle man's brain is the devil's workshop) என்னும் ஆங்கில முதுமொழி சோம்பலாய் இருந்தால் கெட்ட எண்ணங்கள் உண்டாம் என் பதைத் தெரிவிக்கின்றது. ஆதலின் நீ சிறிது நேரமும் சோம்ப லாய் இராதே. படி; எழுது; பாடு; விளையாடு; செடிக்குத் தண் ணீர் ஊற்று; வீட்டைப் பெருக்கு; உடற் பயிற்சி செய்; யாருக் காவது ஒரு சிறு உதவியாவது செய். சும்மா இராதே. விழித்து மறுபடி உறங்கும்வரை சோம்பலுக்கு இடங் கொடாதே.

அளவு மீறி உண்ணாதே. மீதூண் சோம்பலை வளர்க்கும் காபி, தேநீர், புகையிலையால் செய்த பொருள்கள் ஆகிய இவற்றைத் தொடாதே. இவை உன் உடலிலுள்ள இயற்கைச் சுறுசுறுப்பைக் கொள்ளை கொள்ளும்; கெட்ட எண்ணங்களையும் வருவிக்கும். இவை இயற்கைக்கு மாறுபட்ட உணவுகளாதலின் இயற்கைக்கு மாறுபட்ட எண்ணங்களை உண்டாக்கும். "ஆகார சுத்தி: சத்வ சுத்தி:" உணவுத் தூய்மையினால் மனந் தூய்மையாம். உன் மனந் தூய்மையானால் நீயே பாக்கியவான். மன வலிமை (will-power) அடையும் வழி இதுவே. நீ மன வலிமை பெற்றால் உனக்கு எண்ணிய காரியம் கைகூடும்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

மாணவர் கெட்ட எண்ணங்களைத் தடுத்தல் மட்டும் போதாது. தூய எண்ணங்களை வளர்க்கவும் வேண்டும். தூய எண்ணங்கள் செயலோடு கூடின் மிகச் சீக்கிரமாக வளரும். ஒருவன் "நான் சிறந்த புலவனாக ஆவேன்" என்று எண்ணலாம். அவன் தான் பயிலும் பல மொழிகளிலும் உள்ள நல்ல இலக்கியங்களைத் தேடிப் படிப்பதிலும், இலக்கண விதிகளை அறிவதிலும், சிறந்த கட்டுரைகளை எழுதுவதிலும் தினம் ஊக்கங்கொண்டு உழைப்பானாயின் அவன் கொண்ட நல்லெண்ணம் எவ்வளவு துரிதமாக வளரும்! ஒருவன், 'நான் சிறந்த ஒழுக்கமுள்ளவனாக விளங்குவேன்" என்று நினைக்கலாம். அவனே வைகறைத் துயிலெழுதல், காலையும் மாலையும் கடவுளைத் தொழுதல், நல்லவர்களோடு பழகுதல், நல்ல நூல்களைப் படித்தல், வீண் பேச்சுப் பேசாமை, காலந் தவறாமை (punctuality) முதலியவற்றில் ஒன்றையோ பலவற்றையோ பழகத்தொடங்கினால் அவன் எண்ணம் எவ்வளவு வலிமை பெறும்! ஒருவன் நன்றியறிதல் உடையவனாக இருக்க விரும்பலாம். அவன் தற்காலம் தனக்கு நன்மை செய்பவர்களாகிய தாய், தந்தை, ஆசிரியர் முதலியவர்களிடத்து அடக்கமும், அவர்கள் சொற்படி நடத்தலும் மேற்கொண்டு ஒழுகினால், "ஏவா மக்கள் மூவா மருந்து" என்பதை இப்போதே நிலை பெறச் செய்துவிடலா மன்றோ!

மரம் பழத்தினால் மதிக்கப் பெறுதல்போல மனிதன் செயலால் மதிக்கப் பெறுகின்றான். செயலோ அவன் எண்ணத்தைப் பொறுத்ததாகின்றது. பல முறை எண்ணிய எண்ணமே ஒருநாள் செயலாக மாறுகின்றது. ஆகவே, நல்லெண்ணமே ஒழுக்கத்துக்கும் உயர்வுக்கும் காரணமாகின்றது. உயர்வான எண்ணங்களை எண்ணுக. உயர்வான செயல்களைச் செய்க. உயர்க.

K. S. Santanakrishna Mudaliar.

"I was very much struck with the all round general tone of administration. Boys were cheerful, the food was quite satisfactory and the dicipline was sound."

கல்வி அறம்.

சிவசங்கர முதலியார்,
ருக்குமணி ஆச்ரமம், சேலம்.

மன்னார்குடி, கோட்டூர் அரங்கசாமி முதலியார் மாணவர் விடுதியின் தலைவர் (Warden) திரு. வெ. கோபாலசாமி முதலியார் அவர்களின் விருப்பத்துக்கிணங்க, இச்சிறு கட்டுரை இவ் வெள்ளி விழா மலரின் வாயிலாகத் தோன்றியுள்ளது.

"அறங்கள் எவற்றினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்பது பெரியோர் வாக்கு. இதிலிருந்தே கல்வியறத்தின் உயர்வும், அக்கல்வியினை அறியும் ஏழைக்கு அன்னமளித்தல் அறங்களில் மிகச் சிறந்தது என்பதும் இனிது விளங்கும்.

ஒரு உயர்ந்த வாழ்க்கை வரலாறு என்பது, புண்ணியத்தை மிகப்பெரும் எழுத்தில் எழுதும் வாழ்வே (The best biography the life which writes charity in the largest letters) யாகும். இவ்வில்லத்தை நிறுவிய, கோட்டூர் வள்ளல் அரங்கசாமி முதலியாரின் உயர்ந்த வரலாறு இதற்கு ஏற்றதாகும். ஏனெனில், செவியுணவு நாடும் ஏழை மாணவருக்கு அவியுணவூட்டும் இவ்வில்லம் அறநிலையங்களுள்ளே தனக்கு ஒப்பும் உயர்வும் இன்றி விளங்குகின்றது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பதினின்று கல்வி மக்கள் வாழ்விற்குக் கண் போன்றது என்பதும், "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு, மாடல்ல மற்றையவை" என்பதனுல் கல்வி ஒன்றே உலகில் அழியாச் செல்வம் என்பதும்; அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையும் நாட்டும் – உறுங்கவலொன், றுற்றுழியும் கை கொடுக்கும் கல்வியினூங்கில்லை, சிற்றுயிர்க்குற்ற துணை" என்பதனுல் கல்வியால் மக்கள் அடையும் பயன்கள் மிகச்சிறந்தன என்பதும் நன்கு விளங்குகின்றன. இவைகளைக் கருதியே கல்வியறம் செய்வது புண்ணியம் கோடி செய்வதற்கு ஒப்பாகும் என்று அறிஞர் கூறினர்போலும். இதனுலேயே, உலகில் இவ்வறத்திற்காக உயர்ந்த தியாகங்களும், கொடைகளும் அற நினைவுகொண்ட பெரியாரால் செய்யப்படுகின்றன.

மேல் நாட்டில் நோபெல் பரிசுகள்; ராக்பெல்லர் கொடைகள், இன்னும் அவைபோன்ற வேறு பல அறங்கள், நம் நாட்டில் காசி இந்து பல்கலைக்கழகம், சென்னை பச்சையப்பன் கல்லூரி,

சீர்காழி சபாநாயக முதலியார் பள்ளி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கோட்டூர் அரங்கசாமி முதலியார் மாணவர் விடுதி, இன் னும் கோவை, சைவமணி B. V. முதலியாரின் பெருங்கொடை, மாமண்டூர் தியாகமணி, சூணாம்பேட்டைச் சமீன்தார் மூலம் செய்துள்ள கொடை முதலிய இவைகளை அறியாதார் எவரும் இருக்கமுடியாது. கல்வியறம் கருதியே இவைகளெல்லாம் எழுந் துள்ளன. இவைகள் மட்டும் இவ்வளவு பெரிய நமது நாட்டுக்குப் போதா. இன்னும் பெருகவேண்டும். அவ்வாறு பெருகத் தொண்டு செய்தால்தான் நாடு சிறந்தோங்கும். எனவே அப்படிப் பட்ட காலத்தை நாம் விரைவில் பார்ப்போமாக.

"கல்வி கரையில, கற்பவர் நாள்சில
மெல்ல நினைப்பிற் பிணிபல"

என்பதை ஆராயுங்கால் குறைந்த வாழ்நாளில், நிறைந்த கல்வியை விரைந்து கற்கவேண்டும் என்பது புலனாகின்றது. இந்தக் கல்வி எல்லாருக்கும் பயன்படும் வகையில் தற்போதைய கல்வி முறை களையே மாற்றி அமைத்தல் வேண்டும், இன்னும் கல்வி யறிவு பெருகுவதற்கான எல்லா முயற்சிகளும் செய்யப்படுதல் வேண் டும். தற்போதைய கல்வி முறைகளின் சீர்கேட்டை ஒழித்துப் புதிய, பயனுடைய முறைகளை ஏற்படுத்தக் கிளர்ச்சி வேண்டும். ஆங்காங்கே இதற்கென இயக்கங்கள் தோன்றவேண்டும்.

மேலும், இதுபோன்ற கொண்டாட்டங்களில் நடக்கும் சொற்பொழிவுகளிலும், வெளிவரும் மலர்களிலும் அறிஞர்கள் இக்கருத்துக்களை விடாது வெளிப்பரப்புதல் வேண்டும். படித்த வர்கள், பட்டதாரிகள், பேச்சாளிகள் இவர்களெல்லாம் கிராமங் களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கெல்லாம் கல்வியை இல வசமாகத் தருதல் வேண்டும். இவ்வறத்துக்கெனப் பள்ளிகளும் பல்கலைக்கழகங்களும், இம் மாணவரில்லம் போன்ற பல விடுதி களும் நாட்டின் பல பகுதிகளிலும் தோன்றவேண்டும். அவ்வாறு தோற்றுவிக்க நாட்டின் செல்வர் பலரும் அத் தொண்டுகளில் முனைந்து ஈடுபடவேண்டும். இவைகள் எல்லாம் செம்மையாக நடைபெற்றுக் கல்வி யறம் தழைத்துப் பெருகினால் பேதைமை என்னும் இருள் நம் நாட்டில் இருக்கமுடியுமா? ஞான சூரியன் அல்லவா நாடு முழுதும் நல்லொளி வீசி நிற்கும்? எனவே, இந்த இல்லம் போல எத்தனையோ இல்லங்கள் தோன்றி, இடை விடாது முயன்று தொண்டாற்றக் கல்வியறம் உலகில் பெருகுவ தாக. இவ்வில்லம் நாளடைவில் ஒரு பெரும் பல்கலைக்கழகமாகிப் பல துறைகளிலும் பாடுபட்டுச் சிறக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

மாணவர் இல்லத்தின் மாண்பு.

S. கிருஷ்ணவேணி அம்மாள்
ப்ரதம தமிழ்பண்டிதை,
லேடி வில்லிங்டன் ட்ரெயினிங் காலேஜ், சென்னை.

திருவாளர் அரங்கசாமி முதலியார் நிறுவிய மாணவர் இல்லத்தின் வெள்ளி விழா இவ்வாண்டில் நடைபெற இருத்தலை அறிய யான் பெரிதும் மனம் மகிழ்கின்றேன். ஏழை மாணவர் நலத்தைக்கருதி இத்தகைய இல்லங்கள் பல ஆங்காங்கு நிறுவப்படல் இன்றியமையாததாகும்.

அரசாங்கத்தைச் சார்ந்த சென்னை மாணவிகள் நிலையத்தில் யான் பதினெட்டு ஆண்டுகள் தொழில் புரிந்த அனுபவத்தினால் சிலவற்றை இங்கு வரையப் புகுகின்றேன்.

மாணவர்கள் கல்வி கற்கும் கலாசாலைக்கும், அவர்கள் உண்டு உறங்கி. விளையாடி வாழும் இல்லத்திற்கும் மிக்க வேறுபாடு உண்டு. கலாசாலை. அவர்கள் நூலறிவை மட்டும் நாளுக்கு நாள் உயர்த்திக்கொண்டே செல்லும். மாணவர் இல்லமோ, அவர்கள் அறிவைப் பொது விஷயங்கள் பலவற்றிலும் பண்படுத்தி, அவர்கள் வாழ்க்கையைச் சீர்மைப்படுத்தற்கு ஒரு கூரிய கருவியாகத் திகழும்!

உலகில் வழக்க ஒழுக்கங்களில் வேறுபட்ட மக்கள் அநேகர் ஒன்று சேர்ந்து உறையும் பொது இடங்கள் பல உண்டு. அவற்றுள் கல்விகற்கும் மாணவர் குழுமி வாழும் இல்லமும் ஒன்று. இதை இனி நிலையம் என்றே அழைப்போம். இஃதொரு சிறு உலகம். பெரிய உலகில் நடைபெறும் வேறுபட்ட செயல்கள் யாவையும் இவண் காணலாம். இஃது உலகறிவைத் தெளித்தூட்டற்கு, பெரிய உருவைச் சிறு வடிவில் வடித்துக்காட்டும், ஓர் ஆடி எனல் மிகையாகாது. இச்சிறு உலகின் வாயிலாக, மாணவரும். இப்பொறுப்பைத் தாங்கி நடாத்தும் தலைவரும் கற்பன பலப்பல.

கல்வி கற்கும் மாணவருக்கு, பொருள்நிலை குறைந்த குடும்பங்களில் நேரும் பொருள் முட்டுப்பாடு, நேரம் தவறிய உணவு, சிறு குழவிகளின் தொல்லை, வீட்டு வேலைகளின் சுமை முதலியன நிலையத்தில் உண்டாதல் இல்லை. அஃதன்றியும் வயதிலும், கல்வியிலும் தன்னொத்த மகாரோடு கூடிக்குலாவல், தத்தம் பருவத்திற்கேற்ற விளையாட்டுகளில் போதுபோக்கல், வேடிக்கை வார்த்தைகளில் குதூகலித்தல் ஆகிய இன்பங்கள் பல அவர்களுக்கு ஏற்படுகின்றன.

இவண் வதியும் சிறுவர் தமக்கு அமைந்திருக்கும் இத்தகைய இன்ப வாழ்வை உண்மைக்கண் கொண்டு காண்பாரேல், அதன் அருமை அவர்களுக்குப் புலனுகாமலிராது. அங்குச் சிற்சில துன்பங்கள் இருப்பினும், இரண்டையும் ஒப்ப நோக்குங்கால் இன்பமே தலைதூக்கி நிற்கும். இந்நிலையக் கூட்டுறவினுல் பிற்கால வாழ்க்கையில் தாம் அடையப்போகும் நலங்களை ஊன்றி நோக்குவரேல், அச்சிறு துன்பமும் அம்மாணவருக்கு இன்பமாகவே தோன்றும். அச்சிறுர் தம் கூர்ந்த மதிகொண்டு சோம்பல். விழிப்பின்மைகளை ஒழித்து விடுவரேல், பெரும்பான்மையும் அத்துன்பங்களிலிருந்து அவர்கள் விடுபடலாம். ஆனுல் சிறுவர்க்கு நிலையத்தில் உள்ளவரை அதன் அருமை பெருமைகள் மனத்திற்படுதல் இல்லை. நிலையத்தை விட்டுச்சென்ற பின்பே, அவை விளக்கமுறும். வெய்யிலில் சென்றுலன்றே நிழலின் அருமை அறிதல்! அங்ஙனம் உணர்ந்தவர் பலர் என்பதை யான் நன்கறிவேன். இஃது உலகியற்கை.

இத்தகைய நிலையம் கல்விக்கழகம், அறிவகம், ஒழுக்க உறையுள், குருகுல வாசம் எனப் பல பெயர்களைத் தாங்குதற்கு ஏற்புடையதே!

கல்விக்கழகம்:- இதற்கு அறியாமையைக் கல்வி எறியும் இடம் எனப்பொருள் கூறலாம். பல கல்வியாளர் சேர்ந்து பொருள்களாய்ந்துணரும் இடத்திற்குத் தானே கழகம் எனக் கூறுவது! நியைத்திற்கன்றி, கல்வி கற்கும் இரண்டொரு குழந்தைகளே உள்ள தனி வீட்டிற்கு இப்பெயர் பொருந்துமா? நிலைய மாணவர் தம் பாடங்களைத் தம் வகுப்பு மாணவர் சிலரோடு கலந்து கற்குங்கால் ஏற்படும் தெளிவும், இன்பமும் அளவிடற்பாலனவல்ல என்பதை அம்மாணவரே உணர்வர் என்பது திண்ணம். இதற்குக் கல்விக்கழகமாகிய நிலையம் தவிர வேறு இடம் பயனளிக்குமா?

அறிவகம்:- நிலைய மாணவர் கேவலம் நூலறிவோடுமட்டும் நிற்பவரல்லர். இச்சிறு உலகில் வதியும், குலத்திலும். குணத்திலும், இடத்திலும், செயலிலும். கல்வியிலும் வேறுபட்ட மற்ற மாணவரின் இயல்புகளும், இவண்வரும் பெற்றேர் மற்றேர்களின் வார்த்தைகளும், முறைகளும் அவர் தம் மனத்தில் நன்கு பதிகின்றன. இவற்றுல் அவர்கள் பெறும் உலக அறிவு வரையறுக்கற்பாலதோ! இவ்வுலக அறிவன்றே யாவற்றிலும் தலை சிறந்தது. இதனுல் மாணவர் சிறந்த அறிவணியைப் பூணுகின்றனர். இஃதே உண்மை அறிவாகும். இம்முறையில் இதை அறிவகம் எனக் கூறத் தடையாது?

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும் கல்லா ரறிவிலா தார்" என்னும் பொய்யா மொழியை நோக்குக.

ஒழுக்க உறையுள்:- ஒழுக்கத்தின் உருவமே நிலையம் என இயம்பல் மிகையன்று. நம் வாழ்க்கையைக் காலந்தவறாது ஒழுங்கு முறையில் நடத்துதலைத் தானே ஒழுக்கம் எனப் பகருகிறோம். நிலயத்தில் உண்ணல், உறங்கல் எழுதல், தொழிலியற்றல், படித்தல் யாவும் காலம் தவறாமல் நடைபெறல் இன்றியமையாமையன்றோ? பெரியாரை எதிர்த்துப்பேசல் மற்றவரோடு வீண் வார்த்தையாடல், பொய்யுரைத்தல், கண்டவற்றிற்குக் காசிறைத்தல், கடன் வாங்குதல், வரம்பின்றி நடத்தல் முதலிய திருவிளையாடல்கள் இங்கு நடைபெற இயலுமா? இங்ஙனம் இளமையிலேயே பழகிய பழக்கம் வாழ்க்கையில் அவர்களை ஒழுங்கு முறையில் நிறுத்துமன்றோ! "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்பதை மறுப்பவர் யாவர்? இத்துணை நலமளிக்கும் இடந்தானே சான்றோர் மதிக்கும் ஒழுக்க உறையுளாகத் திகழ்வது!

> "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்."

